பக்கங்கள் – 16+8
விலை – ரூபா 60

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 172

ஞாயிற்றுக்கிழமை
18 மே 2025

வைகாசி 04 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

## மின்கட்டணம் 18.3 வீதம் எகிறும்?

கொழும்பு, மே 18
செலவுகளைப் பூர்த்தி செய்வதற்காக மின்கட்டணத்தை 18.3 சதவீதம் அதிகரிக்க வேண்டும் என 15



# இன்று மே 18
# இனவழிப்பு நினைவேந்தல்

### உறவுகளை அஞ்சலிக்க முள்ளிவாய்க்கால் தயார்
### இதர பகுதிகளிலும் ஏற்பாடுகள் நிறைவு

**முல்லைத்தீவு, மே 18**

**இன்று முள்ளிவாய்க்கால் இனவழிப்பு நினைவேந்தல் நாள். இறுதிப்போரில் உயிரிழந்த தமது உறவுகளை நினைந்துருகுவோரின் கண்ணீருக்குள், நந்திக்கடலின் ஆர்ப்பரிப்பு அமைதியாகச் சங்கமிக்கும் நாள். யுத்தத்தில் வகைதொகையின்றிக்கொல்லப்பட்ட அப்பாவிமக்களின்நினைவுகளைக் கண்ணீரால் பூசிப்பதற்காக முள்ளிவாய்க்காலும், தமிழர் தாயகத்தின் இதர பகுதிகளும் முழுவீச்சில் தயாராகியுள்ளன.** 15

## வவுனியா, மன்னாரில் நேற்று மினிசூறாவளி

### வீடுகள், மரங்கள் சேதம் இயல்பு வாழ்வு பாதிப்பு

வவுனியா, மே 18
வவுனியா, மன்னாரில் நேற்றுக் காலை மினிசூறாவளி வீசியுள்ளது. இதனால் ஏற்பட்ட சேதங்கள் காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது.
மரங்கள் முறிந்து மின்வடங்களுக்கு மேல் வீழ்ந்தமையால், சில இடங்களில் மின்சாரம் தடைப்பட்டது. அத்துடன், வீடுகளின் கூரைகள் காற்றில் அடித்துச் செல்லப்பட்டதுடன், நடைபாதைக் கடை 15

### மழை காரணமாக
## செம்மணி அகழ்வு தற்காலிக நிறுத்தம்!

யாழ்ப்பாணம், மே 18
யாழ்ப்பாணம் - செம்மணி, சிந்துபாத்தி மயானத்தில் உள்ள மனிதப் புதைகுழியில் மேற்கொள்ளப்பட்டுவரும் அகழ்வுப் பணிகள் சீரற்ற காலநிலை காரணமாக தற்காலிகமாக நிறுத்தப்பட் 15

## இனப்படுகொலை செய்யப்பட்ட ஈழத் தமிழர்களுக்குப் பேரணி!

### வைகோ தெரிவிப்பு

சென்னை, மே 18
முள்ளிவாய்க்காலில் இடம்பெற்ற இறுதிப்போரில் கொத்துக்கொத்தாக படுகொலை செய்யப்பட்ட ஈழத் தமிழர்களுக்காக மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஏற்பாட்டில் இன்று பேரணி இடம் பெறவுள்ளது. 15



## இலங்கைக்கு பொறுப்புக்கூறல் மிக அவசியமே

பிரிட்டன் பிரதமர் வலியுறுத்து

விரிவு பக்:- 11

## சட்டவிரோத மணல் அகழ்வு; மடக்கிப் பிடித்தது பொலிஸ்

### கிளிநொச்சியில் சம்பவம்

கிளிநொச்சி, மே 18
கிளிநொச்சி, பரந்தன் - பூநகரி வீதியின், செருக்கன் பகுதியில் சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்டிருந்த சந்தேகநபர்கள் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். 15

## மோட்டார் சைக்கிள்களை திருடிய இளைஞர் கைது!

வவுனியா, மே 18
வவுனியாவில் பல்வேறு பகுதிகளில் ஐந்து மோட்டார்சைக்கிள்களைத் திருடிய இளைஞர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று வவுனியா மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவுப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். 15



முச்சந்தி முராளி

‘மே 18 எண்டாலே சூறாவளி, மழைவெள்ளம் எல்லாம் வாறதே வழமையாப் போட்டுது கண்டியளோ’

### இந்தியாவில் இருந்து
## சட்டவிரோதமாகத் தாயகம் திரும்பிய இலங்கையர்களுக்கு விளக்கமறியல்!

யாழ்ப்பாணம், மே 18
இந்தியாவில் இருந்து கடல் வழியாக, சட்டவிரோதமான முறையில் தாயகம் திரும்பிய இலங்கையர்களையும், அவர்களுக்கு உதவியோரையும் விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிவான் உத்தரவிட்டுள்ளார். 15

## காய்ச்சலால் மூதாட்டி சாவு!

யாழ்ப்பாணம், மே 18
தொடர்ச்சியான காய்ச்சலால் பாதிக்கப்பட்டிருந்த மூதாட்டியொருவர் சிகிச்சையின்போது நேற்று உயிரிழந்துள்ளார்.
கைதடி முதியோர் இல்லத்தில் வசித்துவந்த பரராஜாசிங்கம் லோகநாயகி (வயது-71) என்ற மூதாட்டியே இவ்வாறு உயிரிழந்தவரா 15

சஞ்சீவி



| கொவிசெத | |
|---|---|
| திகதி | 17.05.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4074 |
| ஆங்கில எழுத்து | A |
| வெற்றி இலக்கங்கள் | 09 15 28 63 |
| விசேட எழுத்து | A |

| ஹந்தஹண ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 17.05.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1141 |
| வெற்றி இலக்கினம் | துலாம் |
| வெற்றி இலக்கங்கள் | 30 51 53 61 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 17.05.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0100 |
| ஆங்கில எழுத்து | Y |
| வெற்றி இலக்கங்கள் | 7 4 6 7 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 17.05.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2180 |
| ஆங்கில எழுத்து | Z |
| சுப்பர் இலக்கம் | 25 |
| வெற்றி இலக்கங்கள் | 18 66 70 73 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 17.05.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 5832 |
| ஆங்கில எழுத்து | C |
| வெற்றி இலக்கங்கள் | 0 9 1 4 3 5 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 17.05.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1862 |
| ஆங்கில எழுத்து | M |
| வெற்றி இலக்கங்கள் | 17 18 59 74 |
| விசேட எழுத்து | M |

| அத சம்பத | |
|---|---|
| திகதி | 17.05.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0407 |
| ஆங்கில எழுத்து | C |
| வெற்றி இலக்கங்கள் | 1 4 3 5 |

# நினைவேந்தல் நிகழ்வுகளை சட்டபூர்வமாக அங்கீகரிக்குக

## மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்து

கொழும்பு, மே 18

**இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கில் அமைதியான முறையில் நடைபெறும் நினைவேந்தல் நிகழ்வுகளை சட்டபூர்வ மற்றும் பாதுகாக்கப்படும் நடவடிக்கையாக அங்கீகரிக்கவேண்டும் என இலங்கை மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.**

இதுதொடர்பில் கண்காணிப்பகத்தின் பேச்சாளர் மற்றும் ஆராய்ச்சி மற்றும் கண்காணிப்புப் பிரிவின் இயக்குநரான நிஹால் சந்திர சிறி தெரிவிக்கையில்,

அமைதியான போராட்டங்களை நடத்துவது உட்பட அமைதியான நினைவேந்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுவோரைக் கைது செய்வதற்காக, 2007 ஆம் ஆண்டின் 56 ஆம் எண் கொண்ட சர்வதேச சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் சட்டத்தின் பிரிவு 3 ஐ தவறாகப் பயன்படுத்துவது குறித்து கவலைகொண்டுள்ளோம்.

குறிப்பாக 2009 ஆம் ஆண்டு ஆயுத மோதலின்போது இறந்த தமிழ்ப் பொதுமக்களை நினைவுகூரும் இந்த நினைவேந்தல்கள், தவறாக குற்றமாக்கப்பட்டுள்ளன. எனவே நினைவேந்தல்களை சட்டப்பூர்வ செயற்பாடாக அங்கீகரிக்க வலியுறுத்துகின்றோம்- என்றார். (ச-இ)

| சுபிரி தன சம்பத | | |
|---|---|---|
| திகதி | தினம் | வெற்றி வாரம் |
| 17.05.2025 | சனிக்கிழமை | 0540 |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | |
| T | 8 6 9 5 7 7 | |

| Super Ball | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 17.05.2025 | சனிக்கிழமை | |
| சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
| 2806 | X | 27 60 67 77 |

| சனிதா | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 17.05.2025 | சனிக்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| Q | 21 43 60 67 | 4967 |

| SASIRI | |
|---|---|
| திகதி | தினம் |
| 17.05.2025 | சனிக்கிழமை |
| வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் |
| 0684 | 38 43 47 |

| லக்ன ராசி | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 17.05.2025 | சனிக்கிழமை | |
| ரிஷபம் | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
| | 01 13 25 27 | 4518 |

| KAPRUKA | | | |
|---|---|---|---|
| திகதி | தினம் | | |
| 17.05.2025 | சனிக்கிழமை | | |
| ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| V | 29 | 01 10 50 68 | 1982 |

| அத கோடிபதி | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 17.05.2025 | சனிக்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| F | 05 15 16 23 | 2632 |



# கொட்டாஞ்சேனையில் துப்பாக்கிச்சூடு

கொழும்பு, மே 18

கொழும்பு - கொட்டாஞ்சேனை சுமித்ராராம மாவத்தையில் உள்ள வீடொன்றில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் இருவர் காயமடைந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் நடந்துள்ளது.

வீட்டுக்குள் பிரவேசித்த நபர் ஒருவர் இந்தத் துப்பாக்கிப்பிரயோகத்தை மேற்கொண்டுள்ளார் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

துப்பாக்கிச்சூட்டில் காயமடைந்த ஆணும், பெண்ணும் தேசிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச-இ)



# அரசாங்கத் தகவல் திணைக்கள பணிப்பாளர் உதயனுக்கு வருகை

யாழ்ப்பாணம், மே 18

அரசாங்கத் தகவல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஷர்ஷ பண்டார முதன்முதலாக உதயன் பணிமனைக்குத் தனது உத்தியோகபூர்வ விஜயத்தை நேற்று மேற்கொண்டிருந்தார்.

இதன்போது உதயன் குழுமத்தலைவர் மற்றும் பத்திரிகையின் ஆசிரியர் ஆகியோருடன் கலந்துரையாடினார்.

உதயன் உட்பட வடக்கு - கிழக்கில் ஊடகவியலாளர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள், வடக்கில் ஊடகத்துறை சார்ந்து அரச தகவல் திணைக்களத்தின் வகிபாகம் மற்றும் எதிர்கால நடவடிக்கைகள், ஊடகவியலாளர் வளத்திறன் மேம்பாட்டு நடவடிக்கைகள் ஆகியவை தொடர்பில் கலந்துரையாடப்பட்டன. (ச-125)

# தேர்தலில் இட ஒதுக்கீடு வழங்கப்படவேண்டும்!

## மாற்றுத்திறனாளிகள் கோரிக்கை

கொழும்பு, மே 18

சகல தேர்தல்களிலும் தமக்கு இடஒதுக்கீடு வழங்கப்படவேண்டும். இதற்கேற்றவாறு சட்டத்திருத்தம் மேற்கொள்ளப்படவேண்டுமென மாற்றுத்திறனாளிகள் அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளன.

அண்மையில் நாடாளுமன்ற நிலையியல் குழு உறுப்பினர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மாற்றுத்திறனாளிகள் பற்றிய விவரங்களை உள்ளடக்கியதாக இணையத்தளம் ஒன்று உருவாக்கப்படவேண்டும். இந்த இணையத்தளத்திலிருந்து மாற்றுத்திறனாளிகளான மாணவர்கள் தகவல்களைப் பெற்றுக்கொள்ள ஏற்பாடு செய்யப்படவேண்டுமெனவும் மாற்றுத்திறனாளிகள் அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளன. இதற்குப்பதிலளித்த நாடாளுமன்ற உறுப்பினர்கள், தற்போது கட்புல, செவிப்புல ஆசிரியர்களுக்குத் தட்டுப்பாடு நிலவுவதாகவும் பிரெய்லி ஆசிரியர்களுக்கான தட்டுப்பாட்டை நீக்க நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்துள்ளனர். (ச-25, 6)

# மாணவி உயிர்மாய்ப்பு விவகாரம் சாட்சியின்றி நடவடிக்கையில்லை

## சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை தெரிவிப்பு

கொழும்பு, மே 18

கொழும்பு - கொட்டாஞ்சேனை மாணவியின் மரணத்துடன் சம்பந்தப்படுத்தப்படும் தனியார் கற்கை நிலையத்தின் உரிமையாளருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முடியாது என சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் சட்ட அமுலாக்கல் பிரிவின் பணிப்பாளர் சஜீவனி அபேகோன் தெரிவித்துள்ளார். எந்தவொரு நபரும் அந்த வகுப்பு நிலையத்தின் உரிமையாளருடன் தொடர்புபடுத்தப்படும் சம்பவம் குறித்து நேரடியான சாட்சிகளை வழங்கவில்லை.

சிறுமியின் தாயாரது வாக்குமூலத்தை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு அவருக்கு எதிராக நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாது. குறித்த சம்பவம் தொடர்பாக தொடர்ச்சியான விசாரணைகள் இடம்பெறுகின்றன.

இதுதொடர்பாக குறித்த தனியார் வகுப்பைச் சேர்ந்த 20க்கும் மேற்பட்ட மாணவர்களின் வாக்குமூலங்கள் பதிவாகியுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)



# சுழிபுரம் பிரதேசப் பாடசாலைகளில் அதிபர், ஆசிரியர்கள் பற்றாக்குறை

## நடவடிக்கை எடுக்குமா கல்வித் திணைக்களம்?

**யாழ்ப்பாணம், மே 18**

**சுழிபுரம் பிரதேசத்திலுள்ள பாடசாலைகள் அதிபர், ஆசிரியர்கள் மற்றும் அலுவலர்களின்றி வளப்பற்றாக்குறையை எதிர்கொள்கின்றன. குறித்த பாடசாலைகளுக்கு உரிய நியமனங்களை கல்வித் திணைக்களம் வழங்கவேண்டும் என்று பிரதேசவாசிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த சில மாதங்களாக சுழிபுரம் ஐக்கிய சங்க சைவ வித்தியாசாலையில் அதிபர் இடமாற்றம்செய்யப்பட்ட நிலையில் இதுவரையில் அந்த வெற்றிடம் நிரப்பப்படவில்லை. அத்துடன் குறித்த பாடசாலையில் ஆங்கில பாடத்துக்கான ஆசிரியர் இன்றிய நிலை காணப்படுகின்றது.

இதனால் இந்தப் பாடசாலையில் கல்விகற்கும் சுழிபுரம் பெரியபுலம் வறுத்தோலை, காட்டுப்புலம், பாணாவெட்டை, தொல்புரம் உட்பட்ட பல பகுதிகளைச்சேர்ந்த மாணவர்கள் கல்வியில் பின்தங்கும் நிலையை எதிர்கொண்டுள்ளனர்.

கடந்த சங்கானைப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இது குறித்துக் கோரிக்கை விடுக்கப்பட்ட போதும் இன்னமும் நியமனங்கள் வழங்கப்படவில்லை.

அதேவேளை சுழிபுரம் பிரதேசத்தின் பிரதான 1 ஏபி பாடசாலையான சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரியின் உயிரியல் துறை பிரிவுக்கான பயோஸ்ட்ரீம் ஆசிரியரின்றி பாடசாலையில் மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர் . அத்துடன் கல்லூரியில் இரண்டு ஆய்வுகூடங்கள் காணப்படுகின்ற பொழுதிலும் உயிரியல் பிரிவுக்கான ஆசிரியர் பற்றாக்குறை காணப்படுகின்றது. இதேவேளை குறித்த பாடசாலையின் நூலகத்துக்கான நூலகர் பதவி வெறிதாகக் காணப்படும் நிலையில் நூலகமும் மூடப்பட்டுள்ளது. எனவே சுழிபுரம் பிரதேசத்தின் கல்வி பின்னோக்கிச் செல்வதைத் தடுத்து பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் உடன் நடவடிக்கை எடுத்து நியமனங்களை வழங்கவேண்டும் - என்றனர்.

(ச-125)

# கனியமணல் அகழ்வுக்கு மன்னார் மக்கள் எதிர்ப்பு

மன்னார், மே,18

மன்னாரில் கரையோரப் பகுதிகளில் கனியமணல் அகழ்வுக்கு மக்கள் தொடர்ந்து எதிர்ப்புத் தெரிவித்து வரும் நிலையில் மன்னார் தீவுப் பகுதியில் கனியமணல் அகழ்வு முன்னெடுப்பது தொடர்பாக ஆராயும் கலந்துரையாடல் மன்னார் மாவட்ட கடற்றொழில் உதவிப் பணிப்பாளர் ரமேஷ் கன்னா தலைமையில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை காலை சௌத்பார் மன்னார் பகுதியில் இடம்பெற்றது. கலந்துரையாடலில் கனியமணல் அகழ்வை முன்னெடுக்கும் நிறுவனத்தின் பிரதிநிதிகள், அந்தப் பிரதேசத்திலுள்ள மீனவ அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அப்பகுதி மக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதன்போது பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள், எமது பிரதேசத்தில் கனியமணலகழ்வு இடம்பெற்றால் இங்கே வாழமுடியாத நிலையேற்படும். எனவே இந்தப் பகுதியில் கனியமணல் அகழ்வுக்கு நாங்கள் எதிர்ப்பை தெரிவிக்கின்றோம் என்றனர். குறித்த கூட்டத்தில் கலந்துகொண்ட பலர் கனியமணல் அகழ்வுக்கு எதிர்ப்புத் தெரிவித்தநிலையில் குறித்த கூட்டம் தீர்மானம் இன்றி நிறைவடைந்தது.

(ச-22,56)

தமிழரசுக்கட்சி அராலித் தொகுதிக்கிளையின் ஏற்பாட்டில், வலிகாமம் மேற்குப் பிரதேசசபை உறுப்பினர் சபேசனின் தலைமையில் முள்ளிவாய்க்கல் கஞ்சி வழங்கும் நிகழ்வு அராலியில் நேற்றுச்சனிக்கிழமை இடம்பெற்றது.

(ச-25)



# இனப்படுகொலை நினைவேந்தல்!

யாழ்ப்பாணம், மே 18

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தை முன்னிட்டு இனப்படுகொலை நிகழ்ந்த இடங்களில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியால் அஞ்சலி நிகழ்வுகள் நடத்தப்பட்டுவருகின்றன.

நேற்று சனிக்கிழமை நவாலியில் அமைந்துள்ள சென். பீற்றர்ஸ் தேவாலயத்தில் கொட்டும் மழைக்கும் மத்தியிலும் ஈகைச்சுடர் ஏற்றி, மலர்தூவி உணர்வுரீதியாக அஞ்சலி நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

நிகழ்வில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியினருடன் உயிரிழந்தவர்களின் உறவினர்களும் கலந்து கொண்டனர்.

(ச-41-27)

# பஜனை



யாழ்ப்பாணம், மே 18

யாழ்ப்பாணம்பொன்னாலைஸ்ரீ வரதராயப் பெருமாள் தேவஸ்தானத்தானத்தில் அகண்ட நாம பஜனை இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணி தொடக்கம் மாலை வரை ஆலய முன்மண்டபத்தில் இடம் பெறவுள்ளது. தொடர்ந்து மகேஸ்வரப் பூஜையும் இடம்பெறுமென ஆலய தேவஸ்தானசபையினர் தெரிவித்துள்ளனர்.

(ச-41-63)

# மலையக மக்களின் இறைமையை அரசாங்கம் பாதுகாக்கவேண்டும்

## இந்திய அரசியல் ஆலோசகர் வலியுறுத்து

யாழ்ப்பாணம், மே 18

இலங்கையின் மலையகத்தில் வாழும் தமிழ் மக்களுக்குக் காணி உரிமங்கள் வழங்கப்பட்டு அவர்களும் இந்த நாட்டின் இறைமைமிக்க மக்களாக வாழ்வதற்கு அநுர அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்தியாவின் காந்திய சமதர்ம இயக்கத்தின் அரசியல் ஆலோசகர் சட்டத்தரணி சிவ ஞானசம்பந்தம் தெரிவித்துள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் சந்திப்பு ஒன்றை ஏற்பாடு செய்து கருத்துத்தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மலையக மக்கள் இலங்கையின் பொருளாதாரத்தை நிர்ணயிக்கும் பெரும் சக்தியாக இருக்கின்றபோதும், அவர்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்றும்வகையில் அரசுகள் எதனையும் செய்வதில்லை. இந்த நிலையை அரசு மாற்றியமைக்கவேண்டும்.



மலையக மக்களுக்கு அரசினால் இலவச வீடுகள் கட்டிக்கொடுக்கப்படுகின்றன.

ஆனால் அந்த வீடுகளுக்கான காணி உரிமங்கள் அவர்களுக்குச் சொந்தமானதாக இல்லை. இருப்பிடங்களுக்கான தனியான முகவரிகள்கூட பலருக்கு இல்லை. அதுமட்டுமல்லாது வறுமையின் காரணமாக கல்வியைக்கூட இடைநடுவில் கைவிடும் நிலையில் வாழ்கின்றனர். இத்தகைய பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்கப்படவேண்டியது அவசியம் - என்றார்.

(ச-25,20, 125,27)



# தமிழ்த்தேசியப் பேரவையால் முள்ளிவாய்க்கால் கஞ்சி

யாழ்ப்பாணம், மே 18

தமிழ்த்தேசியப் பேரவையின் ஏற்பாட்டில், முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தை முன்னிட்டு கஞ்சி வழங்கல் நிகழ்வு, யாழ்.ஏ-9 பிரதான வீதி மடத்தடி சந்தியில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இதன்போது இறுதிக்கட்டப் போரில் முள்ளிவாய்க்காலில் உயிர்நீத்த உறவுகளுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டு தொடர்ந்து பொது மக்களுக்கு முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்பட்டது.

(ச-22)

# இலங்கையில் இனப்படுகொலை பிரான்ஸ் அரசு ஏற்கவேண்டும்!

## விக்னேஸ்வரன் கோரிக்கை

**கொழும்பு, மே 18**

**ஆர்மேனியாவிலும், ருவண்டாவிலும் இனப்படுகொலைகள் இடம்பெற்றன என்பதை பிரான்ஸ் அரசாங்கம் ஏற்றுக்கொண்டதைப்போன்று இலங்கையிலும் தமிழினப் படுகொலை இடம்பெற்றது என்பதை ஏற்றுக்கொள்ளவேண்டும் என அந்த நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு தமிழ் மக்கள் கூட்டணியின் பொதுச்செயலாளரும், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான சி.வி.விக்கினேஸ்வரன் தெரிவித்துள்ளார்.**

பிரான்ஸ் நாடாளுமன்றத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற தமிழர்களுக்கான பிரான்ஸ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கூட்டத்தில் சி.வி. விக்னேஸ்வரனின் காணொலி வடிவ உரை ஒளிபரப்பப்பட்டது. அந்த உரையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடமாகாண முதலமைச்சர் என்ற ரீதியில் என்னால் முன்மொழியப்பட்ட 'தமிழின அழிப்பு தீர்மானம்' கடந்த 2015 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதி வடமாகாணசபையில் பெரும்பான்மை வாக்குகளுடன் நிறைவேற்றப்பட்டது.

அத்தீர்மானத்தின் ஊடாக இலங்கை அரசாங்கங்களினால் தமிழ் மக்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட இன வழிப்புத் தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையினால் விசாரணை முன்னெடுக்கப்படவேண்டும் எனவும், உள்ளக ரீதியில் ஸ்தாபிக்கப்பட்ட உண்மையை அறியும் ஆணைக்குழுக்கள்மீது தமிழ் மக்கள் நம்பிக்கை இழந்திருப்பதனால் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தை நாடுவதற்கான வழிகாட்டல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டது.

பிரான்ஸில் 47 மாநகரசபைகள் இலங்கையில் தமிழினப்படுகொலை இடம்பெற்றது என்பதை ஏற்றுக் கொள்ளும்வகையில் தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளன.

அதனையொத்த தீர்மானங்கள் இந்தியாவின் தமிழக அரசாங்கத்தினாலும், கனேடிய நாடாளுமன்றத்தினாலும் நிறைவேற்றப்பட்டுள்ளன.

அதற்கமைய ஆர்மேனியாவிலும், ருவண்டாவிலும் இனப்படுகொலைகள் இடம்பெற்றன என்பதை பிரான்ஸ் அரசாங்கம் ஏற்றுக்கொண்டதைப் போன்று, இலங்கையிலும் தமிழினப் படுகொலை இடம்பெற்றது என்பதை ஏற்றுக்கொள்ளவேண்டும்.

அத்தோடு ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையின் 5 நிரந்தர உறுப்புநாடுகளில் ஒன்றான பிரான்ஸ், இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்த ஆதரவளிக்கவேண்டும்- என்றார். (ச-இ)



## மின்னல் தாக்கி உயிரிழந்தவரின் குடும்பத்துக்கு நட்டஈடு

யாழ்ப்பாணம், மே 18

ஏழாலை மத்தி பகுதியில் கடந்த 8 ஆம் திகதி மின்னல் அனர்த்தத்தினால் உயிரிழந்த ஏழாலை கிழக்கைச் சேர்ந்த இளம் விவசாயியான குணரத்தினம் குமரன் என்பவரது குடும்பத்துக்கு நட்டஈட்டு முற்கொடுப்பனவாக 50 ஆயிரம் ரூபா அவரின் குடும்பத்தினரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

தேசிய அனர்த்த நிவாரணசேவைகள் நிலையத்தின் நிதியொதுக்கீட்டின்கீழ் உடுவில் பிரதேச செயலாளரின் பணிப்புக்கமைவாக இந்த நஷ்டஈடு வழங்கப்பட்டுள்ளது. (ச-25, 66)




## யாழ்.போதனாவின் பிரதம கணக்காளருக்கு பதவியுயர்வுடன் இடமாற்றம்

யாழ்ப்பாணம், மே 18

கடந்த ஐந்து வருடங்களாக யாழ். போதனா மருத்துவமனையில் பிரதம கணக்காளராகக் கடமையாற்றி வந்த சிவரஞ்சன் பதவியுயர்வுடன் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

அவர் பதவியுயர்வுபெற்று அநுராதபுர மாவட்டச் செயலக பிரதம கணக்காளராக நியமனம் பெற்றுச்செல்வதாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் தங்கமுத்து சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

இவருக்கான பிரிவுபசார விழா யாழ்.போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி த.சத்தியமூர்த்தி தலைமையில் மருத்துவமனையில் அண்மையில் இடம்பெற்றது. (ச-25,66)

## நூல் அறிமுகம்

பளை, மே 18

பளையூர் வேல் லவனின் 'கேயொஸ் தியரி' எனும் கவிதை நூல் அறிமுக நிகழ்வு பிரதேச செயலக மண்டபத்தில் எதிர்வரும் 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப. 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலர் இ.த.ஜெயசீலன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் முதன்மை விருந்தினராக கிளிநொச்சி மாவட்டப் பதில் செயலர் சு.முரளிதரன், சிறப்பு விருந்தினர்களாக கரைச்சிப் பிரதேச செயலர் த. முகுந்தன் பச்சிலைப்பள்ளிப் பிரதேசசபை செயலாளர் திருமதி தர்சினி தயானந்தன் ஆகியோர் கலந்துகொள்வர். (ச-25,9)





தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில், முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தை முன்னிட்டு தியாக தீபம் திலீபனின் நினைவிடத்துக்கு அருகாமையில் இரத்த தான முகாம் நேற்றுச் சனிக்கிழமை முன்னெடுக்கப்பட்டது. (ச-25, 27)



நீர்வேலி கந்தசுவாமி கோவிலின் வைரவர் உற்சவம் கடந்த வெள்ளிக்கிழமை பொங்கல்மடை பரவி பக்தி பூர்வமாக இடம்பெற்றது. (ச-25, 17)



## மரக்கறிகளின் விலை ரூ.500ஐ எட்டியது

யாழ்ப்பாணம், மே 18

சீரற்ற காலநிலையால் மரக்கறிவகைகளின் விலைகள் மேலும் உயர்வடையும் என்று மரக்கறிச் செய்கையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கடுமையான வறட்சி மற்றும் இடையிடையே பெய்யும் கடும் மழை போன்ற காரணங்களால் பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

சந்தைக்கு மரக்கறிகள் கொண்டுவரப்படுவது குறைந்துள்ளமையால் அனைத்து மரக்கறிகளும் கிலோ 500 ரூபாவுக்கு மேல் விற்பனை செய்யப்படுகின்றன. இதனால் நுகர்வோர் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர். (ச-25, 17)

## சிறப்புக் கருத்துரை

யாழ்ப்பாணம், மே 18

யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறையின் தமிழியற் கழகத்தின் ஏற்பாட்டில், பேராசிரியர் இளையதம்பி பாலசுந்தரத்தின் சிறப்புக் கருத்துரை கலைப்பீடக் கருத்தரங்கு மண்டபத்தில், எதிர்வரும் 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

"புலம்பெயர்ந்த நாடுகளில் தமிழ்க்கல்வியின் நிலைப்பாடுஒரு நோக்கு" எனும் தொனிப்பொருளில் பேராசிரியர் கருத்துரை ஆற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-25)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

நாளொரு நல்வார்த்தை

வளர்ச்சிக்கான பாதை மெதுவானது, ஆனால் அழிவுக்கான பாதை விரைவானது.

– செனிக்கா –

# உயிருடன் எரியும் நினைவுகள்

இன்று மே 18. இந்தத் திகதிக்கு ஒரு தேசிய இனத்தின் இதயத்துடன் கலந்திருக்கும் கனமுணர்ச்சி உண்டு. இது நாட்காட்டியில் கடந்து போகக்கூடிய சாதாரணமானதொரு நாள் அல்ல. மாறாகத் தமிழர் வரலாற்றில் குருதியால் எழுதப்பட்ட பக்கமொன்றின் கதை. உலகம் கண்மூட, சிங்களப் பேரினவாதம் தாண்டவமாடிய, ஓர் இன அழிப்பின் கடைசிக்கட்டம் நிகழ்ந்தேறி இன்றுடன் 16 ஆண்டுகள் .

எங்கள் உயிருக்கு நிகரான உறவுகளின் அன்றைய வாழ்க்கையெல்லாம் ஒரு மண்வெட்டி, சில உரைப்பைகள், நான்கு தடிகள் அவ்வளவே. உண வில்லை, உறக்கமில்லை, இருந்ததெல்லாம் எங்கும் மரண ஓலம் மட்டுமே. பச்சிளம் குழந்தை முதல், தலைமுறைகள் கண்ட பாட்டி, பூட்டன் வரை கொத்துக்கொத்தாகச் செத்துமடிய அவர்களுக்கான இறுதிச்சடங்குகளைச் செய்வதற்குக்கூட எமக்கு அவகாசம் இருக்கவில்லை. ஒவ்வொரு உயிர்க்கூடுகளும் இன்னொரு உயிர்க்கூட்டைக் காப்பாற்றுவதற்காக நகர்ந்துகொண்டிருந்தன. முள்ளிவாய்க்காலில் எங்களின் இறுதிநாள்கள் ஒரு வெற்றியையோ அல்லது ஒரு தோல்வியையோ நோக்கி நகர்ந்தன என்று எவராவது கூறினால், அது அறியாமையின் வெளிப்பாடே.

அன்று நாங்கள் ஒரு பறவைக்கூட்டம். உயிர்ப் பிழைப்பைநோக்கிய பறவைகளாகவே அங்கும் இங்குமாக அங்கலாய்த்துத் திரிந்தோம். உயிர் வாழ்வதற்கான சிறு வாய்ப்பொன்று எமக்கு அமைந்து விடாதா என்பதுதான் அன்றைய நாள்களில் எங்களின் ஒற்றைப் பேரவா. ஆனால், அந்த இனக்கூட்டம் உயிருடன் மீள்வதற்கான அத்தனை ஏதுநிலைகளும் சிங்களப் பேரினவாதத்தின் கொடும் கரங்களால் ஈவிரக்கமின்றி அழிக்கப்பட்டன. போரியல் முறைகளுக்குப் புறம்பாகவும், சர்வதேசத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட யுத்த நெறிமுறைகளுக்கு மாறாகவும் எம்மினம் குருதியால் தோய்க்கப்பட்டது முள்ளிவாய்க்காலில். சிறுதுண்டு நிலத்தில் பல்லாயிரம் தமிழர்களின் உயிர்கள் பகடையாக்கப்பட்டிருந்தன. காலை உரையாடியவன் மாலை பிணமாகிக் கிடந்தான். விருந்தோம்பலில் உலகுக்கு நெறிமுறை காட்டிய தமிழினம் உப்பில்லாக் கஞ்சியையே மூவேளை உணவாகக் கொண்டிருந்தது. பல நாள்களில் அதுவுமில்லை. உமிக்குள் அரிசி தேடிய அவலமும் அங்கேதான் நடந்தேறியது. இத்தனைக்கும் சர்வதேசமோ கைகட்டி - வாய்மூடி - மௌனியாகவே இருந்தது.

போர் முடிவுக்குவந்து 16 ஆண்டுகள் கடந்துவிட்டன. அன்று எங்களின் உயிர்க்கூடுகளில் எரிந்த தீயின் வெம்மை இன்று மேலும் கனன்று கொண்டிருக்கின்றதே அன்றி அது அணைந்தபாடில்லை. உடலில் ஏற்பட்ட காயங்களைவிடவும், மனதில் ஏற்பட்ட காயங்கள் கொடூரமானவை. அந்தக்காயங்களுக்கு இலங்கை அரசாங்கங்கள் எவையும் இயன்றளவும் மருந்திடவேயில்லை. காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளை இன்றும் தாய்மார்கள் தேடிக்கொண்டிருக்கின்றனர். இன்னும் பலர், தம் பிள்ளைகளைக் காணாமலேயே இறந்துவிட்டனர். இத்தகைய துன்பச் சிலுவைகளை இந்தத் தேசம் எங்குதான் இறக்கிவைக்கப் போகின்றது. தமிழர்கள் இறையில் மட்டுமல்ல, வினையிலும் தீராத நம்பிக்கை கொண்டவர்கள். இவ்விரண்டும் நின்று கொல்லும் தன்மையின.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com




# பொறுப்புக்கூறல் செயற்றிட்டம் தொடரவேண்டியது அவசியம்!

## மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்து

கொழும்பு, மே 18

**இலங்கை தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தினால் முன்னெடுக்கப்பட்டுவரும் 'பொறுப்புக்கூறல் செயற்றிட்டம்' எதிர்வரும் செப்ரெம்பர் மாதக் கூட்டத்தொடரில் மீளப் புதுப்பிக்கப்படவேண்டும். இசைப்பிரியா போன்ற பெண்கள் மற்றும் வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் தாய்மார் உள்ளடங்கலாக பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கான நீதியை நிலைநாட்டுவதற்கு அந்தச் செயற்றிட்டத்தை தொடரவேண்டியது மிக அவசியம் என மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்தியுள்ளது.**

இலங்கையின் மூன்று தசாப்தகால யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு இன்றுடன் 16 வருடங்கள் பூர்த்தியாகும் நிலையில், அதனை முன்னிட்டு வெளியிடப்பட்ட அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போரின் இறுதிவாரங்களில் அரச படையினரால் பிடிக்கப்பட்ட விடுதலைப்புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த பெண் போராளிகள் மற்றும் தமிழ்ப் பெண்கள் பாலியல் துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்கப்பட்டு, கொல்லப்பட்டனர்.

இருப்பினும் இலங்கையில் ஆட்சிப் பீடமேறிய அரசாங்கங்கள் சட்டவிரோதப் படுகொலைகள், சித்திரவதைகள் மற்றும் வலிந்து காணாமலாக்கப்படல்கள் உள்ளிட்ட மிக மோசமான மனித உரிமை மீறல்களிலும் ஈடுபட்ட பாதுகாப்புப் படையினரைப் பொறுப்புக்கூறச் செய்வதற்குத் தவறியிருக்கின்றன.

இந்தநிலையில் குற்றமிழைத்தோருக்கு எதிராக வழக்குத்தொடர்வதற்கும், பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதற்கும் வாய்ப்பளிக்கக்கூடிய ஆதாரங்களைத் திரட்டுகின்ற ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் அலுவலகத்தின் 'இலங்கை பொறுப்புக்கூறல் செயற்றிட்டம்' மாத்திரமே தற்போது எஞ்சியிருக்கின்ற ஒரேயொரு வழியாகும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



# உரமோசடி 11 பேர் கைது

கொழும்பு, மே 18

பொலநறுவையில் யூரியா உரம் எனக்கூறி அமோனியா உரத்தை விற்பனை செய்த விவசாய உள்ளீடுகள் விற்பனை நிலையமொன்றைப் பொலிஸார் முற்றுகையிட்டுள்ளனர்.

குறித்த விற்பனைநிலையத்தின் முகாமையாளர் உட்பட பதினொரு ஊழியர்கள் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

விற்பனைக்காக வைத்திருந்த 1565 மூடை உரமும் 13,585 வெற்று உரப்பைகளும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. (ச-6)

# பொலிஸ் அதிகாரி மீது விசாரணை



உள்ளூராட்சித் தேர்தல் தினத்தன்று கடமைக்கு சமுகமளிக்காமல் பெண் பொலிஸ் உத்தியோகத்தருடன் விடுதியில் தங்கியிருந்த பொலிஸ் அதிகாரிக்கு எதிரான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கேகாலை மாவட்டத்தில் பின்னவெலப் பிரதேசத்திலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. (ச-41-6)

# போராட்டம் செய்த 9 பேர் கைது

கொழும்பு, மே 18

சட்டவிரோதமானமுறையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர் எனத் தெரிவித்து அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியப் போஷகர் மதுஷன் சந்திரஜித் உட்பட ஒன்பது பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இணைந்த மருத்துவ சேவை பட்டதாரிகளினால் சுகாதார அமைச்சுக்கு முன்பாக ஏற்பாடுசெய்யப்பட்ட ஆர்ப்பாட்டத்தின்போதே இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இணைந்த மருத்துவசேவை வெற்றிடங்கள், போட்டிப்பரீட்சை மூலமே நிரப்பப்படும் என அரசாங்கம் அறிவித்துள்ளநிலையில் போட்டிப் பரீட்சை நடத்தக்கூடாது எனவும் பெறுபேறுகளின் திறமை அடிப்படையில் (மெரிட்) நியமனம் வழங்குமாறும் கோரி இணைந்த மருத்துவ சேவைப் பட்டதாரிகள் ஆர்ப்பாட்டம் செய்து வருகின்றனர். (ச- 25, 6)

# ஈஸ்டர் தாக்குதல்

# 12 சந்தேகநபர்கள் நீதிமன்றால் விடுதலை

ஈஸ்டர் ஞாயிறுத்தாக்குதல்களுடன் தொடர்புடைய பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு உதவியதாகச் சந்தேகிக்கப்பட்டு கைதுசெய்யப்பட்ட 10 பெண்கள் உட்பட 12 பேர் நேற்றுமுன்தினம் விடுதலைசெய்யப்பட்டுள்ளனர். கொழும்பு கூடுதல் மாஜிஸ்ட்ரேட் பசன் அமரசிங்க, பயங்கரவாத விசாரணைப்பிரிவு அவர்களுக்கு எதிரான விசாரணைகள் முடிவடைந்ததாக நீதிமன்றத்திற்கு அறிவித்ததையடுத்து, அவர்களை விடுவிக்க உத்தரவிடப்பட்டுள்ளது. (ச-இ)

**நாளை**

திங்கட்கிழமை- வைகாசி 05

19.05.2025

சுபநேரம் : 11.52- 01.52

ராகுகாலம் : 07.22 - 08.52



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும். புதிய முயற்சிகள் அனுகூலமாகமுடியும். மாலையில் குடும்பத்துடன் வீட்டில் தெய்வ வழிபாடு செய்வீர்கள். எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் நீங்கும்.

**இடபம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்கவேண்டிய நாள். பிள்ளைகளால் சிறுசிறு சங்கடங்கள் ஏற்படக்கூடும். மற்றவர்களுடன் அனுசரித்துச் செல்வது நல்லது. வீட்டில் பராமரிப்புச் செலவுகள் அதிகரிக்கும்.

**மிதுனம்:** மனதில் அவ்வப்போது இனம் தெரியாத சஞ்சலங்கள் ஏற்பட்டு நீங்கும். குடும்பம் தொடர்பான முக்கிய முடிவு எடுப்பதைக் கண்டிப்பாகத் தவிர்த்துவிடவும். தாயாரின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**கடகம்:** புதிய முயற்சிகளை பிற்பகலுக்குமேல் தொடங்குவது நல்லது. காரியங்களில் அனுகூலம் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். தந்தையின் தேவையைப் பூர்த்திசெய்வீர்கள். பிள்ளைகளால் ஏற்பட்ட பிரச்சினைகள் நீங்கும். நண்பர்களிடம் கேட்ட உதவி கிடைக்கும்.

**சிம்மம்:** எதிலும் வெற்றியே ஏற்படும் நாள். வாழ்க்கைத்துணையால் எதிர்பாராத பொருள் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. கணவன் மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த பிணக்குகள் நீங்கும். பிள்ளைகளின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள்.

**கன்னி:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். எதிர்பார்த்த காரியம் தாமதமானாலும் முடிந்துவிடும். கணவன் மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த பிணக்குகள் நீங்கும். தாயின் ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும். பிள்ளைகளால் பெருமை உண்டாகும்.

**துலாம்:** குடும்பம் தொடர்பான முக்கிய முடிவு எடுப்பதைத் தவிர்க்கவும். உறவினர்கள்மூலம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகும். அக்கம்பக்கத்தில் இருப்பவர்களுடன் அனுசரணையாக நடந்துகொள்வது நல்லது. கடன்கள் விஷயத்தில் கவனம்தேவை.

**விருச்சிகம்:** தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். புதிய முயற்சிகளில் சிந்தித்து ஈடுபடவும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் பொருள்சேர்க்கைக்கும் வாய்ப்பு உண்டு. நண்பர்களுக்காக செலவு செய்யவேண்டிவரும்.

**தனுசு:** மகிழ்ச்சிதரும் நாள். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வாழ்க்கைத்துணையின் ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும். உறவினர்கள்வழியில் மகிழ்ச்சியான செய்தி கிடைக்கும்.

**மகரம்:** உங்கள் உற்சாகம் மற்றவர்களையும் தொற்றிக்கொள்ளும். குடும்பத்தில் பெரியவர்களின் ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும். தாய்வழிஉறவினர்களால் செலவுகள் ஏற்படும். பிள்ளைகளின் பிடிவாதப் போக்குமாறும்.

**கும்பம்:** இன்று நினைத்த காரியத்தை முடிப்பதில் நேரமும் பணமும் விரயமாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். வாழ்க்கைத்துணை உங்கள் அறிவுரையை ஏற்றுக்கொள்வார். அவர்களின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள்.

**மீனம்:** நண்பர்கள்வகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியக்கூடும். தந்தையின் மூலம் ஆதாயம் கிடைக்கும். சகோதரர் கேட்கும் உதவியை மகிழ்ச்சியுடன் செய்து கொடுப்பீர்கள். சிலருக்கு எதிர்பாராத பணவரவும் பொருள் சேர்க்கையும் ஏற்படும்.



## தேசிய மட்டத்திலான விவாதப்போட்டிக்கு 12 பாடசாலைகள் தெரிவு

யாழ்ப்பாணம், மே 18

யாழ்.மாவட்டச் செயலகதிறன் விருத்திப் பயிற்சிநிலையத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற மாகாணமட்டத்திலான விவாதப்போட்டியில் தேசிய மட்டத்தில் பங்குபெறும் 12 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டன.

கைத்தொழில் அபிவிருத்திசபையின் மாகாணப் பணிப்பாளர் சி. சிவகெங்காதரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கைத்தொழில் அபிவிருத்திசபையின் மாவட்டப் பிரதிப் பணிப்பாளர், வடமாகாணக் கல்வி வலய உதவிப் பணிப்பாளர், வங்கி உத்தியோகத்தர், சிறந்த தொழில் முயற்சியாளர், தொழில் முயற்சியாளர்களுக்கு சேவை வழங்கும் உத்தியோகத்தர், கைத்தொழில் அபிவிருத்திசபையின் உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

கடந்த வருடம் மாவட்ட ரீதியான போட்டிகள் இடம்பெற்று அதில் சிறந்த பாடசாலைகள் மாகாணமட்டப் போட்டிக்குத் தெரிவுசெய்யப்பட்டன. மாகாணமட்டப் போட்டிக்கு யாழ்ப்பாணத்திலிருந்து 5 பாடசாலைகளும், கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து 2 பாடசாலைகளும், மன்னார் மாவட்டத்திலிருந்து 3 பாடசாலைகளும், வவுனியா மாவட்டத்திலிருந்து 2 பாடசாலைகளுமாக மொத்தமாக 12 பாடசாலைகள் தெரிவுசெய்யப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. (ச-41-66)

## வருடாந்த பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், மே 18

திருநெல்வேலி தெற்கு பரமேஸ்வராச்சந்தி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்தப் பொதுக்கூட்டம் பரிபாலனசபைத் தலைவர் பொ.கேசவராஜ் தலைமையில் ஆலய மண்டபத்தில் எதிர்வரும் ஜூன் மாதம் 1 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

பொதுச்சபை உறுப்பினர்கள், மஹோற்சவ உபயகாரர்கள் மற்றும் ஏனைய உபயகாரர்கள் அனைவரையும் தவறாது கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. பிரேரணைகள் ஏதும் இருப்பின் 27 ஆம் திகதிக்கு முன்னர் பரிபாலனசபைச் செயலாளரிடம் நேரடியாகவோ, தபால் மூலமாகவோ சமர்ப்பிக்கமுடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-25)

## கலைஞர்கள் மதிப்பளிப்பு

கிளிநொச்சி, மே 18

பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபையின் ஏற்பாட்டில், பிரதேசக் கலைஞர்கள் மற்றும் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்கள் மதிப்பளிப்பு நிகழ்வு பிரதேசசபைத் தலைமையலுவலக மண்டபத்தில் எதிர்வரும் 22 ஆம் திகதி வியாழக்கிழமை மு.ப. 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

சபையின் செயலாளர் திருமதி தர்சினி தயானந்தன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் அ.சோதிநாதன், சிறப்பு விருந்தினர்களாக பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலர் இ.த.ஜெயசீலன், கிளிநொச்சிப் பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளர் ப.சத்தியராகவன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ச-25, 9)

## நினைவேந்தலும் பிரார்த்தனையும்

கிளிநொச்சி, மே 18

இலங்கைத் தமிழரசுக்கட்சியின் கிளிநொச்சி மாவட்டக் கிளை நடத்தும் தமிழினப் படுகொலை நினைவேந்தலும் சர்வமதப் பிரார்த்தனையும் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 5மணியளவில் கிளிநொச்சிப் பூங்கா வளாகத்தில் நடைபெறவுள்ளது. நிகழ்வில் ஈழத்தமிழர்கள்மீது புரியப்பட்ட இன அழிப்புப்போரில் உயிரிழந்த உறவுகளை நினைவேந்தும்வகையில் அனைவரையும் இணையுமாறு நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (ச-41-66)

## குருதிக்கொடை

யாழ்ப்பாணம், மே 18

தற்போது யாழ்ப்பாணத்தில் ஏற்பட்டுள்ள அவசரக் குருதித் தட்டுப்பாட்டை நிவர்த்திசெய்யும்வகையில், வல்வை 1975 நட்புக்கள், வல்வெட்டித்துறைப் பிரதேச மருத்துவமனையின் நோயாளர் நலன்புரிச்சங்கம், வல்வெட்டித்துறை இரத்ததானச் சங்கம் ஆகியன இணைந்து நடத்தும் மாபெரும் குருதிக்கொடை முகாம் எதிர்வரும் 25ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30மணி முதல் வல்வெட்டித்துறை நெடியகாட்டில் அமைந்துள்ள கணபதி மஹால் திருமண மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

குருதிக்கொடை முகாமில் கலந்துகொண்டு குருதிக்கொடை வழங்கும் அனைவருக்கும் அன்பளிப்புகள் வழங்கப்படும்.

குருதிக்கொடை வழங்க ஆர்வமுள்ளவர்கள் 0779911131 எனும் தொலைபேசி இலக்கத்தின் ஊடாக முற்பதிவு செய்யுமாறு நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (ச-41-66)

## வேட்பாளர் மீது தாக்குதல்; சந்தேகநபருக்குப் பிணை

காரைநகரில் மான் சின்னத்தில் போட்டியிட்ட முதன்மை வேட்பாளரும் பிரதேசசபையின் முன்னாள் தவிசாளருமான க.பாலச்சந்திரன் பயணித்த வாகனத்தைத் தாக்கி சங்கிலி அறுத்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரைப் பிணையில் விடுவிக்க நீதிமன்று உத்தரவிட்டுள்ளது. அண்மையில் அவர் இரவுவேளை, வீதியில் பயணித்தபோது இருவரால் வழிமறிக்கப்பட்டு இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்டவர் ஊர்காவற்றுறைப் பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டுக்கமைய சந்தேகநபரொருவர்மீது வழக்குப் பதிவுசெய்து பொலிஸார் நீதிமன்றில் முற்படுத்திய போதே பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை சம்பவத்துடன் தொடர்புடைய மற்றுமொருவரைக் கைது செய்யப் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-125)



# செயற்பட்டு மகிழ்வோம்

யாழ்ப்பாணம், மே 18

தென்மராட்சிக் கல்வி வலயச் செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு நிகழ்வு யாழ்.சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை மைதானத்தில் நேற்றுமுன் தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. தென்மராட்சி வலயக் கல்விப் பணிப் பாளர் கி.கமலராஜன் முன்னிலையில் பிரதிக் கல்விப் பணிப்பாளர் மு.ஜெகதாசன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் முதல்வர் செந்தமிழ்ச் சொல்லருவி சந்திரமௌலீசன் லலீ சன் பிரதம விருந்தினராகவும், தொழிலதிபர் பூ.பாஸ்கரன் சிறப்பு விருந்தி னராகவும் கலந்துகொண்டனர். (ச-41-66-9)



இறுதிப்போரில் உயிரிழந்தவர்களின் நினைவேந்தலும் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கலும் தமிழரசுக்கட்சியின் இராமநாதபுரம் வட்டாரக் கிளையின் ஏற்பாட்டில் வட்டக்கச்சி பொதுச்சந்தை முன்பாகவும் ஆறுமுகம் வீதி சந்தி யிலும் இடம்பெற்றது. (ச-113)



தமிழர் தாயகம் எங்கும் முள்ளிவாய்க்கால் கஞ்சி பல பகுதிகளில் வழங்கப்பட்டநிலையில் கிளி நொச்சி தர்மபுரம் பகுதியில் தனியார் கல்விநிலை யம் ஒன்றின் ஏற்பாட்டில் முள்ளிவாய்க்கால் நினைவுக்கஞ்சி வழங்கப்பட்டது. (ச-113)



கிளிநொச்சி பூநகரிப் பிரதேசத்திற்கு உட்பட்ட முட்கொம்பன் பகுதியில் முள்ளிவாய்க்கால் நினைவு நிகழ்வும் முள்ளிவாய்க்கால் கஞ்சி பரி மாறும் நிகழ்வும் நேற்று முன்னெடுக்கப்பட்டன. இதில் பிரதேச மக்கள் பலர் கலந்துகொண்ட னர் . (ச-55)




# மென்பந்துத் துடுப்பாட்டம்; சதாசிவ மகாவித்தி. வெற்றி

அனலைதீவு, மே 18

தீவகக் கல்வி வலயப் பாடசா லைகளுக்கிடையிலான மென்பந்து துடுப்பாட்டப் போட்டியில் அனலைதீவு சதாசிவ மகாவித்தியாலயப் பெண்கள் அணி வெற்றிக் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

நேற்றுமுன்தினம் வெள்ளிக் கிழமை நடைபெற்ற இறுதிப் போட்டியில் தொடர்ச்சியாக பத்தாவது முறையாக குறித்த அணி சம்பியனாகி யுள்ளது. (ச-25, 9)



யாழ்ப்பாணம் பொது நூலகத்தின் நடமாடும் நூலகசேவை ஊரெழு கணேச வித்தியா சா லையில் கடந்த வெள்ளிக்கிழமை இடம் பெற்றது. (ச-25)

# 4 சபைகளை விட்டுத்தருமாறு சங்குக்கூட்டணி நிபந்தனை

## பரிசீலிப்பதாக சுமந்திரன் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், மே 18**

**வடக்கு மாகாணத்தில் 4 சபைகளில் தவிசாளர் பதவியை விட்டுக்கொடுத்தால் தமிழரசுக்கட்சிக்கு ஆதரவுவழங்கலாம் என ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் தரப்பில் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளதாக தமிழரசுக்கட்சியின் பதில் செயலர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.**

யாழ். வடமராட்சி ஊடக இல்லத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், எந்தெந்தச் சபைகளிலே எந்தக் கட்சிக்குக் கூடுதலான ஆசனங்கள் இருக்கின்றதோ அந்தச் சபைகளிலே அந்தக் கட்சி நிர்வாகத்தை அமைப்பதற்கான ஆதரவை மற்றைய கட்சிகள் வழங்கவேண்டும் என்பது எங்களது கோரிக்கை. அது பெரும்பாலும் சாதகமாக மற்றக் கட்சிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டு வருகின்றது. இரண்டு பிரதான முஸ்லிம் கட்சிகளுடனும் நாங்கள் இணக்கப்பாட்டுடன் இருக்கின்றோம்.

ஆனால் பொதுவான ஒரு நிலைப்பாட்டுக்கு இன்னமும் வரவில்லை. அதைப்போல ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியுடன் சந்திப்புகள் நடைபெற்றன.

இதன்போது பொது இணக்கப்பாட்டுடன் சேர்ந்து, ஜனநாயகத் தமிழ் தேசியக் கூட்டணியினர் இன்னொரு கோரிக்கையையும் முன்வைத்திருந்தனர். அதன்படி மிக அதிகமான சபைகளில் தமிழரசுக் கட்சி தான் ஆட்சி அமைக்கின்ற சூழ்நிலையில், நல்லெண்ணத்தின் அடிப்படையில் தமக்கு நான்கு சபைகளில் தவிசாளர் பதவியை விட்டுத் தருமாறு கேட்டுள்ளார்கள். மானிப்பாய், வலிகாமம் கிழக்கு, சாவகச்சேரிப் பிரதேசசபை மற்றும் மாந்தை மேற்குப் பிரதேச சபைகளில் இந்த விட்டுக்கொடுப்பை வழங்குமாறு கோரியுள்ளனர். இந்த விடயத்தில் எங்களுடைய கட்சியின் தீர்மானம் ஒன்று இருக்கின்ற காரணத்தால் அதற்கு விதிவிலக்காக நாங்கள் நடப்பதாக இருந்தால், திரும்பவும் கட்சித் தீர்மானம் ஒன்று எடுக்கவேண்டியிருக்கும் என்பதை நாங்கள் அவர்களுக்குத் தெரியப்படுத்தியுள்ளோம்.

அதுமட்டுமன்றி இந்த பொதுவான இணக்கப்பாட்டுக்கு மாறாகச் செயற்படுவதாக இருப்பின், அந்த தந்தப் பிரதேசத்தில் இருக்கின்ற எமது கட்சிச் செயற்பாட்டாளர்களுடனும் நாங்கள் கலந்துரையாடவேண்டும்.

ஆகையால் நாங்கள் ஆராய்ந்து பதில்கொடுப்பதாகச் சொல்லி இருக்கிறோம்- என்றார். (ச-100)

# ஜே.வி.பி.- தே.ம.ச. மோதிக்கொள்ளாது!

கொழும்பு, மே 18

ஜே.வி.பி.யினருக்கும், தேசிய மக்கள் சக்தியினருக்கும் இடையில் எவ்வித பிரச்சினையும் இல்லை. நாம் சிறப்பாகவே இணைந்து பயணித்துவருகின்றோம் என்று பொதுமக்கள் பாதுகாப்புப் பிரதி அமைச்சர் சுனில் வட்டகல தெரிவித்துள்ளார். கடந்த 6 மாதங்களுக்குள் தேசிய மக்கள் சக்தி மற்றும் ஜே.வி.பி.க்கிடையில் குழப்பம் ஏற்படும் எனப் பலர் கருதினர். அது தொடர்பில் கதைகளைப் பரப்பினார்கள்.

இன்றளவிலும் சமூகவலைத்தளங்களில் பதிவுகள் தொடர்கின்றன. எமது குழுவினர் புரிந்துணர்வுடன் சிறப்பாகச் செயற்பட்டுத் தமது பணிகளை முன்னெடுத்துவருகின்றனர் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-44)

# லக்ஸ்மன் யாப்பா மீது பணமோசடி வழக்கு!



கொழும்பு, மே 18

முன்னாள் அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன உள்ளிட்ட இருவர் மீது இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு வழக்குத் தொடர நடவடிக்கை எடுத்துள்ளது.

அதன்படி, முதலீட்டு ஊக்குவிப்பு முன்னாள் அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன மற்றும் இலங்கை முதலீட்டுச் சபையின் முன்னாள் பணிப்பாளர் நாயகம் ஜயந்த எதிரிசிங்க ஆகியோர் மீதே, இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு கொழும்பு மேல் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல்செய்துள்ளது. 2014ஆம் ஆண்டு, அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் இரண்டாவது பதவி நிறைவு ஆண்டுவிழாவை முன்னிட்டு, இலங்கை முதலீட்டுச்சபையின் நிதியைப் பயன்படுத்தி செய்தித்தாள்களில் விளம்பரங்கள் வெளியிடப்பட்டதன் மூலம் அரசாங்கத்துக்கு 17 இலட்சம் ரூபாவுக்கும் மேல் நட்டம் ஏற்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பாக இந்த வழக்குத் தொடரப்பட்டுள்ளது. (ச-இ)



மே18 முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தை முன்னிட்டுக் கிராமிய உழைப்பாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு நேற்றுச் சனிக்கிழமை உரும்பிராயில் அமைந்துள்ள கிராமிய உழைப்பாளர் சங்க அலுவலகத்தில் சங்கத் தலைவர் என். இன்பம் தலைமையில் இடம்பெற்றது. (ச-66)



யாழ்ப்பாண மாநகரசபையின் முன்னாள் முதல்வர் சரோஜினி யோகேஸ்வரனின் 27 ஆவது ஆண்டு நினைவுதினம் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் ஆனந்தசங்கரி தலைமையில் யாழ்ப்பாணத்தில் உள்ள அந்தக் கட்சியின் அலுவலகத்தில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்றது. (ச-27)

# சங்கிலிய மன்னனின் 406 ஆவது நினைவு நாள்

யாழ்ப்பாண இராச்சியத்தின் இறுதித் தமிழ் மன்னன் 2ஆம் சங்கிலியனின் 406 ஆவது நினைவுநாள் நல்லூர் முத்திரைச் சந்தியிலுள்ள சங்கிலியன் சிலையடியில் நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக ஓய்வுநிலை பேராசிரியர் க.தேவராஜா தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். இந்தியத்துணைத்தூதுவர் ஸ்ரீசாய்முரளி, சிறப்பு விருந்தினர்களாக நல்லூர் மாநகரசபை ஆணையாளர் கி.சந்திரன், யாழ். பல்கலைக்கழக சைவ சித்தாந்தபீடத் தலைவர் கலாநிதி. பொ.சந்திரசேகரன், யாழ். போதனா மருத்துவமனை மருத்துவர் த.குகதாசன், யாழ். தொல்லியல் திணைக்கள மேலாய்வு உத்தியோகத்தர் க.கையிலைவாசன், ஜனநாயக தமிழ்த்தேசியக் கூட்டணி தேசிய அமைப்பாளர் கலாநிதி. கு.சுரேந்திரன், தென்மராட்சிக் கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் வே.கமலேஸ்வரன் ஆகியோர் கலந்துகொள்வர். (ச- 25)

# உரும்பிராய் மேற்கு இளைஞர்களால் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கல்



யாழ்ப்பாணம், மே 18

முள்ளிவாய்க்கால் நினைவுக் கஞ்சி வழங்கும் நிகழ்வு உரும்பிராய் மேற்கு இளைஞர்களின் ஏற்பாட்டில், உரும்பிராய்ச் சந்திக்கு அருகில் அமைந்துள்ள தியாகி பொன்.சிவகுமாரன் உருவச்சிலைக்கு முன்பாக நேற்றுச் சனிக்கிழமை நடைபெற்றது.

உரும்பிராய் உதவும் நண்பர்கள் அமைப்பின் தலைவர் ந.விஜயதரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை மக்கள் பேரெழுச்சி இயக்கத்தின் தலைமை ஒருங்கிணைப்பாளர் தவத்திரு. வேலன் சுவாமிகள், தாயகம் திரும்புவோருக்கான உரிமைகள் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் பா.சந்திரன், உரும்பிராய் மேற்கு இளைஞர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ச-25,66)





# இதோ உங்களுக்கு அமெரிக்கா செல்லக்கூடிய ஓர் அரிய வாய்ப்பு!!!

## USA EW-3 நிறுவனத்தினத்திற்கு வேலையாட்கள் தேவை.

**புதிய நிர்வாகத்தின் கீழ்**

- முதன்மை விண்ணப்பதாரருடன் (கணவன் / மனைவி) 21 வயதுக்குட்பட்ட பிள்ளைகளும் செல்ல முடியும்.
- அமெரிக்க வறுமை வழிகாட்டுதல்கள் **US Poverty Guidelines** குறித்த விதிமுறைகள் உள்ளடக்கப்படலாம்.
- அமெரிக்காவிலுள்ள பெரிய துரித உணவக ஹோட்டல்களில் பின்வரும் மாநிலங்களில் வெற்றிடங்கள் உள்ளன. கொலராடோ மாநிலத்தில் 53, மெக்சிகோ மாநிலத்தில் 25, நெவாடா, அரிசோனா, தெற்கு டகோட்டா, வடக்கு டகோட்டா, மிச்சிகன், ஓஹியோ, உட்டஹா, இந்தியானா
- 21 முதல் 50 வயதிற்குட்பட்ட ஆண் மற்றும் பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
- சம்பளம் : ஒரு மணித்தியாலத்திற்கு USD $12 - $14 / ஒரு கிழமைக்கு 40 மணித்தியாலங்கள்
- வேலை அனுபவம் மற்றும் ஆங்கில பரீட்சை மதிப்பெண்கள் தேவையில்லை
- குற்றவியல் பதிவு / மருந்துச் சான்றிதழ் தேவை
- உயர்தர கல்வி மற்றும் அதற்கு மேற்பட்ட கல்வி தகைமைகள் தேவை

**கீழ் கண்டவர்கள் விண்ணப்பிக்க முடியாது**

- செங்கன் நாடு, ஆஸ்திரேலியா, கனடா, நியூசிலாந்து, யூகே மற்றும் அமெரிக்காவிலிருந்து விசா நிராகரிக்கப்பட்டவர்கள்.
- நீங்கள் ஏதேனும் தொற்று நோயால் பாதிக்கப்பட்டிருத்தல்
- ஒரு குற்றவியல் வழக்கில் தண்டனை பெற்றிருத்தல்
- நீங்கள் ஏதேனும் பயங்கரவாத அமைப்பின் உறுப்பினராக இருத்தல்.

மேலதிக தகவல்களுக்கு 0743 357 017 | 0743 341 806 | 0761 603 450 | 0777 135 665

**Consolidated Academic Lanka (Private) Limited**
No. 22-B, 1st Floor, Station Lane, Nugegoda.
ceo@academiclanka.com / info@academiclanka.com
0112 890 692
www.academiclanka.lk




சாவகச்சேரி டச்சுவீதி ஸ்ரீ பழனி அறநெறிப்பாடசாலையின் பரிசில்நாள் நிகழ்வு, அறநெறிப்பாடசாலை மண்டபத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இதன்போது கதாப்பிரசங்கம் போட்டியில் பங்குபற்றி தேசிய ரீதியில் இரண்டாம் இடத்தினைப்பெற்ற மாணவி பி.ரிசாளினி கௌரவிக்கப்பட்டார். (ச-25, 28)

# இலக்கத்தகடுகளுக்குத் தட்டுப்பாடு
# விநியோகம் இடைநிறுத்தம்

கொழும்பு, மே 18

புதிய மோட்டார் வாகனங்களைப் பதிவுசெய்யும்போது, வாகன இலக்கத்தகடுகள் வழங்குவது தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதாக மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இலக்கத்தகடுகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால், கடந்த ஏப்ரல் மாதம் 28 ஆம் திகதி முதல் இது தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதாக அந்தத் திணைக்களம் தெரிவித்துள்ளது. புதிய மோட்டார் வாகனம் பதிவுசெய்யும்போது இலக்கத் தகடுகள் வழங்கப்படாவிட்டாலும், அவர்களுக்குச் சம்பந்தப்பட்ட வாகன இலக்கத்தை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் கமல் அமரசிங்க தெரிவித்துள்ளார். அதன்படி, மோட்டார் வாகன உரிமையாளர்கள் அந்த இலக்கத்தைப் பிரதி செய்து, வாகனத்தில் காட்சிப்படுத்தலாம் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)



# அமெரிக்கத் தயாரிப்புகளுக்கு வரியை அதிகரிக்கும் இந்தியா

**புதுடில்லி, மே 18**

**அமெரிக்கத் தயாரிப்புகளுக்கான இறக்குமதி வரியை அதிகரிப்பது தொடர்பாக இந்தியா பரிசீலித்து வருகின்றது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.**

இந்தியா, உலக வர்த்தக அமைப்பிடம் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது என்று சர்வதேச ஊடகமான ரொய்ட்டர்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது. அமெரிக்காவில் தயாரிக்கப்பட்டு இந்தியாவில் இறக்குமதி செய்யப்படும், தெரிவு செய்யப்பட்ட சில தயாரிப்புகளுக்கு வழங்கப்படும் சலுகைகளை நிறுத்தி வைப்பதற்கு அல்லது அவற்றின் மீதான வரிகளை அதிகரிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள் ளது என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதென தெரிவிக்கப்பட்டுள்ளது. அமெரிக்க ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் பதவியேற்றதைத் தொடர்ந்து பல்வேறு நாடுகளின் பொருள்களுக்கு பரஸ்பர வரி விதிப்பு முறையை நடைமுறைப்படுத்தியுள்ளார். சீனா, இந்தியா, கனடா, மெக்சிகோ, இங்கிலாந்து, ஐரோப்பிய யூனியன் என பல்வேறு நாடுகளுக்கு கூடுதல் இறக்குமதி வரி அறிவிக்கப்பட்டது.

இந்தநிலையில் அமெரிக்கத் தயாரிப்புகளுக்கான இறக்குமதி வரியை அதிகரிக்க இந்தியா பரிசீலித்து வருகின்றது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. (எ-இ)

## அருணாச்சலப் பிரதேசத்தில் பெயர்களை மாற்றும் சீனா

### இந்தியா கடும் கண்டனம்

புதுடில்லி, மே 18

அருணாச்சலப் பிரதேசத்தின் சில பகுதிகளை சீனா பெயர் மாற்றியுள்ளது என்று தெரிவித்துள்ள இந்தியா, கடும் கண்டனங்களை வெளியிட்டுள்ளது.

பெயர்களை மாற்றினாலும் அருணாச்சலப் பிரதேசம் இந்தியாவின் ஒருங்கிணைந்த பகுதி என்பதைச் சீனாவால் மாற்றமுடியாது என்றும் இந்தியா தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக இந்தியாவின் வெளிவிவகார அமைச்சின் செய்தித் தொடர்பாளர் ரன்தீர் ஜெய்ஸ்வால் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அருணாச்சலப் பிரதேசம் இந்தியாவின் ஒருங்கிணைந்த பகுதியாகவே இருக்கின்றது. இதில் சீனாவின் முயற்சிகள் அனைத்தும் வீணானவை, அபத்தமானவை. அருணாச்சலப் பிரதேசத்தின் சில பகுதிகளின் பெயர்களை மாற்ற சீனா முயற்சிக்கின்றது. இத்தகைய முயற்சிகளை நாங்கள் நிராகரிக்கின்றோம் என்று அந்த அறிக்கையில் உள்ளது. (எ-இ)



## ஷேக் ஹசீனாவின் கட்சிக்குத் தடை

டாக்கா, மே 18

பங்களாதேஷ் முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனாவின் அவாமி லீக் கட்சியின் பதிவை அந்த நாட்டுத் தேர்தல் ஆணைக்குழு இடைநிறுத்தியுள்ளது. அந்தக் கட்சி அடுத்த பொதுத்தேர்தலில் போட்டியிடுவதற்கும் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

பங்களாதேஷில் ஏற்பட்ட மாணவர் போராட்டத்தைத் தொடர்ந்து பிரதமராக இருந்த ஷேக் ஹசீனா பதவியிலிருந்து விலகி நாட்டை விட்டு வெளியேறி இந்தியாவில் தஞ்சமடைந்தார்.

அதன்பின்னர் பங்களாதேஷில் முகமது யூனுஸ் தலைமையில் இடைக்கால அரசாங்கம் அமைக்கப்பட்டது. முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனாவுக்கு எதிராக இனப்படுகொலை மற்றும் ஊழல் வழக்குகள் பதிவுசெய்யப்பட்டன. சிறுபான்மையினருக்கு எதிரான தாக்குதலை கட்டுப்படுத்த ஷேக் ஹசீனா அரசாங்கம் தவறி விட்டது என இடைக்கால அரசாங்கம் குற்றஞ்சாட்டுகின்றது.

தற்போது பங்களாதேஷின் முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனாவின் அவாமி லீக் கட்சிக்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது. பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என இடைக்கால அரசாங்கம் அறிவித்துள்ளது. (எ-இ)

## 6,000 பேரை பணிநீக்கும் மைக்ரோசொப்ட்

நியூயோர்க், மே 18

பிரலபல கணனி இயக்க முறைமை நிறுவனங்களில் ஒன்றான மைக்ரோசொப்ட் நிறுவனம் தனது பணியாளர்களில் சுமார் 6 ஆயிரம் பேரைப் பதவி நீக்கத் தீர்மானித்துள்ளது என்று தகவல் வெளியாகியுள்ளது.

இந்தவிடயம் தொடர்பாக அந்த நிறுவனம் நேற்றுமுன்தினம் அறிவித்தல் ஒன்றை விடுத்துள்ளது என்றும் கூறப்படுகின்றது.

செலவுகளைக் கட்டுப்படுத்தவும், செயற்கை நுண்ணறிவில் பில்லியன் கணக்கான டொலரை முதலீடு செய்யவும் எதிர்பார்த்துள்ளதால், மைக்ரோசொப்ட் நிறுவனம் பணியாளர்களைப் பணிநீக்கத் தீர்மானித்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)





## பொள்ளாச்சி வன்கொடுமை வழக்கு; குற்றவாளிகளுக்கு ஆயுள் தண்டனை

பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்திய தமிழகம், பொள்ளாச்சி பாலியல் வன்கொடுமை வழக்கில், கைதான 9 பேரும் குற்றவாளிகள் என அறிவித்த கோவை மகளிர் நீதிமன்றம், அவர்களுக்கு சாகும் வரை ஆயுள் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்துள்ளது.

தமிழகத்தின் பொள்ளாச்சியில் இளம் பெண்களை காணொலி எடுத்து, பாலியல் வன்கொடுமை செய்த சம்பவம் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருந்தது. இது தொடர்பாக 2019ஆம் ஆண்டு பெண் ஒருவர் பொலிஸில் முறைப்பாடு அளித்தார். அதையடுத்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தநிலையில், இவ்வாறு பாதிக்கப்பட்ட இளம்பெண்களின் எண்ணிக்கை அதிகரித்ததாலும், சம்பவத்துடன் தொடர்புடைய காணொலிகள் வெளியானதாலும் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. இந்தச் சம்பவம் தொடர்பில் 9 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். இந்த வழக்கு கோவை மகளிர் நீதிமன்றத்தில் தனி அறையில் நடைபெற்றது.

வழக்கு விசாரணைகள் முடிவுற்ற நிலையில் நேற்றுமுன்தினம் இந்த வழக்கில் தீர்ப்பு வழங்கப்பட்டது. நீதிபதி நந்தினி தேவி இந்த வழக்கில் கைதான 9 பேரும் குற்றவாளிகள் என அறிவித்தார். குற்றவாளிகள் 9 பேருக்கும் சாகும் வரை ஆயுள் தண்டனை வழங்கித் தீர்ப்பளித்தார். (எ-இ)

## மின்னல் தாக்கியதில் ஒடிசாவில் 9 பேர் பலி

புதுடில்லி, மே 18

இந்தியாவின் ஒடிசா மாநிலத்தில் நேற்றுமுன்தினம் இடியுடன் கூடிய மழை பெய்த நிலையில் மின்னல் தாக்கியதில் 6 பெண்கள் உட்பட 9 பேர் உயிரிழந்துள்ளனர்.

கோராபுட், கட்டாக், கோர்த்தா, நயாகட், ஜாஜ்பூர், பாலேசோர் மற்றும் கஞ்சம் உள்ளிட்ட பல மாவட்டங்களில் இடியுடன் கூடிய மழை, மின்னலுடன் கூடிய ஆலங்கட்டி மழை மற்றும் மணிக்கு 60 முதல் 70 கி.மீ. வேகத்தில் பலத்த காற்று வீசும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்திருந்தது.

அதன்படி, பல்வேறு இடங்களில் மழை பெய்தது. இதில் மின்னல் தாக்கியதில் 9 பேர் உயிரிழந்தனர். மேலும் காயமடைந்தவர்கள் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ச-இ)

# இலங்கையில் அட்டூழியம்; பொறுப்புக்கூறல் அவசியம்

## பிரிட்டன் பிரதமர் தெரிவிப்பு

**கொழும்பு, மே 18**

**இலங்கையில் போரில் கொல்லப்பட்டவர்கள்- பரந்துபட்ட மனித உரிமை மீறல்களை அனுபவித்தவர்கள்- சமூகங்களாக ஒன்றிணைந்து முன்னோக்கிச் செல்வதற்கு கடந்தகால அட்டூழியங்களை ஏற்றுக்கொள்வதும், பொறுப்புக்கூறலும் மிக அவசியம் என்று பிரிட்டன் பிரதமர் கெய்ர் ஸ்டார்மெர் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கையில் மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளான தனிநபர்களுக்கு எதிராகப் பிரிட்டன் சமீபத்தில் இலக்கு வைக்கப்பட்ட தடைகளை விதித்துள்ளமை குறித்துத் திருப்தியடைகின்றேன். போரில் கொல்லப்பட்டவர்களை நினைவுகூருவதற்காக இலங்கையிலும் உலகம் எங்கிலுமுள்ள தமிழர்கள் ஒன்று திரண்டுள்ளனர்.

பாதிக்கப்பட்ட அனைத்துத் தமிழர்களையும், நினைவுகூருவதில் நான் உங்களுடன் இணைந்து கொள்கின்றேன். அந்த அநீதிகளின் கொடுமைகளின் பாதிப்புகள், நினைவுகளுடன் வாழும் உயிர் பிழைத்தவர்கள் அன்புக்குரியவர்களுடன் உடன்நிற்கின்றோம். நீதி மற்றும் அமைதியைத் தொடர்ந்து பின்பற்றவேண்டியதன் அவசியத்தை இந்தப் புனிதமான நாள் நினைவூட்டுகின்றது - என்றார். (ச-இ)

# கல்கிசை துப்பாக்கிச்சூடு; மற்றொருவர் கைது

கொழும்பு, மே 18

கொழும்பு கல்கிசை பொலிஸ் பிரிவில் கடந்த 5 ஆம் திகதி இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் தொடர்பில் மற்றுமொரு சந்தேகநபர் கல்கிசை பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் கொழும்பு, பன்னிப்பிட்டிய, மாகும்புரப் பிரதேசத்தில் வசிக்கும் 45 வயதுடையவராவார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)

## கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 10 - 04 - 1940

மறைவு 16 - 05 - 2025

எமது யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலக அபிவிருத்தி உத்தியோகத்தர் **திரு க. அரவிந்தன்** அவர்களின் அன்புத் தந்தையாகிய

**அமரர் பொன்னையா கமலநாதன்**

அவர்களின் பிரிவால் ஆழ்ந்த துயர் அடைவதுடன் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலக உத்தியோகத்தர் நலன்புரி கூட்டுறவு சங்கம்

# ஆதரவு கோருகிறது தே.ம.சக்தி

## மனோ எம்.பி. தெரிவிப்பு



கொழும்பு, மே 18

உள்ளூராட்சிமன்றங்களில் ஆட்சியமைப்பதற்கு தேசிய மக்கள் சக்தி அமைச்சர்கள் ஆதரவைக் கோரியுள்ளனர் என தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

நாங்கள் எதிர்க்கட்சித் தலைவரைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளோம். அதன் பின்னரே இறுதித் தீர்மானம் எடுப்போம் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ச-6)

## நாகபூசணி திருமண சேவை

மிகப் பொருத்தமான மணமக்கள் ஜாதகங்கள் உடன் தரப்பட்டு மிக விரைவாக திருமணம் நிறைவேற்றித் தரப்படும்

* **கனடா பிரஜாவுரிமை பெற்ற 2002 ம் ஆண்டுபிறந்த உத்தரட்டாதி நட்சத்திரம் உடைய மணமகளுக்கு உடன் மணமகன் எதிர்பார்க்கப்படுகிறது.**

198, பிறவுண் வீதி யாழ்ப்பாணம்,
021 222 9306, 077 138 7596,
071 999 9306

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமக

## மரண அறிவித்தல்

தோற்றம் 06 . 02 . 1950



மறைவு 16 . 05 . 2025

**பொன்னுத்துரை செல்வராசா (கராஜ் துரை)**

நீர்வேலி சந்தி, நீர்வேலியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை செல்வராசா அவர்கள் (16.05.2025) வெள்ளிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார். அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும், சுப்பிரமணியம் - பராசக்தி தம்பதியரின் பாசமிகு மருமகனும், திலகவதி (திலகம்) அவர்களின் ஆசைக் கணவரும், பிரதீபா, சுரேஸ்குமார், விஜிதா, பகீரதி , இந்துகா, சிந்தியா, ஸ்ரீவித்தியா ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஜெயக்குமார், பிரவீணா, சசிகரன், மயூரன், டினேசன், சிவராஜ், அதிசன் ஆகியோரின் மாமனாரும், அஜின், சுபீன், மனுஸ்ரீ, சேரன், யுவன், நேத்ரா, ஷ்ருதி, ஆருதி, கிஷன், கிஷானா, கிரிஷ், கிஷாரா, கோஷிகன், நீரஜன், ஆதிரா, செழியன், தன்ஷி, ஆகியோரின் பேரனும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.05.2025) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் மு.ப 09.00 மணியளவில் நடைபெற்று 11.00 மணியளவில் நீர்வேலி சீயக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

**துரை கராஜ்**
**நீர்வேலி**
**077 625 7948**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

## மரண அறிவித்தல்

தோற்றம் 29 . 05 . 1971



மறைவு 17 . 05 . 2025

**திரு. மார்க்கண்டு ஜெயரூபன்**

புங்குடுதீவு 5ம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் மயிலு வீதி ஆறுகால்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட மார்க்கண்டு ஜெயரூபன் நேற்று (17.05.2025) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு - பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு புதல்வனும், காலஞ்சென்றவர்களான பாலசுந்தரம் - வினிபிறேட் தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்றவர்களான சொர்ணரூபன் மற்றும் பகீரதி, மோகனரூபன் (மோகன் வெற்றிலைக்கடை திருநெல்வேலி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் நிதுர்சன் (ஜெயம் பல்பொருள் வானிபம் யாழ்ப்பாணம்), டினுசன், தனுசன், ஆகியோரின் பாசமிகு தந்தையாரும். துனிஸ்ராவின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற அவிஸ்ரன், மற்றும் அலெக்ஸ்குமார், அயந்தியா, வசந்தன், ஒளிமதி ஆகியோரின் அன்புப் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (18.05.2025) ஞாயிற்றுக்கிழமை பகல் 01.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக 2 மணியளவில் கோம்பயன்மனல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்:**
**நிதுர்சன் (மகன்) , மோகனரூபன் (சகோதரன்)**
**077 201 0798 077 714 0055**

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 20 - 05 - 1944

மறைவு 18 - 05 - 2020



### அமரர் கந்தையா சிவபாதம்

(இளைப்பாறிய பிரதி அதிபர், ஆசிரியர் கலாசாலை, பலாலி)

அன்புடன் பண்பு சேர்த்து எமைவளர்த்து
அவனியில் நாம் நல்வாழ்வு வாழ வழிகாட்டி
அரிய பல அறிவுரைகள்நிதம் கூறி
எளிமையாய் வாழ்வதன் பொருளுணர்த்தி
ஏற்றமுடன் நாம் வாழ வழிவகுத்த தெய்வமே
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

குடும்பத்தினர்

(CS/58295) J-1

## இலவச ஆங்கில, கணனி வகுப்புக்கள்

பிரிவு - 56
க.பொ.த (உ/த) - 2024 பெறுபேறு பெற்ற
மாணவர்களுக்கான விசேட பிரிவு

- Diploma in English / Spoken English
- Diploma in ICT
- Diploma in Singalam
- Diploma in Human Resource Management (DHRM)
- Diploma in Human Rights

ஆரம்பம் 18.05.2025

✓ காலம் 03 மாதங்கள் ✓ பெறுமதி மிக்க சான்றிதழ்

IPS to your future

Thirunelvely
T.P: 077 570 4893

## பெண் வேலையாள் தேவை

பருத்தித்துறை அல்வாய் வடமேற்கில் வீட்டு வேலை பார்ப்பதற்கும், இரு குழந்தைகளை பராமரிப்பதற்கும் வேலை பார்க்க கூடிய பெண் வேலையாள் தேவை.

(சம்பளம்-35,000 பேசித் தீர்மானிக்கலாம்)

தொடர்பு :- 077 078 4411, 075 078 4466

(CS 3191) D"

## யாழ் நகரில் வேலைவாய்ப்பு

- * மணவறை அலங்கரிப்பு
- * Decoration Helper
- * Designer
- * Store Keeper

T.P :- 077 775 0318

(CS 3187) D"

## காணி விற்பனைக்கு உண்டு

- உரும்பிராய் கற்பகப்பிள்ளையார் கோயில் வீதியில் 3 பரப்பு காணியுடன் கூடிய வீடு விற்பனைக்கு
- நல்லூர் கோயிலுக்கு அண்மையாக 2 பரப்பு விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:
077 794 8012

## காணி விற்பனைக்குண்டு

இருபாலை சந்திக்கும் இராசபாதை றோட்டுக்கும் இடையில் (அன்னை திரேசா அருகில்) 10 பரப்பு காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு:
076 297 7078

(CS 3189) D*

## விற்பனைக்கு

வியாபார நிலையத்திற்கு உகந்த அலுமினிய கண்ணாடி றாக்கை மற்றும் கண்ணாடி சோக்கேஸ்கள் விற்பனைக்கு உண்டு.

T.P - 077 711 1025
076 779 9262 , 077 991 1025

(CS 3198) D*

## மரண அறிவித்தல்

தோற்றம் 21 - 03 - 1943

மறைவு 17 - 05 - 2025



### திரு ஆறுமுகம் பாலச்சந்திரன்

(ஓய்வு பெற்ற சிரேஷ்ட கணக்காளர், நீர்ப்பாசனத் திணைக்களம்)

உடுவிலை பிறப்பிடமாகவும், சுண்டுக்குளி யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திரு ஆறுமுகம் பாலச்சந்திரன் (17.05.2025) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் பசுபதி தம்பதியரின் மூத்த மகனும், காலஞ்சென்றவர்களான இராசு - குணரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும், லூத்துராணியின் அன்புக் கணவரும், பிரியாந்தி (ஆயுள்வேத வைத்தியர் லண்டன்), நிலாந்தி (முன்னாள் விரிவுரையாளர் கொழும்பு பல்கலைக்கழகம், கட்டார்) ஆகியோரின் அன்புத் தந்தையும், டன்ஸ்ரன் (லண்டன்), ரவீந்திரன் (சிரேஷ்டகணக்காளர் கட்டார்) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலேப், ஆகாஷ் ஆகியோரின் அன்புப் பேரனும், மகேஸ்வரன் (ஓய்வுபெற்ற சிறைச்சாலை உத்தியோகத்தர்), வனிதாமலர், ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற சுகுணாதேவி (ஓய்வுபெற்ற ஆசிரியை) மற்றும் எட்விட் அரசரட்ணம் (ஓய்வுபெற்ற பாதுகாப்பு உத்தியோகத்தர் யாழ் பல்கலைக்கழகம்) காலஞ்சென்றவர்களான றெஜினா சிவஞானம், ஜெயராணி இம்மானுவேல் மற்றும் ஜெரீம் டெக்ஸ்ரர் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் எதிர்வரும் (19.05.2025) திங்கட்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு யாழ்ப்பாணம் புனித மரியன்னைப் பேராலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு புனித மரியன்னைப் பேராலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

138, பழைய பூங்கா வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
ரவீந்திரன் நிலாந்தி (மகள்)
021 221 9409

(CS 3193) D*

## வேலைவாய்ப்பு

யாழ் நகரில் அமைந்துள்ள ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ் மற்றும் சமுத்திரா ரேடர்ஸ் (Hard ware) நிறுவனங்களுக்கான வேலை வாய்ப்பு. ஆண்,பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

தொ.இல :- 076 1517 481, 077 494 9683

(CS 3192) D*

## வேலைவாய்ப்பு

யாழ் நகரில் இயங்கிவரும் பிரபல ஹொட்டல் ஒன்றிற்கு சுத்திகரிப்பாளர் தேவை.

தொடர்பு: 070 745 8567

(CS/58290) J-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 02 . 12 . 1947

மறைவு 17 . 05 . 2025



### பழனி பூமலர்

(பழைய பூசாரியின் அன்பு மனைவி)

புத்தூர் கிழக்கு தல்லுடையைப் பிறப்பிடமாகவும், சிறுப்பிட்டி வடக்கு, நீர்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட பழனி பூமலர் அவர்கள் நேற்று (17.05.2025) சனிக்கிழமை அதிகாலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் கனகர் - ஆச்சிக்குட்டி தம்பதியரின் அன்பு மகளும், பழனி (சின்னப்பு) அவர்களின் பாசமிகு மனைவியும், வேலுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், இராசையா, இராசம்மா (லீலா) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், புவிடாசன் (புவி - பிரான்ஸ்), புவியரசி (சுதா), புவிச்செல்வி (செல்வி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், கணேசரத்தினம், தயாளினி கலைச்செல்வன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், ஷதீபன் (பிரான்ஸ்). தனுசன் (பிரான்ஸ்), கஜரூபி, ஷாமந்தி, யகர்ஷனா, பிரஜின் (பிரான்ஸ்), அபிஷனா, பிருத்திகா (பிரான்ஸ்), பிரணிதா (பிரான்ஸ்), ஆர்த்திகன், பிரணவி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.05.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 .00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கிந்துசிட்டி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிறுப்பிட்டி வடக்கு,
நீர்வேலி,
(வைரவர் கோவில் ஒழுங்கை)

தகவல் :
குடும்பத்தினர்
077 664 4342, 077 206 7197

(CS/3194) J-1

## 6ம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 23 . 02 . 1940



மறைவு 18 . 05 . 2019

**அமரர் இராசம்மா கனகரத்தினம்**

மாதங்கள் வருடங்களாகி
வருடங்கள் ஆறு கடந்தது - அம்மா
இன்னும் உங்கள் அன்பு முகம்
எம் கண்ணில் தெரியுது - அம்மா
நீங்கள் எங்களுடன் வாழ்ந்த
காலம் கனவாகி போகாது - அம்மா

**கச்சாய் வீதி,**
**கொடிகாமம்.**

(CS/58285) J-1

**குடும்பத்தினர்**

## மரண அறிவித்தல்

தோற்றம் 10 . 04 . 1940



மறைவு 16 . 05 . 2025

**பொன்னையா கமலநாதன்**

பாடசாலை வீதி, தாவடி தெற்கு, கொக்குவிலை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா கமலநாதன் அவர்கள் நேற்றுமுன்தினம் (16.05.2025) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா - இராசம்மா தம்பதியரின் அன்பு புதல்வனும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், விஜயலட்சுமியின் அன்புச் சகோதரனும், அரவிந்தன் (அபிவிருத்தி உத்தியோகத்தர் - கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகம்), றுக்ஷி (ஆசிரிய ஆலோசகர் - வலயக் கல்வி அலுவலகம், வலிகாமம்), காலஞ்சென்ற சுதர்ஷினி ஆகியோரின் அன்புத் தந்தையும், பவதாரணி (காணி உத்தியோகத்தர் - பிரதேச செயலகம், உடுவில்), பரதன் (கணக்காளர், காணி நிர்வாகத் திணைக்களம், கிளிநொச்சி) ஆகியோரின் அன்பு மாமனாரும், அபினா (வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை), அனுராம் (கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை) ஆகியோரின் அன்பு பேரனும், காலஞ்சென்றவர்களான இராசநாயகம், நாகேஸ்வரி, விநாயகமூர்த்தி மற்றும் தெய்வநாயகி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.05.2025) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தாவடி தெற்கு,**
**கொக்குவில்**

**தகவல்:**
**அரவிந்தன் (மகன்)**
**077 624 2425**

*CS/58291) J-1

## தேவை

யாழ் ஆஸ்பத்திரி வீதியிலுள்ள அரைக்கும் ஆலைக்கு அனுபவம், பழகவிரும்பும் ஆண், பெண் ஊழியர்கள் தேவை.

தொடர்பு:- **076 297 7078**

## காணி விற்பனைக்கு

அறுகுவெளியில் A32 பிரதான வீதியில் இருந்து 200M தூரத்தில் 20 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

Rajeephan Shanththirasekaran
**077 209 8826**

## வீடு வாடகைக்குத் தேவை

மூன்று பேர் கொண்ட சிறிய குடும்பமொன்றிற்கு அச்சுவேலி, ஆவரங்கால், தோப்பு ஆகிய இடங்களில் வீடு வாடகைக்குத் தேவை. சிறந்த முறையில் பராமரித்துத்தரப்படும்.

உடனடித்தொடர்புகளுக்கு:
**078 989 5461**

## வீடு / காணி விற்பனைக்கு

ராசாவின் தோட்டம் வீதி,
யாழ்ப்பாணம்

**வீடு மற்றும் காணி விற்பனைக்கு உண்டு. 2-3/4 பரப்பு**

What's App
**0717 563 730**

## The Royal College of Jaffna

**தனியார் கல்வி நிறுவனம் - சங்கானை**

O/L, A/L கலை, வர்த்தகப்பிரிவு மாணவர்களுக்கு தனியாகவோ, சிறுகுழுக்களாகவோ சகல பாடங்களுக்கும் சிறந்த ஆசிரியர்களைஒழுங்கு செய்து தருகின்றோம். சிறந்த மதிப்பெண்களைப் பெறுவது உறுதி.

**பிரான்பற்று வீதி, சங்கானை**
**தொடர்பு: 077 675 1649**

## Parmal work shop

Urumpirai East

**சைக்கிள் விற்பனைக்கு!!!**



- முற்றுமுழுதாக திருத்திய நிலையில்
- தரமான சைக்கிள்கள் எம்மிடம் உண்டு.
- ஆண்,பெண் இருபாலருக்கும் உகந்தது.
- நேரில் வந்து பார்த்து பெற்றுக்கொள்ளலாம்..

குறிப்பு:- உங்களிடம் உள்ள பாவித்த சைக்கிளை தந்து எம்மிடம் உள்ள சைக்கிளை பெற்றுக்கொள்ளலாம்.

**தொடர்புகளுக்கு :**

**0760903346, 0779853501**

**இடம்:- அரியகுட்டி கனகம்மா நல்வரவு இல்லம்**

(CS/58289) J-1

## Provincial Council Elections

### Application to be a candidate

1. Full Name
2. Address
3. Mobile WhatsApp Number
4. Are you a member of any political party
5. Did you contest any previous election
6. Educational qualification
7. Employment
8. Permanent address

Why do you wants to be a candidate

**Send details to WhatsApp number**

**07754 31 306**

**K Sri Saravanapavaan**
**ATTORNEY AT LAW**
**Leader of independent group**

(CS/58282) J-1

## மூவர் பலி

இங்கிலாந்தின் தெற்குப் பகுதியில் உள்ள இராணுவத்தளத்தில் ஏற்பட்ட தீவிபத்தில் சிக்கி மூவர் உயிரிழந்துள்ளனர் என்று பிரிட்டன் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது. (ம)


## காணி விற்பனைக்கு

மருதனார்மடம் விளாத்தி அடி வீதி, உரும்பிராய் கிராமம் உரும்பிராய் வடக்கு J/164 கோப்பாய் Ds பிரிவில் 4 பரப்பு 16.69 குளி, வெற்றுக் காணி, பயிர்செய்கைக்கும் வீடு கட்டுவதற்கும் ஏற்றது. உறுதி பிரக்கராசியுடன்

தொடர்புகளுக்கு:

திரு.ஆதித்தன்:
077 616 9254 (வட்ஸ் அப்)

டாக்டர் அரஸ்:
+44 794 141 9205(வட்ஸ் அப்)

திரு.டினேஸ்:
+94 77 087 0837 (வட்ஸ் அப்)

## உதவியாளர் தேவை

கொழும்பில் பணி ஓய்வுபெற்ற பெண் ஒருவருக்கு உதவியாக அனுபவமுள்ள, 40 வயதிற்கு மேலான நன்கு சமைக்கவும், வீட்டைத் துப்பரவுசெய்யக்கூடிய திறமையான வீட்டு வேலை செய்யும் உதவியாளர் தேவை. வீட்டில் தங்கி வேலை செய்யும் பெண்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும். அறிமுகம் மற்றும் அடையாள அட்டை முதலிய ஆவணங்களுடன் தொடர்பு கொள்ள

(CS/45027) J-1

077 528 3869

## விற்பனைக்கு

15 kv ஜெனரேட்டர் உடன் விற்பனைக்கு உண்டு
Ashok Leyland

தொடர்புகளுக்கு:
077 731 1407

## வாடகைக்குத் தேவை

யாழ்ப்பாணத்தில் சகலவசதிகளோடு 15 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்றக்கூடிய வகையில் நீர், மின்சாரம், மலசலகூட வசதிகளுடன் கூடிய இடம். நீண்டகால வாடகைக்குத் தேவை. பிரதான வீதிக்கு அருகாமையில் இருத்தல் அவசியம்.

தொடர்புகளுக்கு:
076 429 1967

## IELTS — Pearson

கொழும்பில் அனுபவம்வாய்ந்த பிரபலமான ஆசிரியர் தற்போது யாழ்ப்பாணத்தில்

- ✓ போதுமான பெறுபேறுகளுடன் ஒரே தடவையில் தேர்ச்சிபெறுவதை உறுதிகொள்ளல்.
- ✓ ஆரம்பத்தில் இருந்து இலக்கணம் மற்றும் சொல் அகராதிகளை கற்பித்தல்.

Wisdom Technical College
076 429 1967 — யாழ்ப்பாணம் மற்றும் நெல்லியடியிலும்


## உச்சத்தில் ரொனால்டோ



உலகில் அதிகம் சம்பாதிக்கும் விளையாட்டு வீரர்களின் பட்டியலில், போர்த்துக்கல் நாட்டின் ஜாம்பவான் கிறிஸ்ரியானோ ரொனால்டோ முதலிடம் பிடித்துள்ளார்.

அவர் கடந்த ஆண்டில் மாத்திரம் 275 மில்லியன் டொலர்களைச் சம்பாதித்துள்ளார். வருமானத்தைப் பொறுத்தவரை ரொனால்டோவின் அருகில்கூட வேறு எந்த வீரரும் இல்லை. அமெரிக்க கூடைப்பந்தாட்ட வீரர் லெப்ரான் ஜேம்ஸ் 138 மில்லியன் டொலர் வருமானத்துடன் இரண்டாவது இடத்தில் உள்ளார். (ம)


## வேலை வாய்ப்பு

யாழில் இயங்கும் பலசரக்கு கடை மற்றும் சுப்பர் மார்க்கட்டுக்கு கீழ் காணும் ஆட்கள் தேவை.

1. Manager (2 Years Experience)
2. Administration
3. Computet Billingt Cashier
4. Sales Assistant
5. Packing (பொதியிடல்)

ஆண், பெண் இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம்
வயது எல்லை 18 - 35
யாழ் மாநகர சபைக்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.

விபரங்களுக்கு :- 077 419 5209
077 419 5015

## தமிழ் நாட்டிலிருந்து பிரபல மனோதத்துவ டாக்டர் யாழ் வருகை!



- குடும்ப தகராறு
- தொழில் விருத்தி
- உணவு மருத்துவம்
- குடி போதை
- தாம்பத்திய உறவு
- யோகா
- விபத்துக்களில் இருந்து பாதுகாத்தல்
- மனநல ஆலோசனை

தொடர்புக்கு:
Dr.R.S.இராஜேந்திரன்
071 177 7461
(அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காணப்படும் - யாழ் நகரில்)

## காணி விற்பனைக்கு

பருத்தித்துறை வீதியில் இருந்து 100m தூரத்தில் கட்டப்பிராயில் 4 பரப்பும் 3 குழியும் வீட்டுடனான காணி விற்பனைக்கு உண்டு.

076 330 9761
WhatsApp: +1 905 923 6664


## இஸ்ரேல் மீண்டும் தாண்டவம்

காசாவில் கடந்த 24 மணிநேரத்தில் இஸ்ரேல் மேற்கொண்ட தாக்குதல்களில், 120க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர் என பலஸ்தீன போர்க் கண்காணிப்பகம் கூறியுள்ளது.

ஹமாஸ்களுக்கு எதிரான போர் நிறுத்தத்தைக் குலைத்துக்கொண்டு அண்மைக்காலமாக இஸ்ரேல் மீண்டும் காசா மீதுதாக்குதல்களை நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)


## மரண அறிவித்தல்

தோற்றம் 10 . 06 . 1951



மறைவு 14 . 05 . 2025

### சுப்ரமணியம் இராஜேஸ்வரி

அரியாலை குகன் வீதியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்ரமணியம் இராஜேஸ்வரி அவர்கள் 14.05.2025 புதன்கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்ற ஐயாத்துரை - புதுநாயகம் தம்பதியரின் அன்பு மகளும், நாகமுத்து - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சுப்ரமணியத்தின் அன்பு மனைவியும், நிர்மலா, நிர்மலதாஸ், நிர்மலானந்தன், ஆகியோரின் பாசமிகு தாயாரும், கிருஷ்ணமூர்த்தி, சுபா, தர்சிகா ஆகியோரின் மாமியாரும் காலஞ்சென்றவர்களான நவரத்தினம், செல்லத்துரை, செல்வரத்தினம், சறோயினி, பரஞ்சோதி ஆகியோரின் மைத்துனியும், காலஞ்சென்ற டர்சனா மற்றும் மயூரிகா, சஜீபன், யதுர்ஷா, யஷ்வினி, வினுஸ், சஸ்வின் ஆகியோரின் பேத்தியும் திவ்யந் அவர்களின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.05.2025) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 04.00 மணியளவில் 30 சின்னாலங்கண்டு லேன், அரியாலை எனும் முகவரியில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக அரியாலை சித்துப் பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல் : குடும்பத்தினர்
075 162 5686

(CS 58277) E-1

## வேலைக்கு ஆட்கள் தேவை

Ovendra Holding (pvt) Ltd
(Cooking oil)

வியாபார அலுவலராக பணிபுரிவதற்கு கீழ் காணும் மாவட்டங்களுக்கு ஆட்கள் தேவை.
யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, வவுனியா, கிளிநொச்சி

தொடர்பு: 070 707 2956
070 707 2944

## மணமகள் தேவை

பிறப்பு :- லண்டன்
தகைமை :- BSc கொம்பியூற்றர் சயன்ஸ் பட்டதாரி
தொழில் :- நிறைவேற்று அதிகாரி பிரிட்டிஸ் ஏயவேஸ் லண்டன் கீத்துறு விமான நிலையம்.

பிறந்த திகதி :- 19.07.1996 மகம் நட்சத்திரம், செவ்வாய் குற்றம் இல்லை.
கௌரவமான இந்து குடும்பத்தை சேர்ந்த U.K யில் வாழ்கின்ற மணமகள் அல்லது அங்கு வர விரும்புவோர் தொடர்பு கொள்ளவும்.

0044 755 124 5890 - (UK)
074 372 8215 - (இலங்கை)

(CS/58270) J-1


## விபத்தில் ஊடகர் உயிரிழப்பு

கொழும்பு, மே 18

ஹபரணை திருகோணமலை வீதியில் அநுராதபுரம், ஹபரணை, கல்வங்குவபிரதேசத்தில் இடம்பெற்ற விபத்தில் இளம் ஊடகவியலாளர் ஒருவர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்த விபத்து நேற்று சனிக்கிழமை நடந்துள்ளது. (ச-இ)

# உப்பையே வழங்காத சப்பை அரசாங்கம்!

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் காட்டம்



கொழும்பு, மே 18

தேசிய மக்கள் சக்தியின் ஆட்சியில், நாட்டு மக்கள் அனைத்து வகையிலும் பல்வேறு துன்பங்களை அனுபவித்து வருகின்றனர். குறைந்தபட்சம் உப்பைக்கூட வழங்கமுடியாத இயலாத் தன்மையுடன்தான் அரசாங்கம் காணப்படுகின்றது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டில் தற்போது வினைதிறன் அற்ற அரச நிர்வாகமே காணப்படுகின்றது. தற்போதைய ஆட்சியாளர்கள் பேசுவதில் மிகவும் திறமையானவர்களாக இருந்தாலும், மக்களின் பிரச்சினைகளுக்கு அவர்களிடம் பதில்களோ தீர்வுகளோ இல்லை. ஆளும் தரப்பினர், 'உள்ளூராட்சி மன்றங்களில் அதிகாரத்தை நிறுவுவதற்கு எதிர்க்கட்சிக்கு உரிமை இல்லை' என்று மிரட்டல் விடுத்து வருகின்றனர்.

தற்போதுள்ள தேர்தல் முறையின் கீழ் மக்கள் அளிக்கும் வாக்குகளின் அடிப்படையில் அதிகாரத்தை அமைக்கும் உரிமை எதிர்க்கட்சிக்கும் காணப்படுகின்றது. எனவே உப்பைக்கூட சரியாக வழங்கமுடியாத அரசாங்கத்தின் இந்த அச்சுறுத்தல்களுக்கு ஐக்கிய மக்கள் சக்தி ஒருபோதும் அஞ்சாது.

எதிர்க்கட்சிக்கு பெரும்பான்மை காணப்படும் உள்ளூராட்சி மன்றங்களில் அதிகாரத்தை நிலைநாட்டவும், ஜனநாயக உரிமைகளைப் பயன்படுத்தவும் ஜனநாயக கட்டமைப்புக்குள் எடுக்க முடியுமான அதிகபட்ச நடவடிக்கைகளை ஐக்கிய மக்கள் சக்தி எடுக்கும்.

எதிர்க்கட்சியை இல்லாதொழிக்க இந்த அரசாங்கம் தற்போது பல்வேறு தந்திரோபாயங்களைக் கையாண்டு வருகிறது. இவற்றில் ஐக்கிய மக்கள் சக்தி சிக்கிக்கொள்ளாது. அரசாங்கத்தால் செய்ய முடியாததை, ஐக்கிய மக்கள் சக்தி உள்ளூராட்சி மன்றங்கள்மூலம் செய்துகாட்டும் - என்றார். (ம-இ)



# கைவிடப்பட்டது ஆட்டம் முதலிடத்தில் பெங்களூர்

ஐ.பி.எல். தொடர் நேற்றுமுதல் மீள ஆரம்பமான நிலையில், நேற்று நடைபெறவிருந்த பெங்களூர் மற்றும் கொல்கத்தா அணிகளுக்கு இடையிலான ஆட்டம் மழை காரணமாகக் கைவிடப்பட்டது.

இரு அணிகளுக்கும் தலா ஒவ்வொரு புள்ளிகள் பகிரப்பட்ட நிலையில், 17 புள்ளிகளுடன் பெங்களூர் அணி முதலிடத்தைப் பிடித்துள்ளது.

ஐ.பி.எல். தொடரில் இன்று இரண்டு ஆட்டங்கள் நடைபெறவுள்ளன. மாலை 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ராஜஸ்தான் மற்றும் பஞ்சாப் அணிகள் மோதவுள்ளன. இரவு 7.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் டெல்லி மற்றும் குஜராத் அணிகள் மோதவுள்ளன. இன்றை இரண்டு ஆட்டங்களும் முக்கியமான ஆட்டங்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

# எதிர்க்கட்சிகளுடன் கூட்டணியில்லை

## பெரமுன அறிவிப்பு

கொழும்பு, மே 18

உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் எதிர்க்கட்சிகள் பெரும்பான்மை ஆசனங்களைப் பெற்றுக்கொண்ட சபைகளில் கூட்டணி அமைத்து ஆட்சியமைப்பதற்குப் பொதுஜன பெரமுனத் தயார் இல்லை என பொதுஜன பெரமுன கட்சியின் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து உள்ளூராட்சி மன்றங்களில் ஆட்சியமைக்கும் கூட்டணி தொடர்பில், பெரமுனவின் நிலைப்பாட்டை தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் எதிர்க்கட்சிகள் பெரும்பான்மை ஆசனங்களைப் பெற்றுக்கொண்டுள்ள சபைகளில், எதிர்க்கட்சிகள் கூட்டணி அமைத்து ஆட்சியமைப்பதற்கான பேச்சு இடம்பெற்றது.

அதற்கமைய கட்சி என்றவகையில் பொதுஜன பெரமுனவினரான எங்களுக்கென்று கொள்கையொன்று இருக்கிறது. ஐக்கிய தேசியக் கட்சி, ஐக்கிய மக்கள் சக்தி என்பன வேறு கொள்கைகளையுடைய கட்சிகள். அதனால் உள்ளூராட்சி மன்றங்களில் ஆட்சியமைக்கும்போது, அந்த உள்ளூராட்சி மன்றங்களில் மக்களின் நிலைப்பாட்டை அறிந்து, தீர்மானம் மேற்கொள்வோம். மாறாகக் கட்சியாக கூட்டணி அமைத்து ஆட்சியமைக்க நாங்கள் இணக்கம் இல்லை - என்றார். (ச-இ)

### வவுனியா,...



கள் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

கொட்டித் தீர்த்த மழை காரணமாக, தாழ்நிலப் பகுதிகளில் வெள்ளநீர் தேங்கியதால் வவுனியாவின் பல பகுதிகளில் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

மன்னார் கடலில் நங்கூரமிடப்பட்டிருந்த படகுகள் ஒன்றுடன் ஒன்று மோதி சிறு சேதங்களுக்கு உள்ளாகியுள்ளன. சேதங்கள் தொடர்பான விவரங்கள் இடர் முகாமைத்துவ மத்திய நிலையத்தால் திரட்டப்பட்டு வருகின்றன. (அ-ம-110-56-60)

### மின்கட்டணம்...

இலங்கை மின்சாரசபை கோரிக்கையை முன்வைத்துள்ளது.

இந்த வருடத்தின் முதலாவது காலாண்டில் 18 பில்லியன் ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும், அதை நிவர்த்தி செய்வதற்காகவே இந்தக் கட்டண அதிகரிப்பு கோரப்படுகின்றது என்றும் மின்சாரசபை கூறியுள்ளது.

தமது கோரிக்கையை இலங்கை மின்சாரசபை, பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்கு அனுப்பி வைத்துள்ள நிலையில், ஜூன் மாதம் முதலாவது வாரத்தில், இந்த விடயம் தொடர்பில் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தீர்மானத்தை எடுக்கும் என்று தெரியவருகின்றது. (அ-ம-இ)

### இன்று...

முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை முன்னிட்டு பிரதான தூபி புதுப்பொலிவுடன் சீரமைக்கப்பட்டுள்ளது. அத்துடன், அஞ்சலிப்பு இடம்பெறும் இடங்களில் சிவப்பு, மஞ்சள் கொடிகள் பறக்கவிடப்பட்டுள்ளன. அஞ்சலி நிகழ்வுகளைத் தொடர்ந்து, முள்ளிவாய்க்கால் பிரகடனம் வெளியிடப்படவுள்ளது. அஞ்சலி உரைகளும் இடம்பெறவுள்ளன. பல்லாயிரக் கணக்கானவர்கள் நினைவேந்தலில் கலந்துகொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

நினைவேந்தல்களில் கலந்துகொள்பவர்களுக்கு உறவுகளின் நினைவாக தென்னை, கமுகு போன்ற மரங்களை வழங்குவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அத்துடன் தூர தேசங்களில் இருந்து நினைவேந்தல்களில் கலந்துகொள்பவர்களுக்காக சிறப்புப் போக்குவரத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. தாகசாந்தி நிலையங்களும் அமைக்கப்பட்டுள்ளன. (அ-ம-66)

### சட்டவிரோதமாகத்...

[illegible]யாவில் இருந்து சட்டவிரோதமான முறையில் வல்வெட்டித்துறைக்குள் [illegible]வர் ஊடுருவியிருந்தனர். அவர்க[illegible], அவர்களுக்கு உதவிய இருவரும் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டிருந்தனர். [illegible]ன்போதே அவர்கள் அனைவரையும் எதிர்வரும் 21ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

சட்டவிரோதமான முறையில் தாயகம் திரும்பியவர்களிடம் மருத்துவப் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ-ம-125-26)

### காய்ச்சலால்...

வார். கடந்த 9ஆம் திகதியன்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த அவர், சிகிச்சையின்போது நேற்று உயிரிழந்துள்ளார். இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26)

### மோட்டார்...

வவுனியா, ஈரப்பெரியகுளம், மதவாச்சி, வவுனியா முதலாம் குறுக்குத் தெரு, மதவாச்சி அட்டவீரக் கொட, செட்டிகுளம் ஆகிய பகுதிகளில் இந்த மோட்டார்சைக்கிள்கள் திருடப்பட்டுள்ளன.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் 27 வயதுடையவர் என்றும், திருடிய 5 மோட்டார் சைக்கிள்களையும் அவர் விற்பனை செய்துள்ளார் என்றும் பொலிஸ் விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது.

விற்பனை செய்யப்பட்ட மோட்டார்சைக்கிள்கள் அனைத்தும் மீட்கப்பட்டதுடன், சந்தேகநபரான இளைஞரை நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (அ-ம-18-110)

### இனப்படுகொலை...

இது தொடர்பில் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் வைகோ தெரிவித்ததாவது:-

முள்ளிவாய்க்காலில் சிங்கள இராணுவத்தால் கொத்துக் கொத்தாகக் கொல்லப்பட்ட ஈழத் தமிழர்களுக்காக ஒவ்வொரு வருடமும் மெழுகுவர்த்தியை ஏந்தி ம.தி.மு.க. பேரணி நடத்தி வருகின்றது. இந்த வருடமும் அந்தப் பேரணி இடம்பெறும். இதன்படி நாளை (இன்று) மாலை 4 மணியளவில் பெசன்ட் நகர் கடற்கரையில் இந்தப் பேரணி முன்னெடுக்கப்படவுள்ளது - என்றார். (அ-ம)

### செம்மணி...

டுள்ளன. அகழ்வுப் பணிகளின் இரண்டாம் நாளான நேற்றுமுன்தினம், வெறும் மூன்று அடி ஆழத்தில் முழுமையான என்புத் தொகுதியொன்று அவதானிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

### சட்டவிரோத...



பொலிஸாருக்கு வழங்கப்பட்ட இரகசியத் தகவலுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின்போதே, இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

மணல் அகழ்வுக்குப் பயன்படுத்தப்பட்ட டிப்பர்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. சந்தேகநபர்களை நீதிமன்றத்தில் முற்படுத்தும் நடவடிக்கைகள் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ-ம-213)

## காணி விற்பனைக்கு

நாவற்குழியில் 55 பரப்பும், 7 1/2 பரப்பும்,
அராலியில் 450 பரப்பு
காரைநகர் வீதியில் இருந்து 1Km தூரத்தில்
கடற்கரை முன்பாக தொழிற்சாலை அமைக்க கூடிய
உகந்த இடம். வாடகைக்கு கடையும்,
மேல்மாடி வீடும் யாழ் நகரில் உண்டு.
தொடர்புகளுக்கு:
077 665 9735, 076 071 2676
077 662 6117

## குருதிக் கொடை

வேலணை, மே 18
வேலணை பிரதேச செயலக உத்தியோகத்தர் நலன் புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில், குருதிக்கொடை நிகழ்வு தீவகம் தெற்குப் பிரதேச செயலக மண்டபத்தில் நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.
(ம-25-9)

## வீடு வாடகைக்கு

நல்லூர் கோவிலில் இருந்து 300 M
தூரத்தில் நவீன வசதிகளுடன் கூடிய வீடு
நாளாந்த அடிப்படையில் வாடகைக்கு உண்டு
தொடர்பு : 071 443 2989

## காணி வீடு விற்பனைக்குண்டு

யாழ் அளவெட்டி பெரிய சங்கத்தானை
சந்தியில் இருந்து 100m தூரத்திலும்
A.M.A கல்வி நிலையத்தில் இருந்து
50m தூரத்திலும் நல்ல நீர்க்கிணறு,
வருமானங்களும் கிடைக்கக் கூடியதாக
உள்ளது. குடியிருப்புச் சூழல்.
காணியின் பரப்பு - 5 பரப்பு
தொடர்பு: 076 755 8606
077 638 5683

(CS 58259) E-1

## வீட்டு பணிப்பெண் தேவை

யாழ் நகரில் ஐந்து பேர் கொண்ட
குடும்பமொன்றிற்கு தங்கி நின்று வேலை
செய்ய பணிப்பெண் தேவை
சம்பளம் : 60 000 /=
வயதெல்லை : 35 - 55
உணவு, தங்குமிட வசதி வழங்கப்படும்
தொடர்புகளுக்கு: 075 498 5400
077 937 0000

## மணமகன் தேவை

1977 ல் பிறந்த விசாகம்
நட்சத்திரம், 1ல் செவ்வாய் உள்ள
அரச உத்தியோகத்தில் உள்ள
மணமகளிற்கு
மணமகன் தேவை.
தொடர்பு:- 077 844 8366

## வேலைவாய்ப்பு

பிரபல தனியார் நிறுவனத்திற்கு
ஆண், பெண்
இருபாலாருக்குமான
வேலைவாய்ப்பு.
A/L Complete
077 417 1365

(CS/58287) J-1

## காணியும் வீடும் விற்பனைக்கு

புகையிரத வீதி, கொக்குவில்
கிழக்கு கொக்குவிலில் 4 பரப்புக்
காணி விற்பனைக்கு உண்டு.
தரகர் தேவையில்லை.
077 674 2013

## விற்பனையாளர்கள் தேவை

யாழில். இயங்கி வரும் இலத்திரனியற்
சாதனங்கள் விற்பனை நிறுவனம் ஒன்றிற்கு
விற்பனையாளர்கள் தேவை.
வயது எல்லை - 21 - 45
கொடுப்பனவு நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
அலுவலக நேரத்தில் மாத்திரம்
தொடர்பு கொள்ளவும்
அழைப்பு எண்:- 070 386 0631

## வேலையாள் தேவை

யாழ் ஆஸ்பத்திரி வீதியில்
அமைந்துள்ள பிரபல அழைப்பிதழ்
காட்சியறைக்கு Sales and admin
officer தேவை. Basic computer
knowledge அவசியம்.
தொடர்புகளுக்கு: 077 815 2693

## ஆண் வேலையாட்கள் தேவை

யாழ் நகரில் அமைந்துள்ள
செல்லப்பிராணிகள் விற்பனை செய்யும்
கடை ஒன்றிற்கு 18 - 50 வயதுடைய
ஆண் வேலையாட்கள் தேவை
தங்குமிடவசதி செய்து தரப்படும்
மாதச்சம்பளம் 60 000 - 70 000 வரை
(அடிப்படைச் சம்பளம்)
தொடர்பு: 077 937 0000
075 988 1000

## Accountant / Manager தேவை

யாழ் நகரில் இயங்கும் மருத்துவ நிலையம் / பார்மசிக்கு
**அனுபவமுள்ள** Accountant மற்றும் Manager தேவை.
ஆண்/ பெண் இருபாலாரும் விரும்பத்தக்கது.
(வயது 40 மேல் முன்னுரிமை)
கவர்ச்சியான சம்பளத்துடன் சலுகைகளும்.
071 847 5531, 077 724 2362

(CS/58268) J-1

## வீட்டுப் பணிப்பெண் தேவை

யாழ்நகரை அண்டிய பகுதியில் தங்கிநின்று
சமையல் மற்றும் வீட்டுப்பராமரிப்பு
வேலைகள் செய்வதற்கு வீட்டுப்பணிப்பெண்
தேவை
தொடர்புகளுக்கு: 077 134 5831

## Spoken English & Grammar Classes

**K Ganesh BA**
**நாவலர் கல்வி நிலையம்**
ஆனைப்பந்தி சந்தி, யாழ்ப்பாணம்.
ஆரம்பம்: 24 May 2025 சனிக்கிழமை
**ஆண்டு 9, 10, 11, 12, 13**
**: மாலை 04.30 to 06.00**
**பட்டதாரிகள், தொழில் புரிவோர்**
**: மாலை 06.00 to 07.30**
தொடர்பு:- 077 459 8440

## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம் பஸ்தரிப்பு நிலையத்திலிருந்து
2.5 கிலோமீற்றர் தூரத்திலும், பல்கலைக்கழக
வளாகத்திலிருந்து 500 மீற்றர் தூரத்திலும்
2 1/4 பரப்புக் காணியில் 4 அறைகள்,
வரவேற்பறை, சமையலறை, 2 குளியலறை,
விறாந்தை தனிக்கிணறு என 2000 சதுர
அடியில் அமைந்த பெரிய வீடு பாவனைக்கு
ஏற்ற வகையில் விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு:-
Whats app:-
+61 421 290 240

(CS/56843) J-1

## சாரதி தேவை

கொழும்பு மற்றும் யாழ்நகரில் இயங்கிவரும்
பிரபல நிறுவனம் ஒன்றிற்கு கனரக வாகன சாரதி
தேவை. முன் அனுபவம் வாய்ந்தவர்கள்
விரும்பத்தக்கது. (யாழ் - கொழும்பு)
தொடர்பு: 076 690 8987

## காணி விற்பனைக்கு

55 New செம்மணி வீதி
கல்வியங்காட்டில் 2 1/4 பரப்புக் காணி
விற்பனைக்கு உண்டு.
மொத்தமாக 180 லட்சம்
நல்லூர் கோவில் 1.7 Km.
077 185 4870

## மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பம் 1985
இல் பிறந்த அரச உத்தியோகம் (A/L)
பார்க்கும் மணமகனுக்கு
மணமகள் தேவை.
தொடர்பு:- 070 606 8453

## IELTS CLASSES

**வெளிநாடு செல்பவர்களுக்கான ஆங்கில வகுப்புகள்**

- **IELTS Academic – For Student Visa**
- **IELTS General – Work visa/Other**
- **IELTS for UKVI Life Skills A1 – Spouse Visa/Other**
- **Spoken English – For School Leavers**

அனைத்து வகுப்புகளும் அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களால் கற்பிக்கப்படுகிறது

தொடர்புக்கு:

**NextGen Education**
**55 Kachcheri Nallur Road**
**Jaffna (Racca Road Junction)**

**T.P: 0762592175**

## வேலையாள் தேவை

உணவகம் ஒன்றிற்கு ரொட்டி
வேலையாள் தேவை. போதைப்பொருள்
பாவனையற்றவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு: 077 967 6403

## வேலைவாய்ப்பு

**யாழ் நகரில் இயங்கும்**
**Fancy Shop ஒன்றிற்கு**
- **காசாளர் (பெண்கள்)**
- **Online Social Media Promoter தேவை.**

தொடர்பு:- 076 444 9377

## நீர்க்கசிவைத் தடுப்பதற்கு

**கட்டிடங்களில் ஏற்படும் நீர்க்கசிவை 10 வருட உத்தரவாதத்துடன் சீர் செய்கின்றோம். நீங்கள் இரசாயணப் பொருட்களை பெற்று எமது தொழில்நுட்ப உதவியுடன் சீர்செய்யலாம்.**

**கட்டட ஒப்பந்த காரர்களுக்கு விலைக்கழிவு உண்டு**

தரம் குறைந்த போலிகளைக்கண்டு ஏமாறாதீர்கள்

**உலகத்தரம் மிக்க இரசாயனப் பொருட்கள் Finex ஸ்தாபனத்தாரின் வட மாகாண ஏக விநியோகத்தர்கள். முதன் முதலில் வடமாகாணத்தில் அறிமுகம் செய்தவர்கள்.**

North and East Engineering
55 Stanly Road, Jaffna, Srilanka.
021 222 2363, 077 524 4177, 077 232 3000
www.northandeastengineering.com

FINEX

## PickMe (Jaffna to Vavuniya)

உங்களிடம் வைத்திருக்கும்
**முச்சக்கர வண்டி,**
**மோட்டார் சைக்கிள், கார்,**
**வேன், லாரி**
இருந்தால் நீங்கள்
எங்களுடன் இலவசமாக இணையலாம்
மாதம் Rs.150,000க்கும் மேல்
வருமானம் நிச்சயம்.
0774737737 | 0769447737



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 18.05.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பக்கங்கள்: 08

# சஞ்சீவி

Registered as a Newspaper

ஆட்பார்த் துழலும் அருளில்கூற் றுண்மையால்
தோட்கோப்புக் காலத்தால் கொண்டுய்ம்மின் –பீட்பிதுக்கிப்
பிள்ளையைத் தாய்அலறக் கோடலான் மற்றதன்
கள்ளம் கடைப்பிடித்தல் நன்று.

— நாலடியார்

மலை : 34 வள்ளுவர் ஆண்டு : 2055 வைகாசி 04 ஞாயிற்றுக்கிழமை (18.05.2025) சிகரம் :145

ஔண்யன்



# பிரளயத்தின் பொழுதுகளும் இசைப்பிரியாவும்

### ஒரு முன்னாள் பெண் போராளியின் வாக்குமூலத்திலிருந்து....

தலையை மேல நிமித்தமுடியேலை. இடைவெளியில்லாமல் சன்னங்கள் கூவிக் கொண்டுவந்தன. அவங்கள் கிட்டத்தில் வந்திட்டாங்கள். இனி செய்வதற்கு எதுவுமே இருக்கப் போவதில்லை. பசி வயித்தைக் கிள்ளியது. இப்போதைக்குச் சாப்பாட்டுப் பார்சல் வராது. பொக்கற்றுக்குள் இருந்த கண்டோஸை உடைத்து வாய்க்குள் போட்டன். கொஞ்சம் தெம்பாக் கிடந்தது. சுமதியின் 'பொடி' நாறத் தொடங்கிட்டுது. நேற்றுப் பகல் அவளுக்கு வெடி விழுந்துட்டுது. வெளியால கொண்டுபோக ஏலாது. என்னட்டை இருந்த பன்டேஜ்சால காயத்துக்குக் கட்டுப் போட்டன். ஆனாலும் சரிவரேலை. இரத்தம் ஓடிக் கொண்டே இருந்தது. இந்த நேரம் ஆமிக்காரரும் எங்கட லைனை உடைக்கிறமாதிரி மூவ் பண்ணிக்கொண்டிருந்தாங்கள். அதால சுமதியைப் பாக்கிறதைவிட வாறவங்களைத் திருப்பி அனுப்பவேண்டியிருந்தது. என்னால ஏலும் மட்டும் சுட்டுக்கொண்டே இருந்தன். ஒரு அரை மணித்தியாலயத்தில் அவங்கள் திரும்பிப் போட்டாங்கள். அதுக்குள்ள சுமதிக்கு நிறைய இரத்தம் போட்டுது. ஒரு மாதிரி இழுக்கத் தொடங்கிட்டுது. கண்ணும் மேல செருகிச்சு. கொஞ்ச நேரத்தில எல்லாம் அடங்கி அவள் செத்துப்போனாள். 'என்ர கண்ணுக்கு முன்னால் அவளின்ர சாவைப் பாக்க வேண்டியிருந்திது. வெளியால போகாமல் பங்கருக்குள்ளேயே அவளின்ர பொடியோட நானும் நிண்டன்.

இப்ப நேரம் போனதால சுமதியின்ர பொடியில் இலையான்கள் அடிச்சுப் பிடிச்சுக்கொண்டு வந்து இருந்திதுகள். மணம் மூக்கில குப் எண்டு அடிச்சுது. திடீரெண்டு வோக்கியில ஒரு குரல் நானிருந்த லைனுக்கு சாப்பாடு வாற தகவலைச் சொன்னது. சோத்தைக் கண்ணால பாத்து கன நாள். வோக்கியில தகவல் வந்து 2 மணித்தியாலத்துக்குப் பிறகுதான் ஒரு சொப்பிங்பாக்கில சோறு வந்தது. அதுவும் வேர்த்துப் போச்சு. சொப்பிங் பாக் முழுக்க ஒரே இரத்தம். ஒண்டு இரண்டு சதைத் துண்டுகளும் அதில ஒட்டி இருந்தது. 'பார்சலை லைனுக்குக் கொண்டு வந்தவர் வழியில செல் பட்டுச் சிதறிட்டார். அது தான் இந்த ரத்தம்' பார்சலை என்னிட்ட தந்த போராளி இப்பிடிச் சொல்லிட்டு அடுத்த பங்கருக்குச் சாப்பாடு குடுக்கப் போட்டான். இரத்தம், சதை, சுமதியின் பொடி இதுகள் ஒண்டையும் கவனிக்காமல் மளமளவெண்டு சோத்தைக் குழைச்சு விழுங்கினன். அதில உப்புப்புளி ஒண்டும் இருக்கேலை. ஆனா அந்த நேரத்தில உதொண்டும் தெரியேலை. சாப்பிட்ட கை கழுவ தண்ணிகூட இல்லை. கையை ரவுசரிலதான் துடைச்சன். உடுப் பும் மடமடவெண்டு மட்டை மாதிரி ஆகிட்டுது. அதைப் போட்டு மூண்டு கிழமைக்கு மேலயிருக்கும். இன்னும் மாத்தேலை.

வீட்டில் இருக்கேக்க 'ஒருநாளைக்கு ஒன்பது தரம் உடுப்பு மாத்திறாள்" எண்டு அம்மாட்டை நெடுக பேச்சு வாங்குவன். இப்ப மூண்டு கிழமையா ஒரே உடுப்போடையே நிக்கிறன். அடுத்த நாள் விடிய லைன் மாறச்சொல்லி ஓடர் வந்தது. சுமதியின்ர பொடியை அதுக்குள்ளேயே விட்டிட்டு எனக்குச் சொன்ன இடத்துக்குப் போக வெளிக்கிட்டன். சத்தங்கள் கிட்டவா வந்திட்டுது. ஆமி கதைக்கிற குரல்கூட வடிவாக்கேட்டுது. எண்டாலும் நான் ரைபிளை இன்னும் இறுக்கிப்பிடிச்சன். கழுத்தில இருந்த சயனைட் குப்பியைத் தொட்டுப் பாத்துட்டு அங்கால போக, என்ர கைய ஆரோ பிடிச்சு இழுத்தினம். திரும்பிப் பாத்தன். அம்மா! பக்கத்தில தம்பி அவன்ர ஒரு காலைக் காணேல. இரத்தம்பட்ட ஒரு துணிதான் கால் இருந்த இடத்தில கட்டியிருந்தது. தங்கச்சி. அப்பா ஒருத்தரையும் காணேல்ல. அம்மா ஒண்டும் சொல்லாமல் என்னை இழுத்துக் கொண்டு போனா. அவா கொண்டு போய் விட்ட இடத்தில புழுத்துப்போன நிறையச் சவங்கள். அதில எல்லாத்தின்ர தலையளும் சிதறிப்போய், கண்ணெல்லாம் பிதுங்குண்டு. ஊதிப்போய்க் கிடந்தது. இலையான்களுக்கு நல்ல வேட்டை. இப்பிடிக் கிடந்த உடம்புகளுக்குள்ள இரண்டைக் காட்டி ஒண்டு அப்பா, மற்றது தங்கச்சி எண்டு அம்மா சொன்ன பிறகும் என்னால அடையாளம் கண்டுபிடிக்கமுடியேலே, அம்மான்ர கைய விட்டிட்டு அங்கால போக வெளிக்கிட்டன். ஆனா தம்பி ஒற்றைக்காலோட தவண்டு வந்து என்ர கால இறுக்கிப்பிடிச்சுக்கொண்டு அழத்தொடங்கிட்டான்.

"அக்கா! எனக்குப் பயமாய் இருக்கு என்னை காப்பாத்தி கூட்டிக்கொண்டு போ. எனக்குக் காலிருந்தால் உன்னையும் அம்மாவையும் நான் தூக்கிக் கொண்டு போயிருப்பன்' அழுது கொண்டே சொன்னான்.



"பிள்ளை நீயும் போறியோ? நீயும் போனால் காலில்லாத இந்தப் பிள்ளையை எப்படி நான் காப்பாத்துறது ? உன்ர கழுத்தில இருக்கிற குப்பியைத் தா. நாங்கள் ரண்டு பேரும் அதைக் குடிச்சுச் செத்துப் போறம்" அம்மாவும் அழத் தொடங்கிட்டா. எனக்கு என்ன செய்யிறது எண்டு தெரியேல. வோக்கியில் இருந்த கடைசித் தொடர்பும் 'கட்'டாப்போச்சு.

இனி நான்தான் முடிவெடுக்கவேணும். சிங்களக் குரல்கள் கிட்டவா வந்துட்டுது. எல்லா இட மும் ஒரே புகை மண்டலம். எது எங்கட பகுதி, எது ஆமியின்ர பகுதி எண்ட வித்தியாசம் இப்ப இல்ல. எல்லாம் முடிஞ்சுபோட்டுது. அப்பதான் இசைப்பிரியாவை கண்டன். கையில் குழந்தையோட பக்கத்தில அவவின்ர கணவன். என்னைக் கண்டவுடன அவா அழுதுகொண்டு வந்தா.

"என்னக்கா செய்யப்போறியள்? நானும் இவரும் இந்தக் குழந்தை இல்லாட்டிக்கு செத்துப்போயிடலாம். ஆனா இப்ப குழந்தைக்காக இருக்கத்தான் "வேணும்" அவாவின்ர குரல்ல தோல்வியைத் தாங்க முடியாத சோகம் தெரிஞ்சது. பாக்கில இருந்த ஒரு பஞ்சாபியை எடுத்து என்ர கையில் வைச்சா.

"உந்த உடுப்போட போனால் ஆமிக்காரர் கேட்டுக் கேள்வியில்லாமல் என்னவும் செய்வாங்கள். இதை மாத்திக் கொண்டு போங்கோ. இதுதான் பாதுகாப்பு" எண்டு பஞ்சாபியைத் தந்த காரணத்தைச் சொல்லிப் போட்டு அவ போட்டா. அம்மாவும் தம்பியும் எனக்குக் குழந் தையள் மாதிரித் தெரிஞ்சினம். இனி அவையை நான்தான் காப்பாத்த வேணும். மூண்டு கிழமைக்கு முதல் போட்ட ரவுசரையும், சேட்டையும் வெட்டவெளியில் கழட்டி எறிஞ்சிட்டு.

பஞ்சாபியைப் போட்டுக் கொண்டு தம்பியையும் தூக்கிக் கொண்டு நடக்கத் தொடங்கினன். நிலம் முழுக்க ஒரே இரத்தம். காலுக்குள்ள செத்துப்போன ஆக்களின்ர கை, கால்கள் உழக்குப்பட்டுது. நடக்க ஏலாமல் நிறையப் பேர் மணலுக்குள்ள தவண்டபடி கத்திக் குளறிக் கொண்டிருந்தினம். பிறகு விசாரணை, தடுப்பு

எல்லாம் முடிஞ்சு

வெளியால வரேக்க, எனக்குக் கடைசி நேரத்தில பஞ்சாபி தந்த இசைப்பிரியா துணிகூட இல்லாமல் செத்துக் கிடந்த படத்தைத்தான் பேப்பரில பாக்கமுடிஞ்சுது.

# பதினாறாவதாண்டில் முள் தைக்கும் நினைவுகள்



தலைநகரில் கொண்டாட்டம்
வீதிகள் தோறும் வண்ண
விளக்குளால் அலங்காரம்
காலி முகத்திடலில்
மாபெரும் களியாட்ட நிகழ்வுகள்
அத்தனை இன்பமும்.

இலட்சக் கணக்கில்
ஈழத் தமிழர்களை அழித்ததற்காய்
அழுகை வருகின்றது.
எங்களூரின் அயல் வீட்டில்
எதிர் வீட்டில் இன்னும்
அடுத்தடுத்த அத்தனை வீட்டிலும்.
அப்பா அம்மா ஆசைச் சகோதரர்கள்
தாத்தா பாட்டி என
எத்தனை உறவுகளுளதோ
அத்தனையில்
ஒன்றுக்கோ பலவுக்கோ
கண்களை நிறைக்கும் நீரோடு
பதினாறாமாண்டு நினைவேந்தல்கள்

நிகழ்வுகளின் நாளொன்றுதான்
ஊள்ளார்ந்த உணர்ச்சி மட்டும்.
ஒன்றிற்கொன்று முரணாக!
ஒரே நாடு! ஒரே மக்கள்!!
அரங்குகளில் அரசியல்வாதிகள்
பீற்றிக் கொள்கிறார்கள்
ஆனாலுமிங்கு
எதிரும் புதிருமாய் எத்தனை
வேறுபாடுகள்?!
கண்களைப் பறிக்கும்
மின் விளக்கொளியில்
காயத்தை நாக்கால் வருடும் கூண்டுப்
புலியாய்
நான் பயணிக்கின்றேன்
ரத்தம் சிந்தும் நினைவுகள்
என்னையும் முந்திக்கொண்டு
பதினாறாண்டை
முன்னோக்குகின்றன.

முள்ளிவாய்க்கால் வரை
துரத்தியடிக்கப்பட்டு
முட்கம்பி வேலிகளுள்
நாங்கள் முழுவதுமாய்
முடக்கப்பட்டோம்
தசைப்பிண்டங்களாக்கி
எம் உறவுகளை கூட்டிக் குவித்து
குப்பை மேடாக்கி அவர்கள் மேல்
அலங்காரம் செய்து
நாம் அழைத்து வரப்பட்டோம்

சிங்கத்தின் பசி தீர்க்க
வலிந்தே அதன் குகைக்குள்
முயல்களாய் தள்ளப்பட்டோம்
விடுதலை என்று சொல்லி
கைகளில் விலங்கிடப்பட்டோம்
வரமென்று நம்பிக் கொண்டு
சாபங்கள் பெற்றுக்கொண்டோம்
உலகத்தின் பார்வைக்கு நாம்
உணர்ச்சிகள் துடைக்கப்பட்டு
உருவச்சிலைகளாய்
வைக்கப்பட்டோம்
அரிதாரம் பூசி
சிரிக்கப் பணிக்கப்பட்டோம்
இதற்கிடையில்,
ஈழத்தமிழர்கள்
தாம் பெற்றுக் கொடுத்த
சுதந்திரக் காற்றை
சுகமாக சுவாசிக்கிறார்களென
விளம்பரப்படுத்தப்பட்டோம்
காலங்கள் நீள்கின்றன...
மூச்சுப் பேச்சற்று
பதினாறாம் ஆண்டை
கடந்துவிட்டோம்
தழும்புகளை தடவிப்பார்க்கின்றேன்
எங்கள் ஊரிலிருந்து
ஓட ஓட விரட்டப்பட்டு குந்தியிருந்த
ஒவ்வொரு இடத்திலும்
பொழியப்பட்ட
குண்டு மழையின் குதறலால்
ஏற்பட்ட வெளிக்காயங்கள்
களிம்புகளின்றியே ஆறிவிட்டன
இருந்தும், உள்ளிருந்த காயங்கள்
மட்டும் தடவித் தடவியே
குத்திக் கிழிக்கப்படுகின்றன
முள்ளிவாய்க்கால் வரை
எம் பாதங்களை
பதம் பார்த்த முட்களின் கோரத்தை
மறந்து போவதற்கு
நாம் ஒன்றும் மடையர்களல்லவே
எங்கள் தேசத்தில் புதைக்கப்பட்ட
ஒவ்வொரு விதையும்
மீண்டும் என்றாவதும்
ஒரு நாள் விருட்சமாய்
உயிர்ப்போடு எழுந்து நிற்கும்
அன்றுதான் எங்கள் ஆன்மாக்கள்
சிரிக்கும் அதுவரை எங்கள்
தேசத்தில்
இந்த ஈனர்களின்
குதூகலங்கள் தொடரட்டும்

அக்கராயனூர் இந்து





தம்பி

# முள்ளிவாய்க்காலும் 300 வீரர்களும்

இற்றைக்கு 2000 வருடங்களுக்கு முன்பு கிரேக்க நாகரிகப் பெரும் பரப்பில் ஸ்பாட்டகஸ் எனும் வீரத்தின் பேரரசு இருந்தது. வரலாற்றுக் காலங்களில் அறிவியலினதும் வீரத்தினதும் அடையாளமாகிவிட்ட ஸ்பாட்டகஸ் மனித இனத் தொன்மங்களின் பிறப்பிடமாகவும் இருக்கின்றது. வீரம் பற்றிய ஐதீக ஊற்றின் தொடக்கமாக அந்தத் தேசம் இன்றும் பார்க்கப்படுகிறது.

உலகில் நாகரிகங்கள் உருக்கொள்ளத் தொடங்கிய காலத்தில் ஸ்பாட்டகஸ் தேசத்தில் சுபார்டா எனும் பிராந்தியத்தை வியோனடஸ் மன்னன் ஆட்சி செய்தான். அந்த தேசத்தில் பிறக்கும் குழந்தைகள் தாய்ப்பால் மறக்கும் தருணத்திற்கு முதலே போர்ப்பயிற்சி சாகசக்காரர்களாய் இருந்தனர். ஊரின் எல்லையில் இருக்கும் பெருங்காட்டுக்குள் மாதக்கணக்கில் அந்தக் குழந்தைகள் தனித்து விடப்படுவர்.

கையில் தற்காப்புக்காக இருக்கும் ஒரே ஒரு விஷம் ஏற்றப்பட்ட ஈட்டியைத் தவிர அவர்களிடம் வேறு ஏதும் இருக்காது. தாக்க வரும் கொடிய விலங்கை கொன்றால்தான் அந்தக் குழந்தைகளின் வாழ்க்கை மிச்சம் இருக்கும். ஆகவே விலங்குடனான போரில் வெற்றியீட்டும் குழந்தை மட்டும் ஸ்பாட்டனாக வீடு திரும்பும். இப்படித்தான் தாய்ப் பால் மறக்காத குழந்தைகள் ஸ்பாட்டன்களாக உருவாகினர்.

மன்னன் வியோனடஸ் ஸும் அவரின் இரண்டு புதல்வர்களும் இப்படித்தான் உருவாகினர். இந்த மன்னனின் காலத்தில் ஸ்பாட்டா பொன்னாலும் செல்வத்தாலும் செழித்தோங்கியது.

அந்தச் செல்வத்தில் கண் வைத்த பாரசீக மன்னன் ஸக்ஸீஸ் பெரும்போர் ஒன்றை ஸ்பாட்டாவுக்கு எதிராகத் தொடுத்தான். வலிந்து திணிக்கப்பட்ட போரில் ஸ்பாட்டா மன்னன் லியோனடஸ் வலிமையோடு போராடினான். 300 வீரர்களை வைத்துக்கொண்டு பல நூறு தேசங்களில் இருந்தும் வரும் இலட்சக்கணக்கான படைகளை ஸ்பாட்டாவின் கடற்கரை போர்க்களமொன்றில் சந்தித்தான் லியோனடஸ் ! அவன் தலைமையிலான 300 படை வீரர்கள் மூர்க்கத்தனமாகப் போரிட்டனர். ஒரு கட்டத்தில் காட்டிக் கொடுப்பால் அவர்கள் சுற்றிவளைக்கப்பட்டனர். எந்த மனச்சோர்வையும் பிரதிபலிக்காத மன்னன் லியோனடஸ் எஞ்சிய சிறு படையோடு ஸக்ஸீன் கொடிய படைகளை எதிர்கொண்டான். எதிரியின் பிணங்களை அரணாக வைத்து இடம்பெற்ற சண்டையில் 30 ஆயிரம் பாரசீக படைகளைக் கொன்று குவித்தான் லியோனடஸ்.

போர் உலகின் அனைத்து விதமான தந்திரங்களோடும் போர் தர்மவிதிமுறை மீறல்களோடும் நடைபெற்ற சண்டையின் இறுதியில் காட்டிக் கொடுப்புகளால் லியோனடஸ் சரணடையும் நிலைக்கு வந்தான். பல தேசங்களும் அவனைச் சரணடையும்படி கட்டளையிட்டன. ஆனால் அவனோ சாவேன் என்று தெரிந்தபோதும். தான் முன்பே ஸக்ஸீஸுக்குச் சூளுரைத்த "இந்தப் போர் முடிவதற் குள் உன்னை இரத்தம் சிந்த வைப்பேன்" என்ற சபதத்தை நிறைவேற்றி மறைந்தான். இந்தக் கதையைத் தாங்கி வெளியாகிய "300" எனும் ஆங்கிலத் திரைப்படம் வன்னியின் பட்டிதொட்டியெங் கும் 2007. 2008 காலப்பகுதியில் காட்சிப்படுத்தப்பட்டது.

விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் இந்தப் படத்தை வன்னியில் இருக்கும் அனைத்து மக்களும் பார்க்கவேண்டும் என்பதை விரும்பினார்.

அதற்காக நிதர்சன வெளியீட்டில் தனிப்பிரிவையே சில காலம் இயங்கவைத்தார். அவர்களின் தீவிர மொழிபெயர்ப்பு பணியினால் "300" இலங்கைத் தமிழுக்கு மொழியாக்கம் செய்யப்பட்டு தலைவரின் பார்வைக்காகக் காத்திருந்தது.

அந்தக் காலத்தில் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் கலைஞர் தொலைக்காட்சியில் ஓர் ஆங்கில மொழியாக்கப்படம் வெளிவிடப்படும். 2007 ஆம் ஆண்டில் திடீரென ஒரு நாள் எந்தவித விளம்பரப்படுத்தலும் இன்றி "300 பருத்தி வீரர்கள்" என்ற பெயரில் வெளியிடப்பட்டது. தலைவரின் விருப்பமும் கடினமாக அந்தத் திரைப்படத்தின் மொழியாக்கத்திற்காக உழைத்த போராளிகளின் உழைப்பும் இந்தியத் தொலைக்காட்சியினால் வீண்டிக்கப்பட்டது. அதன் பிறகு இந்திய மொழியாக்கப்படத்தையே புலிகளின் அரசியல் துறையினர் ஒவ்வொரு தெருத்தெருவாகப் பொதுமக்களுக்கு திரையிட்டுக் காட்டினர், ஆனால் அந்தப் படம். வெளியாகிய காலத்தில் அதன் அர்த்தம் யாருக்கும் புரியாமல் இருந்தது. 2009 மே வரைக்கும் அப்படித்தான் இருந்தது.

# துளி

விசும்பின் துளி வீழின் அல்லால்...

## உயிர்ப்பல்வகைமைக்கான சர்வதேச தினம்

22 மே 2025

‘இயற்கையுடன் ஒத்திசைந்த நிலைபேறான அபிவிருத்தி’

### பின்னணி

- 1992 ஆம் ஆண்டு உயிர்ப்பல்வகைமை குறித்த சர்வதேச ஒப்பந்தம் Convention on Biological Diversity (CBD) இணங்கப்பட்டமையின் ஞாபகார்த்தமாகக் கொண்டாடப்படுகிறது.
- உயிர்ப்பல்வகைமைக்கும் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளுக்குமான இடைத்தொடர்பை வலியுறுத்துகிறது.
- சகல அபிவிருத்தி உத்திகளிலும் உயிர்ப்பல்வகைமையை இணைக்குமாறு பிரசாரம் செய்கிறது.
- குமிங்-மொன்ட்றியல் உயிர்ப்பல்வகைமை வரைச்சட்டகத்தையும் 13, 14, 15 ஆம் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளையும் அடிப்படையாகக் கொண்டது.

UN Sustainable Development Goals

## உயிர்ப்பல்வகைமையின்றேல் நீர் ஏது?

- 40% ஆன உயிரினங்கள் நீரை வாழ்விடமாக கொண்டவை.
- 1/3 நன்னீர் வாழ் உயிரினங்கள் அழிவடையும் அபாயத்தை எதிர்கொண்டுள்ளன.
- காடுகளும் ஈர நிலங்களும் இயற்கை நீர் வடிகட்டிகளாகத் தொழிற்பட்டு நீரின் தரத்தைப் பேணுகின்றன.
- பல்வகைமை மிக்க சூழல் தொகுதிகள் மழை வீழ்ச்சியை ஒழுங்குறுத்தி . நிலத்தடி நீர் மட்டத்தை உயர்த்தி. காலநிலையை எதிர்கொள்ளும் ஆற்றலை அதிகரிக்கின்றன.

## நீர்வள விழிப்புணர்வு
# அனைவருக்கும் அவசியமே!

அண்மையில் நடந்துமுடிந்த உள்ளூராட்சித் தேர்தலிலே போட்டியிட்டிருந்த வேட்பாளர்களுக்காக WASPAR செயற்றிட்டத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த உரையாடல் நிகழ்வு கடந்த மாதம் 17 ஆம் 26 ஆம் திகதிகளில் காரைநகர் மற்றும் வலிகாமம் பிரதேசங்களில் நடைபெற்றது. வேட்பாளர்கள் தமது கட்சி, அரசியல் அடையாளங்களை வெளிப்படுத்தியிருந்திருக்காத அதேவேளை பிரதேச நிலத்தடி நீர்வள நெருக்கடி பற்றியும் தமது கொள்கை நிலைப்பாடு, செயலாற்றல் வாய்ப்புகள் பற்றியும் உரையாடினர். பொதுமக்களும் இவ்வுரையாடல் நிகழ்வில் பங்குபற்றியமை, நீர் நெருக்கடியின் பல் பரிமாணங்கள் கலந்துரையாடப்பட வழிவகுத்தது.

உள்ளூராட்சி நிர்வாகக் கட்டமைப்புகள், ஊர்களின் நிலத்தடிநீர் வளத்தைப் பேணுவதற்கு உருவாகியிருக்கும் வாய்ப்புகள், உள்ளூரிலே மேற்கொள்ளப்படவேண்டிய சட்ட ஒழுங்குகள் போன்றனவும் அங்கு பேசுபொருள்களாயின.

எதிர்வரும் காலங்களில் உள்ளூராட்சி அரசியலுக்கு அவசியம் மிக்கதான இயற்கை வளங்கள் சார்ந்த விடயங்களை அரசியல் வட்ட உரையாடல்களின் கருப்பொருளாக்கவும் அவ்வுரையாடல்களின் அடிப்படையில் கூட்டுத் தீர்வுகளைப் பெறுவதற்கும் இவ்வாறான கலந்துரையாடல்கள் வழிவகுக்குமென இணக்கம் தெரிவிக்கப்பட்டது.

# புலமையாளர் பதில்



**கேள்வி :** வடமாகாணத்தின் அநேக பிரதேசங்களின் குடிநீரில் கல்சியம் அதிகமாக உள்ளதால்தான் பெரும்பாலான மக்கள் சுத்திகரிக்கப்பட்ட தண்ணீரை நாடுகின்றனர் எனும் கருத்து நிலவுகின்றது. இக்கருத்தின் பின்னணியைத் தெளிவுபடுத்தமுடியுமா?

**கவின் நல்லையா,**
*வவுனியா தமிழ் மகா வித்தியாலயம்*

**பதில் :** உங்களது கேள்வி நீரில் உள்ளகல்சியம் அளவோடு மட்டுப்படுத்தப்பட்டு இருந்தாலும், உண்மை நிலை எதுவெனில் மக்களிடம் நீர் தொடர்பான விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளமை அல்லது ஏற்பட்டுள்ளமையே அவர்களது புதிய வழிமுறைகளுக்கான நாடலுக்குக் காரணமாகியுள்ளது எனக் கொள்ளலாம்.

யாழ். குடாநாட்டின் நன்னீர் வளம் தனியே கல்சியம் எனும் ஓர் உப்பு அளவினால் மட்டும் பாதிக்கப்பட்டுள்ளதாக கொள்ளமுடியாது. அது பலதரப்பட்ட இயற்கைக் காரணிகள், மனிதனால் ஏற்பட்டுள்ள மாசுக்களால் மிக அளவில் பாதிக்கப்பட்டும்/ இன்னும் பாதிக்கப்பட்டுக் கொண்டும் இருக்கிறது. ஆயினும் இங்கே கல்சியம் அளவு பற்றிய கருத்து மக்களிடம் கொண்டு செல்லப்பட்டுள்ளமை, போத்தல் நீர், மீள் பிரசாரண (Reverse Osmosis - RO ) வடிகட்டிகள் , சுத்திகரிக்கப்பட்ட நீர் போன்றவற்றின் வியாபாரிகள் பயன்படுத்தும் ஓர் வியாபாரத் தந்திரமாகும்.

பொதுவாக நீரின் வன்மைக்கு, அதில் கரைந்துள்ள இரு ஏற்றம் அல்லது மூவேற்றம் கொண்ட நேர் ஏற்ற அயன்களே காரணமாகும். அவற்றுள்ளும் கல்சியம் மற்றும் மக்னீசியம் அயன்களே நீரில் அதிக அளவில் காணப்படுவதால் அவையே காரணமாகக் கொள்ளப்படுகின்றன. இலங்கையின் வட பகுதியைப் பொறுத்தவரை அதன் புவியியல் தன்மை நீரின் வன்மை அதிகரிக்கக் காரணமாகின்றது. மழை நீர் நிலத்தினுள் புகும் போது நிலத்துக்குக் கீழே காணப்படும் மண் மற்றும் பாறைகளைக் கடந்து அந்நீர் செல்லும்போதுதான் நீரின் கரைக்கும் இயல்பு காரணமாக உப்புக்களில் சிறு பகுதி நீரில் கரைந்து நிலத்தடி நீர் வன்மை கொண்டதாக மாறுகின்றது.

ஆயினும் குடிநீர் வன்னீராக இருப்பதையே பேச்சு வழக்கில் ‘ நீரில் கல்சியம் காணப்படுகிறது’ என மக்கள் கூறுவதை அவதானிக்க முடிகிறது. மக்களைப் பொறுத்தவரை அவர்கள் கல்சியம் என சொல்லும் போது நாம் கனிமப்பொருளாகக் கொள்ளும் கல்சியத்தை மட்டும் பிரித்துக் குறிப்பிடுவதில்லை. நீரைக் கொதிக்க வைக்கும் போது அது தற்காலிக வன்னீர் ஆயின் உப்புகள் வீழ்படிவாகி பாத்திரத்தின் அடியிலே படிந்து விடுகின்றன. இதையே மக்கள் வன்தன்மையை அளக்கும் அல்லது அறியும் வழிகோலாகப் பயன்படுத்துகின்றனர்.

அதேவேளை கல்சியத்தின் அளவு நீரில் அதிக அளவில் காணப்படுவதால், சுகாதார ரீதியிலான பாதிப்புகள் ஏற்படும் என இலங்கை தர நிர்ணய சபையோ அல்லது உலக சுகாதார நிறுவனமோ எந்தப் பரிந்துரையும் தரவில்லை. ஆயினும் இக் கல்சியத்திற்கு பயந்து நாம் நாடும் போத்தல் நீர், மீள் பிரசாரண வடிகட்டிகள் (RO), சுத்திகரிக்கப்பட்ட நீர் விற்பனை நிலையங்கள் தொடர்பான போதிய விழிப்புணர்வின்மையினால் மக்களிடையே மிக மோசமான, நீண்டகால பாதிப்பு ஏற்படும் சந்தர்ப்பங்கள் அதிகமாகவே தெரிகின்றன. மீள் பிரசாரண வடிகட்டிகள் பொதுவாக அனைத்து கனிமங்களையும் அகற்றிவிடலும், பாதுகாப்பற்ற போத்தல் தொழிற்சாலைகளும் இதற்கான சந்தர்ப்பத்தை மேலும் அதிகரிக்கின்றன.

ஆகவே மக்கள் தமது நீரின் தரம் தொடர்பில் தெளிவான, வெளிப்படையான அறிவைப் பெற்றுக்கொள்ள என்ன செய்யவேண்டும் என்பதும், அவ்வாறான அறிவின் அடிப்படையில் எமது ஆரோக்கியத்திற்கு உண்மையில் தேவையான, பாதுகாப்பான நீரை அவர்கள் தெரிவுசெய்ய மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகளும் இன்று மிக அவசியமாகின்றன.

**சுந்தா. சரவணன்**
பிரதான இரசாயனவியலாளர், ஆய்வுகூட சேவைகள்,
தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச்சபை,
வடக்கு மற்றும் வடமத்திய மாகாணம்.

## கடந்த மாத அமர்வு:
# யாருடைய நீர்? யாருடைய குரல்?

வடக்கின் இளம்நீர் வாண்மையாளர்கள் வட்டத்தின் கடந்த மாத அமர்வில் யாருடைய நீர்? யாருடைய குரல்? எனும் தலைப்பிலான முன்னளிப்பினை அவ் வட்டத்தின் தன்னார்வலரான சாரதாஞ்சலி மனோகரன் வழங்கியிருந்தார். இதில் நீரின் ஆளுகை, அது சார்பான ஆய்வுகளின் அடிப்படை, நீரின் தற்போதைய நிலைப்பாடு, நீரினை மையப்படுத்திய சமூகத்தின் குரல், அதிகாரம், பிரதிபலிப்புகள் போன்ற பல்வேறு விடயங்கள் தெளிவுபடுத்தப்பட்டன.

வடமாகாணத்தின் உயிர்நாடியாகவிருக்கும் நிலத்தடி நீர் எதிர் நோக்கும் அச்சுறுத்தல்கள், மற்றும் அத்தகையதோர் சூழலில் சமூகம்சார் முகாமைத்துவமும் சமூகத்தின் பங்கேற்பும் நிலத்தடி நீரைப் பேண ஏன் அவசியம் என வலியுறுத்தப்பட்டது. மக்களின் பங்கேற்பின்றி மேற்கொள்ளப்படும் தீர்மானங்களும் நீரை முகாமைத்துவம் செய்யும் நிறுவனங்கள் மத்தியில் காணப்படும் வகிபாக முரண்பாடு களும், மக்கள் பங்கேற்பதற்கான ஒப்புரவற்ற நிலைமையும் விபரமாகக் கலந்துரையாடப்பட்டது.

நாம் எங்கே நிற்கின்றோம்? நீர் முகாமைத்துவத்திற்காக மக்களின் உரிமையுள்ள பங்கேற்பினை நாம் வலியுறுத்துகிறோமா? அல்லது வெறும் கருத்துக்கேட்டலுக்காகவே அழைக்கிறோமா? மற்றும் நாம் மக்களுடன் அதிகாரம் பகிர்ந்துகொள்வதற்குத் தயாராக உள்ளோமா? போன்ற முக்கியமான கேள்விகள் முன்வைக்கப்பட்டன.

ஃபங் மற்றும் செனேக்கா போன்ற மேற்கத்தைய ஆய்வாளர்களால் முன்மொழியப்பட்ட குடிமக்கள் பங்கேற்பு மாதிரிகளும் கலந்துரையாடப்பட்டு உண்மையான பங்கேற்பு என்பது குடிமக்கள் கூட்டங்களுக்கு வருகை தருவதல்ல; முடிவுகளை உருவாக்கும் வகையில் குடிமக்களை அதிகாரமிக்க இடத்தில் அமர்த்துவதே என இணங்கப்பட்டது.

அத்தகைய குடிமக்கள் பங்கேற்பை நாம் எங்ஙனம் வடிவமைக்க வேண்டும், என்பதும் பங்கேற்பு என்பது ஒரே ஒரு நிகழ்வல்ல, அது தொடரும் உறவாக இருக்க வேண்டும் என்பதும் தெளிவாக வலியுறுத்தப்பட்டன.

நாம் குடிமக்கள் பங்கேற்பை அளவிடும்போது, “எத்தனை பேர் வந்தார்கள்” என்பதைவிட, “அவர்கள் என்ன மாற்றங்களை ஏற்படுத்தினார்கள்?” என்பதையே எம்முடைய அளவுகோலாக கொள்ளவேண்டும் எனத் தெளிவுபடுத்தப்பட்டது.

இவ்வமர்விலே ‘புகைப்படக்குரல்’ பற்றிய தெளிவுபடுத்தலும் மேற்கொள்ளப்பட்டது. பங்கேற்புச் செயலாய்வுகளில் பயன்படுத்தப்படும் முக்கிய நுட்பங்களிலொன்று இதுவாகும். இதில் குடிமக்கள் தாங்களே புகைப்படங்களை எடுத்து, அவற்றைத் தங்கள் வாழ்க்கை அனுபவங்கள், பிரச்சினைகள் மற்றும் பார்வைகளை பார்வையாளர்களுக்கும், தீர்மானம் எடுப்போருக்கும் தெரிவிக்கப் பயன்படுத்துகிறார்கள்.

சமூகத்தில் ஒதுக்கப்பட்டிருக்கும் குழுக்களுக்கு தங்கள் குரலைக் கூறும் சந்தர்ப்பத்தை உருவாக்குதல், உணர்வூட்டும் மற்றும் முக்கியமான கலந்துரையாடல்களை ஏற்படுத்துதல், புகைப்படங்களின் மூலம் மாற்றங்களை உருவாக்க ஊக்கமளித்தல் ஆகியன இந்நுட்பத்தின் பிரதான நோக்கங்களாகும். ஆதலினால் நீர் முகாமைத்துவத்தில் குடிமக்கள் பங்கேற்பை மேம்படுத்த எம்மால் இயன்ற பங்களிப்பை மேற்கொள்ளுவோம் என இன்றே உறுதி பூணுவோம்.

## அறைகூவல்!

தலைப்பு: “இயற்கை அதன் வளங்கள் பற்றிய தொடர்பாடலில் கலைகள் சார்ந்த அணுகுமுறைகளின் பங்கு”

நேரம் : 7.30 பி.ப.
திகதி : 29.05.2025 (வியாழன்)

Zoom அடையாளம்: 271 247 5671
கடவுச்சொல்: Abcd.1234

எதிர்வரும் ஜூன் மாதம் 15 ஆம் திகதி துளியின் 14 ஆவது இதழ் உங்கள் கைகளை நாடிவரும். வடமாகாணத்து நீர்வளம் சார்ந்து உங்கள் கருத்துகளையும் கேள்விகளையும் அனுப்பிவைக்க வேண்டியமுகவரி: **Water Security through Participatory Action Research (WASPAR) Project, Centre for Digital Epidemeology, Faculty of Medicine, University of Jaffna;** மின்னஞ்சல்: **water@univ.jfn.ac.lk**

சஞ்சீவி
18 மே 2025

## சிறுவர் கைவண்ணம்



K.இசைப்பிரியா
தரம்-11
யா/உரும்பிராய்
இந்துக் கல்லூரி



ச.சந்தோஷி
தரம்-8D
யா/சாவகச்சேரி
இந்து கல்லூரி



என்.அர்ச்சனா
தரம்-11
யா/உடுவில்
மகளிர் கல்லூரி



பா.ரஜிஷன்
தரம் 6
யாழ்ப்பாணம்
மத்திய கல்லூரி.

# ரதி

## போரின் 12 கவிதை



சூரியனை விழுங்கிக்கொண்ட இரவு....
அடிவயிறு வலிக்க....
பிரசவத்துக்குத் தயாரானது...
சேவலும்...காகமும்...தாதிகளாகி
உதவிக்கு வந்தன...
காலை பிறந்தது ....கத்திக்கொண்டே!...
என் 'காலைப்பொழுது' அடுப்பின்
நெருப்புப் புகையோடு போரிடத் தொடங்கியது....
இருட்டின் முடிவோடு...தொடங்கி...
மாலையின் இருப்பு வரை அலைந்து
பத்து ரூபாய்க்கு...வாழைக் குலைகளை...
சைக்கிளில் கட்டி.. தெருவெங்கும்..
திரிந்து கடைகளுக்குக் கொடுத்து.....
ஒரு...நூறு ரூபாய்க்கு ....
நெஞ்சு மிதிக்கும் என் கணவர்...
ஒரு வேளையேனும் ..உணவிருந்தால்...
பசியின்றிப் படிக்கலாம்,
ஏங்கும் ஐந்து...பிள்ளைகள்.
மூன்று பிள்ளைகள்...காலையில் படிக்கப்போக ...
கடைசிக் குழந்தைகள் இரண்டும்..
வீட்டின் உள்ளே படுத்திருக்க......
சீனியில்லா வெறுந்....தேநீருக்காக....
தண்ணீர் கொதிக்கிறது..
இன்றைக்கு சோற்றுக்கு என்ன வழி?....
நீண்ட மௌனம் சத்தமிட்டுக்...கலைகிறது....
இரவின் வயிறு...இப்படி வெடித்ததா?
என்....ஐந்து பிரசவங்கள்கூட...இப்படி இல்லையே.....
அத்தனை பெரியதாய்.... எது வெடித்துச்சிதறியது?...
இத்தனை காலையில்...விமானக்குண்டா?....
பங்கருக்குள்...போகவும் அவகாசம் இல்லையே?
ஏதோ ஒன்று....அழுத்திப் பற்றிக்கொண்டது....
நெஞ்சை அழுத்தியது....வயிற்றை நெருக்கி...அழுத்தி...
மூச்சு முட்டியது....கண்கள் இருண்டன...
மரணஓலங்கள்......
வெகுவாக மேலெழும்ப....முயல்கிறேன்
முடியவில்லை.... விடிந்த இரவு ...
முடிந்துபோவதாக....எங்கோ நான் ...
மாண்டுபோனதாய் மனம் சொல்கிறது.....
"அம்மா என்னும் முனகல்கள்...
அய்யோ என்னும் கதறல்கள்...
"இழுங்கோ...இழுங்கோ என்னும்....சத்தங்கள்..
நெருக்கமாய்....சனக்கூட்டம்... கத்துகிறது....
என்னவோ நடந்து.....'இயமன்' ...வந்திருக்கிறான்...
மூளை...விளக்கம் கொடுத்தது...
செல்...பொம்பர்...... கெலி.....கிபிர்...
எது என் வீட்டில்? கொட்டியது.....
நான் செத்துவிட்டேனோ?......செத்தும் என் நினைவு ...
பேசுகிறதா?..... யார் யாரோ.....கதைப்பது கேட்கிறது....
என்னால்...கத்தமுடியவில்லையே?
பக்கத்து வீட்டில் 'அந்தப்பிள்ளைகள்'.....
இரவு முழுவதும்... சத்தமிட்டனர்...ஆரவாரித்தனர்...
சிறு பிள்ளைகள்.....அதில்
எல்லோரும் துண்டுகளாக சிதறிப்போனதாய்...
சொல்கிறார்கள்...இறைவா...ஏனிந்த வலி.?...
இவர்களுக்கேன்...இந்தக் கதி....
அவர்கள் செய்தது...தவறுதலாக வெடித்ததாம்.....
அய்யோ! என் பிள்ளைகள் இரண்டு.....படுக்கையில்...
மரணம் எத்தனை வடிவங்களில் துரத்துகிறது!
என் பிள்ளைகள் எங்கே?
பிஞ்சுகள்...இரண்டும்...தப்பிப்பிழைத்து..
இடிபாட்டின் நடுவில் காயங்களோடு.
"அம்மா அம்மா என்று கத்துகின்றன......
தெருவோரமாக நடந்து...திக்குத் திசை தெரியாமல்..
என்னைக் காப்பாற்ற உதவி கேட்கின்றன.
பலர் உதவிக்கு வருகிறார்கள் ....
உறவினர்கள்...கற்களை...விலத்தி...தேடுகிறார்கள்...
கத்தினேன் கத்தினேன்....மிகவும் உரத்து.....
யாரோ? காதுகளுக்கு என் கதறல் கேட்கிறது....
"இங்கே ஒரு பிணம்" என்று..
மூடியிருந்த கற்களை....
இழுத்து...ஒவ்வொன்றாக.....
"இந்த அம்மாவும் முடிஞ்சுது......
'பிணம்'.. என்று.........என்னையும் தூக்கி
வண்டியில் ஏற்ற..... உண்மையில்,
நான் இறந்துதான் போனேனா?
இறைவனே என்னை நீ ஏன் கொன்றாய்?....
அரை வயிறு கால் வயிறாக இருக்கும்.
என் பிஞ்சுகளைப் பிரித்து என்னை எடுத்தாயோ?
கத்தினேன்....கத்திக்கொண்டே இருந்தேன்....
இருபது 'அந்தப்பிள்ளைகளின்' பிணத்தோடு.....
என் பிணமும் ஒன்றாகப் பயணித்தது....
சிறு முகங்கள்...பால் சொரியும்......இளமை.
தாய்மார்கள்..எங்கே?....கத்தியழ,
யாருமில்லாக் கவிதைகளாய்....
அடுக்கிக்கிடந்தன....
என்னையும் பிணமென்று சேர்த்து
அடுக்குகிறார்கள்.......
குண்டின் அதிர்வில் தரைமட்டமாகிய வீட்டின்
இடிபாட்டுக்குள்..நான் சிக்கியிருக்கிறேன்...
"உயிரிருக்க வாய்ப்பில்லை" என்றார்கள்....
"துடிப்பில்லை" என்றார் வைத்தியர்...
பிணவறையில்.....என்னைப் போட்டிருக்கிறார்கள்.
"அம்மா என்னும் ....அழுகைச்சத்தங்கள்...
என்னை விடு இயமனே?...உன்னோடு நான்
வரமாட்டேன்.....
உன்னைக் கொல்வேன்...விடு... என்னைப் ..
போகவிடு
என் பிள்ளைகளை...விட்டு நான் வரமாட்டேன்....
கத்துகிறேன்......கதறுகிறேன்..மூளைக்குத்
தெரிகிறது
எவர் காதுகளுக்கும் என் குரல் கேட்கவில்லை.......
பிணவறைக்குள்...அழும்...மனிதக்குரல்கள்...
இறைவனிடம் மண்டாடுகிறேன்...
இந்தப்போர் நிறைந்த வாழ்வில்....
தாயில்லாப் பிள்ளைகளைக்..கொடிய
போர் கொண்டு போய்விடும்.....
காற்றுக்கும் மழைக்கும்...கட்டிக்காத்து......
வளர்த்த என் பிள்ளைகளை ...யார் கொண்டும்
போக நான் விடமாட்டேன்....
இயமனே!........இது போர் தின்னும் பூமி.
கொஞ்சம்........இரக்கம்கொள்,
என் உயிரை உன் கணக்கிலிருந்து நீக்கு,
என் உடலை இயக்கு...
என் பிள்ளைகளிடம் என்னைத் திருப்பக்கொடு
உரத்துக்கத்துகிறேன்.....உயிர் பிரியும் வலியால்
உழற்றுகிறேன்.......
பிணவறைக் காவலாளி..கத்துகிறான்...
ஒரு அம்மாவின் கால் அசைகிறது.....
வைத்தியர்கள்..ஓடுகிறார்கள்
அவசர அவசரமாக..... சிகிச்சை....
பயணம் முழுவதும் ..நான் கத்திக் கொண்டு
வந்தும்...
யாருக்கும்.. என் குரல் கேட்கவில்லை......
பிணவறைக் காவலாளி.....என் குரலைக்
கேட்டிருக்கிறான்
என்ன அதிசயம்........இறந்துபோன
என்னை...........
'இயமன்'...திரும்ப அனுப்பியிருக்கிறான்......
வெற்று வயிறோடு போராடும்...என் பிள்ளைகளுக்கு
சோறு போடுவதற்காக .....
தாயென்றால்...பிச்சை எடுத்தும் காப்பாள்.....
இறைவனுக்குத் தெரியும்....
ஐந்து பிள்ளைகளின் வரலாறு
மாறிப்போகாமல் இருக்க
இறந்துபோன தாயை.....
கொஞ்சக்காலம் இருந்துவிட்டு வா என்று...
இறைவன் அனுப்பியிருக்கிறான்.....
இல்லையென்றால்..மாவீரராக...கரும்புலிகளாக,
காணாமல் போனவர்களாக வரலாறு...
அவர்களை மாற்றியிருக்கும்.....
தாயின் இழப்பும்.....பசியின் நெருப்பும்...அவர்கள்
பாதையை வேறாக வரைந்திருக்கும்.......
கடைசி நொடியில் என் கதறல்...
கடவுளின் கருணையை வாங்கியிருக்கிறது..........
ஒரு வரலாற்றை மாற்றியிருக்கிறது......
முப்பத்தைந்து வருடங்கள், காலநீரில்
கரைந்துபோயிருக்கின்றன.....
இன்று...என் பிள்ளைகள் .....
பலருக்கு சோறு போடுகிறார்கள்
தங்கள் வாழ்வின் வெற்றிக்காக
உழைத்தவர்க்கெல்லாம்
நன்றி சொல்கிறார்கள்.......
என் வம்சம் தழைத்து
விருட்சமாக நிற்கிறது...
என்றும்...அந்த நாள் ..
என் நினைவுகளுக்குள்....
வந்துகொண்டே இருக்கும்......
அந்த முகங்கள்.....இரத்தமும் சதையுமாக...
காலம் பலியெடுத்த அந்த ....பிள்ளைகள்
எவ்வளவு அழகாக வாழ்ந்திருக்கலாம்.?
மனதில்...கொல்லும் வெறுப்பும்....
வாழ்வின் மீது பற்றில்லா வைராக்கியமும்...
எதிரியை வெல்லும் ஆவலையும்...
உருவாக்கிக்கொண்ட அவர்கள்,
தம்மைத்தாமே துண்டுகளாக
வெடிக்கவென..
வேகம் கொண்டு..மரணங்களை...

கைகளில் வைத்து விளையாடியவர்கள்....
அவர்களும்...என்பிள்ளைகள் போல,
வாழ்ந்திருக்க வேண்டும்...
சந்ததிகள்...பெருக்கி...
பெற்றோருக்காக.....
வாழ்வின்..நன்மைகளை அநுபவித்து......
கணக்கெழுதும்......காலனிடம் தப்பி..
இவர்களும்...வாழ்ந்திருக்கலாம்.....
பெற்ற பிள்ளைகளை இழந்த
அவர்களின் பெற்றோர்....
முதியோர்..விடுதிகளில்....
தெருவோரங்களில்....
கோயில் வீதிகளில்....
நினைவுகளைத் தொலைத்தவர்களாய்....
தம்..பிள்ளைகளைத்..தேடுபவர்களாக...
இல்லையென்பது தெரியாது .....
இறந்துபோனார்கள் என்பதை அறியாது....
சோற்றுக்கு..கையேந்தும் துயரம்.......
தாங்கமுடியாத வலி......வேதனை....
என்னையும்..அந்த முதியவர்களில்...
ஒருத்தியாக மாற்றாமல்......
இந்த போர்க்காலம்
கொடுத்த கடுந்தண்டனைகளிலிருந்து ..
தவறி.
என்னையும்... என்பிள்ளைகளையும்
வாழவைத்த ...காலத்திற்கும்...
அதன் கருணைக்கும் நன்றி.

ஆனந்தி



# இன அழிப்பை மறுத்துரைத்து அநுர அரசு தயாரிக்கும் இறுதி வரைபு

அ.நிக்ஸன்

இலங்கை அரசு என்ற கட்டமைப்பு ஈழத் தமிழர்களின் அரசியல் விடுதலைக்கு ஏற்றதல்ல. அது தமிழ் இன அழிப்புக் கட்டமைப்பு என்பதை அறிவும் உணர்வும் சார்ந்து வெளிப்படுத்தும் நிகழ்வுதான் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல். மாறாக வெறுமனே போரில் கொல்லப்பட்ட மக்களை நினைவுகூருவது மாத்திரமல்ல என்பதை உலகுக்கு உரத்துக் கூற வேண்டும்.

அதேநேரம், முப்பது ஆண்டுகால அகிம்சைப் போராட்டத்திலும் அதற்கு அடுத்த முப்பது வருட கால போரிலும் கொல்லப்பட்ட அத்தனை உயிர்களின் தியாகத்திலும், ஈழத்தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பதற்கான சர்வதேச ஏற்பாடாகவே முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு அமைதல் வேண்டும்.

சுனாமிப் பேரலையில் கொல்லப்பட்ட மக்களை நினைவுகூருதல் என்பது பொது நிகழ்வு. ஆனால் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு என்பது ஈழத்தமிழர்களின் அரசியல்விடுதலைக்கானது. தமிழ் இன அழிப்புப் பற்றிய சர்வதேச விசாரணைக்கான கோரிக்கையை ஒருமித்த குரலாக முன்வைக்க வேண்டிய கூட்டு நினைவேந்தலாகும்.

ஆனால் இனஅழிப்பு என்பதையோ, ஈழத்தமிழர்களின் அரசியல் விடுதலை பற்றியோ சிங்கள அரசியல் தலைவர்கள் எவருமே மனதாரப் பேசியது கிடையாது. ஏன் போர்க்குற்றம் என்பதைக்கூட ஏற்றுக்கொண்டதாக இல்லை.

சர்வதேச விசாரணையை உள்ளகப் பொறிமுறையாக மாற்ற மைத்திரி - ரணில் அரசாங்கம் 2015 இல் மேற்கொண்ட முயற்சியை கோத்தாபய தொடர்ந்தார். அதன் நீட்சியாக ரணில் விக்கிரமசிங்க காய் நகர்த்தினார். தற்போது அநுரகுமார திஸாநாயக்க புதிய வியூகம் ஒன்றை வகுக்கிறார். அதேவேளை, எந்தவொரு இடத்திலும் இன அழிப்பு என்றோ, அல்லது முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் ஈழத் தமிழர்களின் சுயநிர்ணய உரிமைக்கான கூட்டுக் கோரிக்கை எழுச்சி என்றோ மிதவாதத் தமிழ்த் தலைவர்கள் பகிரங்கமாகப் பேசியதும் கிடையாது.

ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் போன்றவர்களின் மிதவாத செயற்பாடுகளும் இன அழிப்பு என்பதை மறுத்துரைக்கும் சிங்கள அரசியல் தலைவர்களுக்கு வாய்ப்பாக உள்ளது.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகளை நடத்துவது தொடர்பாக தமிழர் பிரதேசங்களில் பல்வேறு கூட்டங்கள் நடைபெறுவது வழமை. ஆனால், வடக்குக் கிழக்குத் தாயகப் பகுதிகள் இணைக்கப்பட்ட சுயநிர்ணய உரிமையைக் கூட்டாக வலியுறுத்தும் வகையிலான கூட்டுக் கோரிக்கைக்கு, அந்தக் கூட்டங்களில் மனதார முக்கியத்துவம் கொடுக்கப்பட்டதாகக் கூற முடியாது.

தமிழ்த் தேசியக் கட்சிகளின் சில தலைவர்களும் கிறிஸ்தவ குருமார், சைவக்குருமார் உள்ளிட்ட வேறுபலர் இன அழிப்பு என்பதை வெளிப்படையாகக் கூறினாலும், இன அழிப்பு விசாரணைகள் சர்வதேச மட்டத்தில் நடத்தப்பட்டு, ஈழத் தமிழர்களின் சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்படவேண்டுமென்ற கூட்டுக் கோரிக்கைகள் இன்னமும் வெளிப்படையாகவும், தொடர்ச்சியாகவும் முன்வைக்கப்படவில்லை.

அவ்வப்போது அவ்வாறான கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டாலும், கட்சி அரசியல் மற்றும் வேறுபல நிகழ்ச்சி நிரலோடு இணைந்ததாகவும் மட்டுப்படுத்தப்பட்டதாகவுமே அந்தக் கூட்டுக் கோரிக்கைகள் அமைகின்றன.

தமிழ்த்தேசியக் கட்சிகளிடையே கட்சி வேறுபாடுகள் இருந்தாலும், தமிழ்த்தேசியம் என்பதை நிறுவுதற்கான இன அழிப்பு விசாரணைகள் பற்றிய அழுத்தம் திருத்தமான கோரிக்கைகள், மற்றும் சுயநிர்ணய உரிமைக்கான கூட்டுக் கோரிக்கைகள் சர்வதேச மட்டத்தில் ஒருமித்த குரலாக முன்வைக்கப்படவேயில்லை.

அதுவும் வடக்குக் கிழக்குத் தாயக மக்களும் புலம்பெயர் அமைப்புகள் மற்றும் தமிழகத்தில் உள்ள அமைப்புகள், கட்சிகள் ஒன்றிணைந்த கூட்டுக் கோரிக்கையாக அவை அமையவில்லை.

ஆகவே இம்முறை முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் என்பதை அவ்வாறான கூட்டுக் கோரிக்கையாக மாற்ற வேண்டும். இதற்கான ஏற்பாட்டுக்குப் போதிய கால அவகாசம் தேவைப்படாது. ஏலவே அதற்கான கருத்தியல் மக்கள் மத்தியில் இயல்பாகவே உண்டு.

1956 மற்றும் 58 ஆம் ஆண்டுகளில் தென் இலங்கையில் ஈழத்தமிழர்கள் மற்றும் மலையகத் தமிழ் மக்கள் மீது நடத்தப்பட்ட கொலை, கொள்ளைச் சம்பவங்களில் இருந்து 2009 இறுதிப் போர், அதன் பின்னரான பதின்மூன்று வருடங்களில் வடக்குக் கிழக்குப் பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்டுவரும் திட்டமிடப்பட்ட சிங்களக் குடியேற்றங்கள், பாரம்பரிய காணி அபகரிப்புகள், மரபுரிமை அடையாளங்கள் மாற்றப்பட்டு பௌத்த சின்னங்கள் பொறிக்கப்பட்டு வருகின்றமை வரையும் இன அழிப்புப் பற்றிய விசாரணைகள் நடத்தப்படவேண்டுமென்ற பலமான கோரிக்கைகள் முன்வைக்கப்படவேண்டும்.

தமிழ் மொழி வரலாற்றுப் பாடநூல்களிலும் பௌத்த சமய வரலாறுகள் திணிக்கப்பட்டுள்ளன. ஐக்கிய நாடுகள் சபையின் யுனெஸ்கோ கல்வித் திட்ட விதிமுறைகளுக்கு மாறாகவே தமிழ் இனத்தின் மீது சிங்கள பௌத்த சமய வரலாறு திணிக்கப்பட்டுள்ளது. இது இன அழிப்பின் மற்றுமொரு வகை.

இதற்கு எதிராக யுனெஸ்கோவில் முறைப்பாடு தாக்கல் செய்ய முடியுமென கல்வித்துறைப் பேராசிரியர் அமரர் சோ. சந்திரசேகரம் கூறியிருந்தார். இன அழிப்பு முப்பது ஆண்டுகாலப் போருக்கு முன்னரே ஆரம்பித்ததால், இன அழிப்புப் பற்றிய விசாரணைகளை அங்கிருந்தே ஆரம்பிக்கப்படவேண்டும். ஆனால் அதற்குரிய ஏற்பாடுகள் தமிழ்த் தரப்பிடம் இருப்பதாக தெரியவில்லை.

கனடாவில் இன அழிப்பு நினைவுச் சின்னம் அமைக்கப்பட்டமைக்கு எதிர்ப்பு வெளியிட்ட அமைச்சர் விஜித ஹேரத், கொழும்பில் உள்ள கனேடியத் தூதுவரை அழைத்து எச்சரிக்கைத் தொனியில் கண்டனம் வெளியிட்டிருக்கிறார். அது மாத்திரமல்ல, அரசியல் இராஜதந்திரிகள் குழு ஒன்றை ஜனாதிபதி அநுர நியமித்துமுள்ளார். இக் குழு கனடாவுக்குச் சென்று, ஈழத் தமிழர்கள் இலங்கை ஒற்றையாட்சி அரசியலமைப்புக்குள் வாழமுடியும் என்ற விபரங்களை வழங்கவுள்ளதாக தகவல்கள் கசிந்துள்ளன.

இந்த முயற்சியைத்தான் ஏற்கனவே மஹிந்த, கோத்தா மற்றும் ரணில் ஆகியோர் மேற்கொண்டிருந்தனர். இன அழிப்பு இடம்பெறவில்லை என்பதை மறுத்து, அநுர அரசு அதன் இறுதிக் கட்ட வரைபு ஒன்றை தயாரித்துள்ளதாக கொழும்பில் தகவல்கள் கசிந்துள்ளன. மாற்றம் என்று வந்த அநுர அரசும் ஏமாற்றத்தையே தமிழர்களுக்குப் பரிசாகத் தரப்போகின்றது.



தமிழ்த்தேசியக் கட்சிகளிடையே கட்சி வேறுபாடுகள் இருந்தாலும், தமிழ்த்தேசியம் என்பதை நிறுவுதற்கான இன அழிப்பு விசாரணைகள் பற்றிய அழுத்தம் திருத்தமான கோரிக்கைகள், மற்றும் சுயநிர்ணய உரிமைக்கான கூட்டுக் கோரிக்கைகள் சர்வதேச மட்டத்தில் ஒருமித்த குரலாக முன்வைக்கப்படவேயில்லை.

# பதினாறாவது மே பதினெட்டும் உள்ளூராட்சி சபைகளும்





ஓ நிலாந்தன்

ஆரியகுளம் சந்தியில் அமைக்கப்பட்டிருந்த வெசாக் பந்தல்களைப் பார்ப்பதற்கு ஒரு பகுதி தமிழர்கள் போனது உண்மை. புதுக்குடியிருப்பிலும் கிளிநொச்சியிலும் அமைக்கப்பட்டிருந்த வெசாக் அலங்காரங்களைப் பார்ப்பதற்கும் ஒரு பகுதியினர் போனது உண்மை. புதுக்குடியி ருப்பில் ஆயிரக்கணக்கில் போய் படைத்தரப்பு வழங்கிய குடிபானங்களையும் அன்னதானத்தையும் வாங்கியதும் உண்மை.

அதேசமயம் கடந்த வாரம் தாயகம் முழுவதிலும் ஆங்காங்கே பரவலாக முள்ளிவாய்க்கால் கஞ்சி காய்ச்சி கொடுக்கப்படுவதும் உண்மை. மக்கள் பரவலாக அதை வாங்கி அருந்துவதும் உண்மை. இன்று முள்ளிவாய்க்காலில் பெருந்திரளாக மக்கள் திரள்வார்கள் என்பதும் உண்மை.

ஒரு தேசம் என்பது அப்படித்தான் இருக்கும். தேசங்கள் எப்பொழுதும் தட்டையாக ஒற்றைப் பரிமாணத்தில் இருப்பதில்லை. வெசாக் பந்தல்களைப் பார்க்க போனவர்கள் எல்லாருமே படையினரின் நண்பர்களும் அல்லர். பொழுது போக்காகப் போனவர்களும் உண்டு. விடுப்புப் பார்க்கப் போனவர்களும் உண்டு. ஆனால் அவர்களின் பலர் பின்னர் கஞ்சி வாங்கிக் குடித்தி ருப்பார்கள். முள்ளிவாய்க்காலுக்கும் போயிருப்பார்கள். ஒரு தேசம் என்றால் அப்படித்தான். எல்லாத் தரப்புக்களும் இருப்பார்கள். யார் அதிகமாக இருக்கிறார்கள் என்பது தான் இங்கே முக்கியம். நாடு மே 18ஐ நினைவுகூரும் என்பதுதான் இங்கு முக்கியம்.

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் அதற்கான தயாரிப்புகளை கடந்த வாரம் முழுவதும் செய்து வருகிறார்கள். கட்சிகளும் செயற்பாட்டாளர்களும் செய்கிறார்கள். நீதி கிடைக்காத அல்லது நீதியை நோக்கி மெதுமெதுவாக ஊர்ந்து போகின்ற 16ஆவது ஆண்டு இது.

அமெரிக்கக் கண்டத்தில் இன அழிப்பு செய்தவர்களுக்கு எதிராக தடைகள் நிறைவேற்றப்பட்டுள்ளன; தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. குறிப்பாக கடந்த வாரம் கனடாவில் ஒரு நினைவுச் சின்னம் நிறுவப்பட்டிருக்கிறது. தாயகத்துக்கு வெளியே அதிக தொகை ஈழத் தமிழர்கள் வாழ்வது கனடாவில்தான். சில வாரங்களுக்கு முன்பு பிரித்தானியாவும் இனஅழிப்பு செய்தவர்களுக்கு எதிராகத் தடைகளை விதித்திருக்கிறது.

இப்படிப்பட்டதோர் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சூழலில், தாயகத்தில் தமிழ் அரசியல்வாதிகள் ஒருபுறம் கஞ்சி காய்ச்சுகிறார்கள்; இன்னொருபுறம் புதிய உள்ளூராட்சி மன்றங்களை உருவாக்குவதற்காக பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு வருகிறார்கள். மே 18 முடிந்த இரண்டு வாரங்களில் புதிய உள்ளூராட்சி மன்றங்களை ஸ்தாபிக்க வேண்டும். தமிழ்ப் பகுதிகளில் உள்ள மொத்தம் 56 சபைகளில் ஆறு சபைகளில் மட்டும்தான் நிச்சயமான அறுதிப் பெரும்பான்மை உண்டு. எதிர்க்கட்சிகள் இணைந்து தோற்கடிக்கப்பட முடியாத பெரும்பான்மை ஏனைய பெரும்பாலான எல்லாச் சபைகளிலுமே தொங்கு நிலைதான். மொத்தம் 36 சபைகளில் வீடு முன்னிலை வகிக்கின்றது. மூன்று சபைகளில் சைக்கிள் முன்னிலையில் நிற்கின்றது. ஒரு சபையில் சங்கு. ஒரு சபையில் வீணை. ஒரு சபையில் காரைநகரில் யாருக்கும் பெரும்பான்மை இல்லை.

அதாவது நினைவு கூரும் மாதம் ஒன்றில் தமிழ் மக்கள் தமிழ் கட்சிகளுக்கு வழங்கிய ஆணை என்பது பெருமளவுக்கு தொங்கு சபைகள்தான். அந்த மக்கள் ஆணைக்குள் மறைமுகமாக ஒரு செய்தி உண்டு. ஒன்றுபடுங்கள் என்பதுதான் அது. ஒன்றுபடாவிட்டால் பெரும்பாலான சபைகளை நிர்வகிக்க முடியாது.

மேலும், உள்ளூராட்சி சபைகளை நிர்வகிப்பதற்கு மட்டுமல்ல. அதற்குமப்பால் அடுத்து வர இருக்கும் மாகாண சபைத் தேர்தல்களை எதிர்கொள்வதற்கும் அதுமிக அவசியமானது. ஏனென்றால் உள்ளூராட்சி சபைத் தேர்தல் முடிவுகளின் படி, தமிழ்ப் பகுதிகளில் என்.பி.பி. பெரும்பாலும் இரண்டாம் இடத்தில் நிற்கின்றது. அது பெரும்பாலும் உள்ளூராட்சி சபைகளைக் கைப்பற்றும் வளர்ச்சியைப் பெறவில்லைத்தான். ஆனால் 6 மாதங்களில் ஒரு தென்னிலங்கைக் கட்சி பெற்ற வளர்ச்சி என்பது தமிழ்த்தேசிய கட்சிகளுக்கு எச்சரிக்கை மணி போன்றது. மாகாண சபைத் தேர்தல்களை நோக்கி ஏதோ ஓர் ஒருங்கிணைப்புக்குப் போகத் தவறினால் தேசிய மக்கள் சக்தி உற்சாகமாக உழைக்கும்.

தேசிய மக்கள் சக்தி மட்டுமல்லை தமிழ் வாக்காளர்களும் நம்பிக்கையூட்டும் எதையாவது காட்டினால்தான் ஆர்வத்தோடு, உற்சாகமாக வாக்களிக்க வருவார்கள். தொடர்ச்சியாக மூன்று தேர்தல்கள் வந்து விட்டன. உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் வாக்களிப்பு வீதம் குறைவதற்குக் காரணம் தொடர்ச்சியாக மூன்று தேர்தல்கள் நடத்தப்பட்டமை மட்டுமல்ல. தமிழ் வாக்காளர்கள் மத்தியில் சோர்வு அல்லது தளர்வு ஏற்பட்டதும் ஒரு காரணம்.

யாழ்ப்பாணம் ஈவினைப் பகுதியில் நடந்த ஒரு விடயத்தைச் சுட்டிக்காட்ட வேண்டும். அங்கு வாக்களிப்பில் கலந்துகொள்ள ஆர்வமின்றிக் காணப்பட்ட முதியவர்களை வாக்களிப்பு நிலையங்களை நோக்கிச் செல்லுமாறு தூண்டுவதற்கு சில கட்சிசாரா பெண் செயற்பாட்டாளர்கள் முயற்சித்திருக்கிறார்கள். தொடர்ச்சியாக அவர்கள் முயற்சித்த பொழுது, ஒரு கட்டத்தில் முதியவர்கள் சொன்னார்களாம், “எங்களுக்கு வாக்களிப்பில் ஆர்வம் இல்லை. இவர்கள் ஒற்றுமைப்பட்டும் நாங்கள் உற்சாகமாகப் போய் வாக்களித்து விட்டு வருவோம். நீங்கள் எவ்வளவுதான் தூண்டினாலும் நாங்கள் வாக்களிக்க வரவே மாட்டோம்” என்று திட்டவட்டமாக மறுத்து விட்டார்களாம்.

இப்படி எத்தனை கிராமங்களில் வாக்காளர்கள் சோர்ந்து போய், ஆர்வமின்றி வாக்களிக்க வராமல் இருந்திருப்பார்கள்? தமிழ்த் தேசிய வாக்களிப்புப் பாரம்பரியத்தைப் பொறுத்த வரை வாக்களிப்பு அலை ஒன்று தோன்றும் போதுதான் அதிக ஆசனங்கள் கிடைக்கும்.

வாக்களிப்பு அலை என்பது பெரும்பாலும் ஒரு தமிழ்த் தேசிய அலைதான். அதைத் தூண்டுவதற்கு தமிழ்த் தேசியக் கட்சிகள் படைப்புத்திறனோடு சிந்திக்க வேண்டும். ஐக்கியப்பட்டுச் சிந்திக்க வேண்டும். இப்படிப்பட்டதோர் பின்னணியில், மே18 இன் பின் இரண்டே வாரங்களில் அமைக்கப்படவிருக்கும் உள்ளூராட்சி சபைகளில் எவ்வாறு தமிழ்த் தேசிய நோக்கு நிலையில் நிர்வாகத்தை அமைப்பது என்பது தொடர்பில் தமிழ்த் தேசியக் கட்சிகள் ஆழமாக உரையாடி வருகின்றன.

வவுனியாவில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழரசுக் கட்சியோடு உடன்படிக்கைக்கு வந்திருப்பதாகத் தெரிகிறது. அது போல எல்லாச் சபைகளிலும் தமிழ்த் தேசியக் கட்சிகள் அல்லாத கட்சிகள் ஆட்சியைக் கைப்பற்றுவதைத் தடுப்பது என்ற அடிப்படையில் தமிழ்த் தேசிய நிலைப்பாட்டைக் கொண்ட கட்சிகள் ஐக்கியப்படலாம். அல்லது பகை தவிர்ப்பு உடன்படிக்கைக்குப் போகலாம்.

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைமையிலான தமிழ்த் தேசியப் பேரவை ஒரு கொள்கை விடயத்தைத் தொடர்ச்சியாக சுட்டிக்காட்டி வருகிறது. தீர்வு விடயத்தில் தமிழரசுக் கட்சியின் சுமந்திரன் அணி “ஏக்கிய ராஜ்ய”வைக் கைவிட வேண்டும் என்று அந்தக் கூட்டு கேட்கின்றது. இறுதித் தீர்வு என்று வரும்பொழுது ஒற்றையாட்சிக்கு உட்பட்ட எந்தத் தீர்வையும் ஏற்றுக் கொள்ளக் கூடாது. அது தொடர்பான சமரசங்களுக்கும் இடமிருக்கக் கூடாது. ஆனால் ஒரு தீர்வை நோக்கிய யாப்புருவாக்க முயற்சிகள் இப்போதைக்குத் தொடங்குமா?

எப்பொழுது தொடங்கும் என்று தெரியாத ஒரு யாப்புருவாக்க முயற்சியை நோக்கி ஐக்கிய முயற்சிகளை ஒத்தி வைப்பதா? அல்லது உடனடிக்கு உருவாக்கப்பட வேண்டிய உள்ளூராட்சி சபைகளை நோக்கிச் சிந்திப்பதா? அது போல மாகாண சபைத் தேர்தல்களை நோக்கிச் சிந்திப்பதா? எது சரி?

இரண்டுமே சரி. தீர்வு முயற்சிகளை நோக்கி நீண்டகால நோக்கில் கொள்கைத் தெளிவோடு இருக்கவேண்டும். அதேசமயம் தமிழ்த் தேசியக் கட்சிகள் அல்லாத கட்சிகள் உள்ளூராட்சி சபைகளைக் கைப்பற்றுவதைத் தடுப்பது என்பதும் தமிழ்த் தேசியக் கொள்கையின் ஒரு பகுதி தான். பொது எதிரிக்கு எதிராக ஒன்றிணைவது. உள்ளூராட்சி சபைத் தேர்தல் முடிவுகளின்படி வரக்கூடிய மாகாண சபை தேர்தலில் என்.பி.பி .புதிய சவால்களை ஏற்படுத்தக்கூடும். அதை நோக்கித் தமிழ்த் தேசியக் கட்சிகள் ஆழமாக உரையாட வேண்டும். பொது எதிரிக்கு எதிரான தேசிய ஐக்கியத்தைப் பற்றி ஆழமாக உரையாட வேண்டும். இல்லையென்றால், அதாவது தமிழ்த் தேசியக் கட்சிகள் பிரிந்து நின்றால், உள்ளூராட்சி சபை தேர்தல்களில் விழுந்தது போல வாக்குகள் விழுமாக இருந்தால், அல்லது வாக்குகள் விழாமல் போனால், அது என்.பி.பி.க்கு அனுகூலமாக முடியலாம்.

என்.பி.பி.க்கு தமிழ் மக்களின் ஆணை கிடைக்குமாக இருந்தால் தீர்வு விடயத்தில் அவர்கள் தமிழ்த் தேசியக் கட்சிகளைப் பொருட்படுத்தப் போவதில்லை. எனவே, என்.பி.பி.க்கு மக்கள் ஆணை கிடைக்கக்கூடாது என்பதும் ஒற்றையாட்சிக்குட்பட்ட தீர்வைத் தடுப்பதற்கு அவசியமான உத்திகளில் ஒன்றுதான். இந்த அடிப்படையில் தமிழ்த் தேசியக் கட்சிகள் சிந்திக்கவேண்டும்.

தேர்தல்களை நோக்கி அதாவது உள்ளூராட்சி சபைகளை நிர்வகிப்பது என்ற அடிப்படையில் ஐக்கியத்தைப்பற்றி பேச முடியாது என்ற நிலைப்பாடு சரி. அதேசமயம் தேர்தல்களின் மூலம் தேசிய மக்கள் சக்தி மக்கள் ஆணை பெறுவதைத் தடுக்கவும் வேண்டும் என்பதும் மிக முக்கியம். எனவே ஐக்கியத்திற்காக உழைக்கும் போது இறுதித் தீர்வு தொடர்பாக தெளிவான திட்டவட்டமான கொள்கைகளை முன்வைத்து உடன்படிக்கைகளை எழுதலாம். எது வேண்டாம் என்று கேட்பதற்குப் பதிலாக இதுதான் வேண்டும்; இது அல்லாத வேறு எந்தத் தீர்வை நோக்கியும் போக முடியாது; அந்தத் தீர்வு வெளிப்படைத்தன்மை மிக்கதாக இருக்க வேண்டும்; உச்ச நீதிமன்றத்தில் வழக்குப் போட்டால், அது ஒற்றையாட்சிப் பண்புடையது என்று உச்சநீதிமன்றம் பொருள் கோட முடியாததாகவும் இருக்க வேண்டும் என்பதனை எழுத்தில் போட்டால், அதை மீறும் கட்சியை மக்கள் முன் அம்பலப்படுத்தலாம்.

இப்போதுள்ள கட்சி நிலைவரங்களின்படி, உள்ளூராட்சி சபை நிர்வாகத்தை நோக்கியோ அல்லது மாகாண சபைத் தேர்தல்களை நோக்கியோ முழுமையான தமிழ் ஐக்கியத்துக்கு வாய்ப்புகள் இருப்பதாகத் தெரியவில்லை.

கடந்த வாரக் கட்டுரையில் கூறப்பட்டது போல, ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழரசுக் கட்சியை நோக்கி அதிகம் சாய்வதாகத் தெரிகிறது. சங்குச் சின்னத்தின் கீழ் பொது வேட்பாளரை ஆதரித்தவர்களுக்கு எதிராக விளக்கம் கேட்டு கடிதம் அனுப்பும் ஒரு கட்சி, அதே சங்குச் சின்னத்தின் கீழ் பொது வேட்பாளரை ஆதரித்த கட்சிகளோடு உடன்பாட்டுக்கு வரத் தயாராக இருக்கிறது. அதுதான் தேர்தல் அரசியல். இதன்மூலம் தமிழ்த் தேசியப் பேரவையைத் தனிமைப்படுத்தலாம் என்றும் அவர்கள் சிந்திக்கக் கூடும்.

எதுவாயினும், இன அழிப்பை நினைவு கூரும் ஒரு காலகட்டத்தில், தியாகிகளையும் கொல்லப்பட்டவர்களையும் நினைவுகூரும் ஒரு காலகட்டத்தில், உயிரைக் கொடுத்தவர்களின் ஆத்மாக்களை மகிழ்விக்க கூடிய ஒரு முடிவை எடுக்கா விட்டாலும் பரவாயில்லை ஆகக்குறைந்தது மாகாண சபைத் தேர்தலில் என்பிபிக்கு தமிழ் மக்களின் ஆணை கிடைப்பதைத் தடுப்பதற்காவது ஏதாவது செய்ய வேண்டும்.

# மலையகத்துக்கென ஒரு பல்கலைக்கழகம் கனவு நனவாகுமா?

சிவபாலன் ரக்ஷனா
ஊடகக் கற்கைகள் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்



மலையகமக்கள் எனும் சமுதாயம் உருவாகி பல ஆண்டுகள் ஆகிவிட்டன. பொருளாதார ரீதியில் பெரிய அளவில் முன்னேற்றம் காணாத மலையகம், தற்போது துளிர்விடும் கொழுந்து போல் கல்வித்துறையில் முன்னேற்றம் கண்டு வருகின்றது. கல்வியின் பெறுமதியும் அவசியமும் பெற்றோர் மத்தியிலும் மாணவர் மத்தியிலும் பெருமளவில் உணரப்பட்டுவருகின்றது. தற்போதைய மலையகத்தின் தாகமாக கல்வியே காணப்படுகின்றது. கல்வித்துறை சார்ந்த அதிபர்கள், ஆசிரியர்கள், மாகாண வலயக் கல்வி அதிகாரிகள் எனப் பல கல்வியியலாளர்களும் மலையகத்தைப் பெரும் மாற்றங்களுடன் காண்பிக்கும் கனவோடு செயற்படுகின்றார்கள். அதன் பலனாக, கடந்த சில வருடங்களாக மலையகம் சார்ந்து பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவாகும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டு வருகின்றமையை அவதானிக்கமுடிகின்றது. ஆனாலும், அவ்வாறு தெரிவாகும் அந்தச் சில மாணவர்களால் கல்வியைத் தொடர முடிகின்றதா என்பதே கேள்விக்குறியாக உள்ளது.

மலையகக் கல்வியின் முன்னேற்றத்திற்கு மிகப்பெரிய அடித்தளமாக நல்லாசிரியர்கள் உருவாகவேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தில், தோட்டப்புறத் தொழிலாளர்களின் பிள்ளைகளுக்காகப் பத்தன என்ற இடத்தில் "ஸ்ரீபாத தேசியக் கல்வியியற் கல்லூரி" உருவாக்கப்பட்டது. இதைவிட மலையகத்தின் கண் என விளங்கும் "கொட்டகலை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி" பல தரப்பினருக்காகச் சிறப்பாக இயங்கிவருகின்றது. இவை மூலம் மலையகச் சமுதாயம் மிகுந்த பயனடைந்து வருகின்றது. அதைப் போல, இதன் அடுத்தகட்ட நடவடிக்கையாக மலையகத்தில் ஒரு பல்கலைக்கழகத்தை உருவாக்குவதன் மூலம் பட்டதாரிகள் விளையும் பூமியாக மலையக மண்ணை மாற்றவேண்டும் என்பதே பலரதும் அவா.

இந்திய வம்சாவளியினரான மலையகத் தமிழர்களை ஒரு தனி இனமாக அரசாங்கம் வகைப்படுத்தி உள்ள போதும், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் புள்ளிவிபரப் புத்தகத்தில் அவர்கள் தனி இனமாக அங்கீகரிக்கப்படவில்லை. வருடாந்தம் பல்கலைக்கழகங்களுக்கு 2,89,000 வரை மாணவர்கள் சேர்க்கப்படும்போதும், அவர்களில் மலையக மாணவர்களாகச் சேர்க்கப்படுபவர்களின் எண்ணிக்கை 120 தொடக்கம் 150 வரை மட்டுமே. இந்த எண்ணிக்கை மொத்த சதவீதத்திற்கும் குறைவாகும். இவர்களில் மிகக் குறைவானவர்களே பெருந்தோட்டத் தொழிலாளர் சமூகத்திலிருந்து பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவாகின்றனர்.

மலையக மாணவர்களுக்கு வாய்ப்பளிக்கும் வகையில் மலையகத்தில் ஒரு பல்கலைக்கழகம் இருந்தால்தான், இங்குள்ள மாணவர்களுக்குப் பல்கலைக்கழகக் கல்வியின் பெருமதிப்பும், பட்டத்தின் தேவையும் புரியும். பெருந்தோட்டத் தொழிலாளர் சமூகத்திற்கு ஓர் பல்கலைக்கழகம் எனும் தலைப்பில் மலையகத்திலுள்ள பல புத்திஜீவிகளுடன் உரையாடியபோது, மலையகத்திற்கோர் பல்கலைக்கழகம் வேண்டும் என்பது பல மலையக மக்களின் விருப்பமாகவும், எதிர்பார்ப்பாகவும் இருப்பதை உணரமுடிகின்றது. இவ்வாறு, அனைத்து மலையக மக்களின் உள்ளங்களிலும் சொப்பனமாக உலாவிக்கொண்டிருக்கும் இந்த எண்ணம் வெறும் கனவாக அல்லாமல் நினைவாக மாறும் என நம்பிக்கை கொள்கிறோம். கல்விச் செயற்பாடுகளில் அநேகமான செயற்றிட்டங்களுக்கு ஊக்கமளித்துவருகின்ற இந்த அரசாங்கம், மலையக மக்களுக்கென தனியான தனித்துவமான, ஒரு பல்கலைக்கழகத்தை அமைத்தால், குன்றின் மேலிட்ட விளக்காக மலையக மக்களும் கல்வியில் சுடர்விட முடியும்.

## கற்கண்டு 6

## (Cat Gun - –Do or Die) ஓடை

கதை: இ.சு.முரளிதரன்
வரைகலை - மகேந்திரன் வினித்

திருப்பங்கள் நிறைந்த சித்திரத் தொடர்கதை





பப்பி 'பிஸ்கற்' பெட்டியைத் திறந்து பார்த்தது.

சஞ்சீவி
18 மே 2025

# எங்கட அப்பாவிச் சனத்துக்கு...!





## அவசரமா ஒரு கடுதாசி

எல்லாருக்கும் வணக்கம்.

எல்லாரும் முள்ளிவாய்க்கால் காலத்து நினைவுகளிலை இருக்கிறம். கஞ்சியைக் காய்ச்சிக் குடுக்கிறம், குடிக்கிறம். வருசத்திலை ஒரு கிழமையாவது எங்கட இனத்துக்கு நடந்ததை நினைக்கிறம். இண்டைக்குக் காலமை விடியிற நேரம். ஒரு மூண்டு மூண்டரை இருக்கும். ஒன்றிரண்டு சேவல்கள் கூவினதா ஞாபகம். அதுவும் கனவோ தெரியாது.

ஒரே ஆரவாரம். திடீரெனத் தலைவர் வந்து என்ரை முன்னாலை நிண்டார். உடம்பிலை உரோமங்கள் எல்லாம் ஒருக்காக் குத்திட்டு நிண்டுது. சடாரென எழும்பி நிக்கப் பாத்தன்.'இரும்... இரும்' எனக் கையைக் காட்டிக் கொண்டு என்ரை முன்னாலை இருந்த அந்தப் பிளாஸ்ரிக் கதிரையிலை இருந்தார். 'தேயிலைத் தண்ணி தரட்டே?' கேட்டன். நாக்குப் பிறழத் துவங்கிவிட்டது. 'ஒருக்கா இரும் ...உம்மோடை கொஞ்சம் பேச வேணும்' எண்டு பேச்சைத் துவங்கினார்.

'மே 18. இறந்த ஆக்களை எல்லாம் நினைவிலை நிறுத்தி அஞ்சலி செய்யிறியள். கஞ்சியையும் காச்சிக் குடுக்கிறியள். சந்தோஷம். ஆனால் இறந்துபோன அந்த ஆக்களின்ரை நோக்கத்தையும், சிந்தனையையும், தியாகத்தையும் நீங்கள் செவ்வையா விளங்கிக் கொண்டதாக இல்லை. அவையள் என்ன கார் பஸ்ஸிலை அடிபட்டோ இல்லாட்டி தேவை இல்லாத வேலைபார்த்தே செத்தவை?

அவையளிட்டை ஒரு எதிர்பார்ப்பு இருந்தது. தான் சார்ந்த சமூகம் விடிவு பெற வேணும் எண்ட எண்ணம் இருந்தது. எங்கடை இனம் காலகாலமாக சமூக, அரசியல், பண்பாட்டு தளங்களிலை பெரும் பாதிப்பை எதிர்கொள்ளுகினம் அதாலை அவைக்கு ஒரு விடியலைத் தேடிக் குடுக்க வேணும் அது ஒரு தற்காலிக விடுதலையாக இராமல் ஒரு நிரந்த தீர்வாக இருக்க வேணும் எண்டதுதான் அவையளின்ரை ஆசை. எங்கடை முன்னோர் அதுக்காகப் பல வருஷங்களாக சாத்வீகப் போராட்டங்கள், சத்தியாக் கிரகங்கள், கதவடைப்புகள் எண்டு பலதையும் செய்து போராடி வந்தவை எண்டது வரலாறு. யாழ்ப்பாண நூலகம் எரிப்பைப் போலை எப்ப அவை அடிமடியிக்கை கைவைக்கத் துவங்கிச்சினமோ அப்ப ஒரு முடிவை எடுத்தவை. பேசுற மொழியை மாத்த வேணும் எண்ட முடிவிலைதான் ஆயுதத்தைக் கையிலை எடுத்தவை.

என்னத்தைச் சொன்னாலும் என்னோடை நிண்டவை எல்லாரும் ஒரு இலக்கிலைதான் கதைச்சவை . அவையின்ரை எண்ணம் எல்லாம் எங்களுக்கு விடுதலை வேணும். அந்த விடுதலையை ஒரு சமூகமாற்றத்தோடை கொண்டு வரவேணும். அந்த விடுதலைக்குப் பிறகுவாற சமூகம் ஒரு ஆரோக்கிய சமூகமாக மட்டுமில்லை உலக வரலாற்றிலை ஒரு முன்னுதாரணமான சமூகமாக விளங்க வேணும் எண்டதிலை நாங்கள் ஆர்வமாக இருந்தனாங்கள்.

எங்கடை இயக்கத்திலை இருந்து போராடிச் செத்த ஒவ்வாரு போராளியும் ஒரு விதத்திலை அக்கறையாக இருந்தவை. விடுதலைக்குப் பிறகு வாற எங்கடை சமூகத்திலை நல்ல பழக்க வழக்கம் இருக்க வேணும். பண்பாடு சிறப்பாக இருக்க வேணும். மனித நேயம் கொடிகட்டிப் பறக்க வேணும். சுய பொருளாதார விருத்தி இருக்க வேணும். பல் தேசியக் கம்பெனிகளுக்கும் அவையின்ரை பொருட்களுக்கும் அடிமையாகப்பிடாது. உலக நாணயச் சபை வந்து எங்களோடை நாட்டாமை விடக் கூடாது. போதை வஸ்து எண்டதுக்கு இடமிருக்கப்பிடாது. பாலியல் துஷ்பிரயோகம் இருக்கப்பிடாது. அதுக்குத்தான் அதுக்குரிய தண்டனையளை வலுவாகக் குடுத்தனாங்கள். பெண்பிள்ளையள் நடு இரவிலையும் சுதந்திரமாகப் போய் வரவேணும். அதுக்குரியதாக சமூக விழிப்புணர்வை ஏற்படுத்த வேணும். எல்லா வழிகளிலும் சமூகத்தை ஆசுவாசப் படுத்த வேணும்.

அதுக்குத்தான் எல்லாத் துறைகளையும் வளர்த்தனாங்கள். ஒரு பக்கம் துவக்கைத் தூக்கிக் கொண்டு திரிய, மற்றப் பக்கம் எங்களுக்குரிய சினிமாவையும் வளத்தனாங்கள். நாட்டுக் கூத்தையும் செய்தனாங்கள். நாட்டுக் கூத்துக்குள்ளாலை விடுதலையைப் பற்றியும் பேசினம். எங்களுக்குரிய தொழில் நுட்ப விஞ்ஞானத்தையும் வளர்த்தம். அதுக்குள்ளாலை ஏரோப் பிளேனையும் செய்து காட்டி எதிரியையும் வெருட்டினம். என்ன அன்னமுத்து அமைதியாயிருக்கிறீர்? 'எண்டு அவர் என்னைக் கேட்டார். எனக்கு கதைக்கேலாமல் போச்சு. அவர்தான் பேந்தும் கதைச்சார். 'ஏதோ கேவலமானவங்கள் எல்லாரும் ஒண்டாச் சேந்து எங்களை அழிச்சுப் போட்டாங்கள். அழிச்சதும் பத்தாமல் இரசாயனக் குண்டுகளைப் போட்டு எங்களைச் சின்னாபின்னப் படுத்தியும் போட்டாங்கள். அதாலை சமூகத்திலை பல பிறழ்வுகள் நடந்துபோச்சு. இன்னும் நடந்து கொண்டிருக்கு.

இப்ப எங்களுக்குதேவை, முள்ளிவாய்க்காலை வைச்சு அரசியல் செய்யிறதில்லை. முள்ளிவாய்க்கால் அனர்த்தத்தை நினைவுபடுத்திற அதேவேளை அதிலை பாதிக்கப்பட்ட சமூகத்தை அந்த பாதிப்பிலை இருந்து வெளியாலை கொண்டு வரவேணும். அதுக்குரிய நடவடிக்கையையும் எடுக்க வேணும்.

ஆனபடியாலை இந்த முள்ளிவாயக்காலை கஞ்சி ஊத்திப் போட்டுமறந்துபோகாமல் அந்த வாரத்திலை சமூகத்தை ஆற்றுப்படுத்திற வழிவகைகளையும் ஆராயுங்கோ. அதற்கான செயற் திட்டங்களை ஆரம்பியுங்கோ. ஏனெண்டால் முள்ளிவாய்க்காலிலை செத்துப் போன ஒவ்வொருவரினதும் கனவு சுய நிர்ணயமுள்ள ஆரோக்கியமான இறைமையுள்ள சுய பொருளாதாரத்திலை தங்கியிருக்கக் கூடிய சமூகம் மட்டுந்தான். அந்தக் கனவை நிவைவேற்றக் கூடியது என்னவோ அதைச் செய்யுங்கோ அன்னமுத்து அண்ணை. நான் போட்டுவாறன் 'எண்டு சொல்லிப்போட்டு அவர் போயிட்டார். காலை ஐஞ்சரை இருக்கும், பாண் வாகனம் ஒண்டு பாட்டைப் போட்டுக் கொண்டு வந்தது. அப்பதான் எனக்குத் தெரியும் நான் கண்டது கனவு எண்டு.

*இப்படிக்கு*
*கனவால் மீள முடியாமல் தவிக்கும்*

அப்பாவி அன்னமுத்து.

# உணர்ப்தினம்

○ இராகவன்

பாகம் 3

இப்ப வடமராட்சி வலயக்கல்வி அலுவலகமிருக்கிற றோட்டால போகேக்குள்ளை ஒரு செங்குத்தான இறக்கம் வரும். அந்த இறக்கத்தில வலப்பக்கந் திரும்பினால் அது அறுபது பாகைக் கிணத்தடிக்குப் போகும். இடப்பக்கந் திரும்பினால் ஒரு நூறு மீற்றருக்குள்ள உதயன் புத்தக நிலைய உரிமையாளர் இ.து. குலசிங்கத்தின்ர வீடிருக்கு. றோட்டோட இடப்பக்கமாச் சம்பு நாவல் மரம் சடைச்சு நிக்கிற வீடு. வடமராட்சியில இலக்கிய ஈடுபாடுள்ள எவருக்கும் நல்லாத் தெரிஞ்சிருக்கிற வீடு அது. இலக்கியப் பறவைகளுக்கான வேடந்தாங்கல் எண்டும் அதைச் சொல்லலாம்.

குலசிங்கம் ஈழத்தின் இலக்கியச் சூழலில் மிக முக்கியமான ஒராள். எண்பதுகளில் தமிழகத்தில் வெளிவந்துகொண்டிருந்த சிற்றிதழ்களை இங்கே அறிமுகம் செய்தவர். வார இறுதிநாள்களில் தனது வீட்டிலேயே "அறிவோர் கூடல்" என்ற இலக்கியச் சந்திப்பை ஒழுங்குசெய்து நடத்திவந்திருக்கிறார். 2009,2010 காலப்பகுதிகளில் நடந்த இரண்டு அறிவோர் கூடல் நிகழ்வில் நான் கலந்துகொண்டு எனது குறும்பட அனுபவம் மற்றும் சிரித்திரன் சுந்தரின் கேலிக் கருத்தோவியங்கள் பற்றிப் பேசியிருக்கிறேன். இப்படியொரு நாள் நடந்த அறிவோர் கூடலில் பங்குபற்றிவிட்டுச் சென்ற எழுத்தாளர் நெல்லை க.பேரன் (கந்தசாமி பேரம்பலம்) அன்றிரவு பலாலியிலிருந்து ஏவப்பட்ட எறிகணை வெடித்துக் குடும்பத்தோடு முடக்காட்டில் காலமான சோகச்சம்பவத்தைக் குலசிங்கம் தளதளப்போடு இப்போதும் சொல்வார்.

குலசிங்கம் நளபாகத்தில் கைதேர்ந்தவர். விதவிதமாக நல்ல ருசியோடு சமைப்பார். 2009 மே தொடங்கி 2014 ஜூன் வரை நான் பருத்தித்துறையில் கடமையாற்றினேன். மதியபோசன இடைவேளையின்போது நான் குலசிங்கம் வீட்டிற்குச் செல்வதை வழக்கமாக்கிக்கொண்டேன். அங்கு சாப்பிடுவது எனது நோக்கமல்ல. அவருடன் பலதும் பத்தும் கதைப்பதுதான் எனது நோக்கம். ஆனால் அவர் நான் சென்றதுமே, "என்ன சாப்பிடப்போறாய்? சுடச் சுடச் சோறிருக்கு. ஆறிப்போன புட்டிருக்கு. பால்கொழுக்கட்டையிருக்கு" எனக்கேட்டு அடுக்கிக்கொண்டே போவார். அதோடு புளித்தண்ணி எண்டு ஒரு பானம் செய்து தருவார். அதை நான் அங்கைதான் முதன்முதலாக் குடிச்சனான். வழமையா எல்லாரும் தேசிக்காய்த்தண்ணிக்குச் சீனி போட்டுக் கரைப்பினம். ஆனால் குலசிங்கம் உப்புப் போட்டுக் கரைச்சு அந்தப் புளித் தண்ணியைத் தயாரிப்பார். அது வெயிலுக்காலை தாகத்தோட போற எனக்கு தேவாமிர்தமாயிருக்கும்.

29

2010 பிற்பகுதியில என்ர வீட்டாக்கள் முழுப்பேரும் 'யூ.கே'க்கு ஒரு ரூர் போச்சினம். வேலைக்கு லீவு போட்டுட்டு ரூர் போறதிலை எனக்கு உடன்பாடில்லாததால நான் மட்டும் போகேல்ல. வீட்டுக்காரர் டிசெம்பரிலதான் ஊர் திரும்பிச்சினம். அந்தளவு காலமும் எனக்குக் குலசிங்கம் வீட்டிலதான் மூண்டுவேளைச் சாப்பாடும். நான் எந்தளவுக்கு மறுத்தும் அந்தாள் கேட்கேல்லை. எனக்கெண்டொரு சாப்பாட்டுப் பெட்டி எடுத்து அதுக்குள்ள முட்டமுட்டச் சாப்பாடு போட்டுக் கட்டி றெடியா வைச்சிருப்பார். போன உடன தூக்கித்தருவார். இப்பவும் அந்தச் சாப்பாட்டுப்பெட்டி என்னட்டயிருக்கு. இந்த வகையில என்னால் குலசிங்கத்தை எந்தக் காலத்திலும் மறக்கேலாது. குலசிங்கத்துக்கும் தமிழ்நாட்டின் முக்கியமான பதிப்பாளர் எஸ்.ராமகிருஷ்ணனுக்கும் வலு நெருக்கமான சிநேகிதமிருந்தது. அவர் "க்ரியா" பதிப்பகத்தைச் சிறப்பாக நடத்திவந்ததால அவரைப் பரவலாக இலக்கியக்காரர் எல்லாம் "க்ரியா" ராமகிருஷ்ணன் எண்டுதான் அழைப்பினம்.

2006 ஓகஸ்ட் பதினோராந்திகதி 'ஏ9' வீதி மூடப்பட்டு யுத்தம் தொடங்கினாப்போலை யாழ். குடாநாடெங்கும் ஊரடங்குச் சட்டம் போட்டது உங்களுக்கெல்லாம் நல்லா ஞாபகமிருக்கும். ஒரு கிழமை முழுக்க அமுலிலயிருந்த ஊரடங்குச் சட்டத்தைப் பிறகு படிப்படியாத் தளர்த்திற நடைமுறையொண்டும் வந்தது. அப்ப நான் யாழ்ப்பாண டீ.எஸ். ஒப்பீசில வேலைசெய்துகொண்டிருந்தனான். ஊரடங்குச்சட்டம் எடுக்கிறது முதல்ல ஒரு மூண்டு மணித்தியாலமாயிருக்கும். அதுவும் பேப்பரிலதான வரும். என்னைக் கரவெட்டி டீ.எஸ். ஒப்பீசில சைன் பண்ணச் சொல்லிச்சினம். நான் அங்கை போய்ச் சைன் பண்ணிப்போட்டு நேரை குலசிங்கம் வீட்டுக்குத்தான் ஆத்துப் பறந்து போவன்.

(தொடரும்)